படைப்பு

ஊற்று-4 | நதி-3 | ஜூலை-2021 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## “மகிழ்வற்ற மானுட துயரம் மிகுந்த முகடுகளுக்குள் வசிக்கும் எனக்குக் கவிதைதான் அடையாளம்..”

- கவிஞர் ஷக்தி அவர்களுடனான நேர்காணல்



- நகுலன் எழுத்துக்களில் ஆன்மாவின் தேடல்
  - ந.சிவநேசன்



- மூளையில் ஒட்டிக்கொண்ட தோட்டா
  - கவிஜி



- பன்முக ஆளுமை - நகுலன்
  - முனைவர் பொ.திராவிடமணி

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-3 | ஜூலை 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **“மகிழ்வற்ற மானுட துயரம் மிகுந்த முகடுகளுக்குள் வசிக்கும் எனக்குக் கவிதைதான் அடையாளம்..”**
  - கவிஞர் ஷக்தி அவர்களுடனான நேர்காணல் -பக். 05
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 16
- **நகுலன் எழுத்துக்களில் ஆன்மாவின் தேடல்**
  - ந.சிவநேசன் -பக். 22
- **கெத்து வாத்தியம் / ஜல்லரி (சல்லரி)**
  - கோ.லீலா -பக். 27
- **மனநிலைக் குறிப்புகள் - 11**
  - ஆதிரன் -பக். 33
- **‘நவீனத் தமிழ்ச் சித்தர்’ நகுலன்**
  - தங்கத் துரையரசி -பக். 38
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 41
- **மூளையில் ஒட்டிக்கொண்ட தோட்டா**
  - கவிஜி -பக். 44
- **பன்முக ஆளுமை - நகுலன்**
  - முனைவர் பொ.திராவிடமணி -பக். 47
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 57
- **நகுலனுக்குள் நகுலன்கள்**
  - கு.ஜெயபிரகாஷ் -பக். 62

## சிறுகதைகள்


- **ஒரு ராத்தல் இறைச்சி**
  - நகுலன் -பக். 30
- **அவள் வழி**
  - ந.பத்மகுமாரி -பக். 51


## கவிதைகள்


- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 11**
  - ஜின்னா அஸ்மி -பக். 26
- **ஊர்மிளை**
  - கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் -பக். 40
- **இனியவன் காளிதாஸ்** -பக். 49
- **மகிழினி காயத்ரி** -பக். 49
- **நல முத்துகருப்பசாமி** -பக். 49
- **தீபிகா நடராஜன்** -பக். 50
- **ரத்னாவெங்கட்** -பக். 50
- **பிரபுசங்கர்_க** -பக். 50
- **ஆன்டன் பெனி** -பக். 63

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' முப்பத்தொன்பதாம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

கவிஞர் விக்ரமாதித்யனுக்கு எழுத்தாளர் நகுலன் எழுதிய கடிதங்கள் நம் தகவு இதழில் தொடர்ந்து வெளிவந்தன. நகுலன் நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்நேரத்தில் இதனை மகிழ்வுடன் நினைவுகூரும் தகவு அக்கடிதங்களை வெளியிட அனுமதி அளித்து அக்கடிதங்கள் தொடர்பான விளக்கங்களையும் அளித்து உதவிய கவிஞர் விக்ரமாதித்யனுக்கு மனப்பூர்வமான நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. அந்தக் கடிதங்கள் நகுலன் வாழ்வு குறித்த சில தோற்றங்களை நம் முன் காட்டுகின்றன. நகுலன் நண்பர்களுடன் நட்பைப் பேண மிகவும் விரும்பியிருக்கிறார். நண்பர்களின் சிறந்த படைப்பை இதழ்களில் கண்டுவிட்டால் உடனடியாகக் கடிதம் எழுதிப் பாராட்டுகிறார். அதே சமயம் எவ்வளவு நெருக்கமான நட்பாக இருந்தாலும் இலக்கிய அபிப்பிராயத்தில் ஒருவிதச் சாய்வும் இருக்கக்கூடாது என்று உறுதியாக நினைக்கிறார். அந்நண்பர்களின் படைப்புகள் எவ்விடத்தில் பலவீனப்படுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். நண்பர்களின் தனிப்பட்ட மனநிலைப் பிரச்சனைகளுக்கு மென்மையான அறிவுரைகளை அளிக்கிறார்.

'இருந்து தொலைக்கலாம்' என்பதுதான் அக்காலகட்ட நகுலனின் வாழ்க்கை குறித்த பார்வையாக இருக்கிறது. கடிதம் எழுதுவதற்குக் கூட நேரம் வாய்க்காத வேலைப்பளுவும் அறுபது வயதிலும் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் அவரை வதைத்திருக்கின்றன. தீவிரமான எழுத்துப்பணி ஒருபுறம், எழுத்துலகிலிருந்து விலகி இருக்க விரும்பும் மனநிலை ஒருபுறம் எனத் தத்தளிப்பில் இருந்திருக்கிறார். 'நம்மையும் மீறித்தான் விஷயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன' என்பதான தத்தளிப்பு அவரது கடிதங்களில் தென்படுகிறது.

தமிழ்ப் படைப்புலகம் பற்றிய பரந்துபட்ட சித்திரத்தை அவரது கடிதங்கள் உருவாக்குகின்றன. கவிதையில் நுட்பம் வேண்டும் என்பதைத் தன் கட்சியாகக் கூறுபவர் தமிழில் தரமாக எழுதுபவர்கள் எல்லாருமே கசப்பான அனுபவங்களுக்குத்தான் ஆளாகியிருக்கிறார்கள் என்ற குரலை ஒலிக்கவிடுகிறார். எழுதி வாழ்க்கை நடத்திவிட முடியாது என்ற புரிதலைக் கடிதங்களில் உணர்த்தியபடி இருக்கிறார். தமிழின் ஆகச்சிறந்த ஒரு படைப்பாளரின் ஒரு கால கட்ட வாழ்வைச் சுமந்திருக்கின்றன அக்கடிதங்கள் என்பதைத் தகவு பெருமிதத்துடன் உணர்கிறது.

இந்த மாத இதழில் கவிஞர் ஷக்தி அவர்களுடைய நேர்காணல் இடம்பெற்றுள்ளது. மேலும் கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

– ஆசிரியர்

● வீரசோழன் க.சோ.திருமாவளவன்



# “மகிழ்வற்ற மானுட துயரம் மிகுந்த முகடுகளுக்குள் வசிக்கும் எனக்குக் கவிதைதான் அடையாளம்..”

**– கவிஞர் ஷக்தி அவர்களுடனான நேர்காணல்**

உப்பு காய்ச்சும் நிலங்களிலிருந்து சமவெளிப் பகுதிக்கு இடம்பெயர்ந்த பிறகு விடாத வறுமையிலும் மருத்துவப் படிப்பு முடித்து, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது அறக்கட்டளை மூலம் உதவி, விளிம்பு நிலை மனிதர்களைக் காப்பாற்றும் இதயமுள்ள மனிதநேயர். அம்மா அறிமுகப்படுத்திய வாசிப்பு, ஒவ்வொரு படிநிலையிலும் எதிர்கொண்ட வாழ்க்கைப் போராட்டம், அடர்த்தியான எழுத்து எனக் காலம் நம் முன் அற்புதமான கவிஞனை, யுவபுரஸ்கார் நாயகனைத் தந்து இருக்கிறது.

2020ஆம் ஆண்டுக்கான யுவ புரஸ்கார் விருது பெற்ற கவிஞர் ஷக்தி உடனான சிறு உரையாடல்..

### எப்போது எழுதத் தொடங்கினீர்கள்?

பள்ளிக் காலங்களில் என நினைக்கிறேன். அப்பொழுதிலிருந்து வாசிப்பும் எழுத்தும் கூடவே வருவதாக உணர்கிறேன். ஒரு வலியை அதன் ஜீவனோடு உணரும் ஒரு பக்குவத்தை அடைந்த நாட்களிலிருந்து எழுதிய கவிதைகள். இதுதான் கவிதை, இதுதான் நாம் எழுத வேண்டியவை எனச் சேகரித்து வந்ததை இப்பொழுதும் நேரம் கிடைக்கையில் வாசித்துப் பார்க்கிறேன். தஞ்சையின் வட்டார மொழிக்கும் பாமர சொற்களுக்கும் ஒரு அழகு உண்டு. அந்த அழகியலோடு எழுதிப் பார்த்த கவிதைகள் பள்ளிக் காலங்கள் தொட்டு இன்னமும் ஞாபகத்தில் இழையோடிய வண்ணம் இருக்கின்றன. வாழ்வு தரும் அனுபவங்களுடன் வலியும் நடந்தோட தொடங்கியதிலிருந்து இந்தக் கவிதைகள்தான் என்னைத் தத்தெடுத்துக்கொண்டன.

### உங்களுடைய 'அபோர்ஷனில் நழுவிய காரிகை' மருத்துவம் சார்ந்த கவிதைத் தொகுப்பு. முற்றிலும் கதிரியக்கம், புற்றுநோய் சம்பந்தமான சொல்லாடல்களோடு அதைச் சிதையாமல் எழுதுவது சவாலாக இருந்ததா?

சவால்களாகத்தானிருந்தது. நோய், உடல் உறுப்புகள் அல்லது நோய்க்கூறுகள் உள்ளிட்ட அதைச் சார்ந்த சொற்களைத் தமிழ்ப்படுத்துவதில் பெரும் சிரமம் இருந்தது. நிறைய கால அவகாசம் தேவைப்பட்டது.

தினமும் புற்றுநோய்களின் பிடிப்பில் ஆரம்ப இறுதிகட்ட நோய்மை பிடித்த மனிதர்களோடு வாழ்ந்து பழகி.. அவர்களின் தனித்த பொருளாதார வாழ்வில் சிரமங்களை உணர்ந்து அவர்களுக்காக நானும் கூட அலையவேண்டி இருந்தது. அவர்களின் இறுதிக் காலங்களில் துரதிர்ஷ்டவசமாக உடனிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. சில சந்தர்ப்பங்களில் வாய்த்த அல்லது ஏற்படுத்திக்கொண்ட இப்பிணைப்பின் வழியாக நிறைய உணர முடிந்தது. அந்தத் தவிப்புடனும் அந்த எதார்த்தத்தில் இருந்து விலகி இருக்க விரும்பியும் ஒரு மன அழுத்தத்திற்கு உள்ளாகி இன்னும் கூர்மையாகி முடங்கிப் போனேன். கடவுளின் மீதும் வாழ்வின் மீதும் தன் உறவுகளின் மீதும் தன் பொருளாதாரத்தின் மீதும் முன்வைத்த நம்பிக்கைகள் நீர்த்துப்போவதை நான் கண்டிருக்கிறேன்.

இந்தக் கேள்விக்கு மிகச் சரியான பதிலாக நான் ஒன்று சொல்வேன். இந்த வாழ்வு சில நோய்மைகளைப் பரிசளித்து மரணத்திற்கு நிர்பந்தத்தைத் தந்து கொண்டிருக்கும்போது அவனது சிகிச்சையாளனாக என்னால் பெரிதாக எதையும் செய்ய இயலாத சூழலில் நான் பாதிக்கப்பட்டு என்னுள் துக்கங்களைச் சுமந்து எதுவும் செய்ய இயலாத ஒரு கோழையாக நம்பிக்கைகளை உடையக் கொடுத்து நின்றபொழுது வெளிப்பட்ட சில வலிகளின் பாடுபொருட்கள் இந்தத் தொகுப்பில் உண்டு.

### கவிதையில் தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கும்போதே, நாவலின் பக்கம் செல்லக் காரணம் என்ன?

ஒரு மகிழ்வற்ற மானுட துயரம் மிகுந்த முகடுகளுக்குள் வசிக்கும் எனக்குக் கவிதைதான் அடையாளம். எனக்கு அரசியலில் பெரிய ஆர்வம் எதுவும் இல்லை. ஆனால் சுற்றி நிகழும் மனிதனின் துயரத்தை நேர்கொண்டு பார்க்கையில் அதை ஒரு படைப்பாக மாற்றி வைக்கும் காரணமாக, அது கவிதையாக இல்லாத ஒரு சூழலில் ஒரு நாவலாக எழுதிப் பார்த்திருக்கிறேன். அவ்வகையில்தான் கொண்டல் வெளிவந்தது.

அது ஒரு சாமானிய இளைஞனின் தொடர் துரத்தல்களை அவனது வலிகளைப் பேசியது. இயற்கையின் மீது இருக்கும் ஆர்வத்தின் காரணமாக, அவன் போராடியதன் விளைவாக, அரசியல் ஆதிக்கம் அவன் மீது எவ்வாறு பாய்ந்தது.. மனிதத் தீமை எப்படிப்பட்டது என்பதைப் பேச நாவல் எனக்கு வாய்ப்பாக இருந்தது. அவ்வகையில் அந்த மனிதர்களின் போராட்டத்தின் மீதான



பெரும் அக்கறைதான் நாவலாக மாறியது. காணக்கிடைத்த ஒரு பிரச்சனையை நான் ஆவணமாக்கி இருப்பதாக உணர்கிறேன்.

துயரத்தை ஒருவேளை யாரிடமும் பகிர்ந்துகொள்ள முடியாமல் போய்விடுமோ என அச்சமுற்ற சாதாரண மனிதர்களின் மொழி கொண்டல். அவ்வளவுதான்.

தொலைதொடர்பு மின்சாரம் உணவு என எதுவும் இன்றி ஏறக்குறைய ஒரு சுரங்கப்பாதைவாசி போல எல்லோரும் மாறிவிட்ட ஒரு சூழலில் தாங்கள் தப்பித்துக்கொள்ள அல்லது தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தங்களது வயிற்றுக்காகப் போராடிய மக்கள் அடக்குமுறையைத் தாளாது அலைந்து திரிவதைப் பார்த்த ஒரு தருணத்தில் அந்த வலிகளைப் பதிவு செய்ய முடிவு செய்தேன். பிரச்சனைகள் இடர்பாடுகள் எல்லாம் கடந்து அது ஒரு நாவலாக உருமாறியது. அந்த வகையில் தோழர் கரீம் அவர்களுக்கு நான் எப்பொழுதும் நன்றிக்கடன் பட்டவனாக இருப்பேன். அவரது உந்துதல்தான் நாவலாக மிக முக்கிய காரணம். அது சமயம் எனது படைப்புகளைத் தயங்காமல் வெளிக்கொண்டுவரும் யாவரும் பதிப்பகமும் மிக முக்கிய காரணம்.

**கொண்டல் நாவல் எழுதியபின் உங்களுக்கு ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டதா? நீங்கள் சந்தித்த நெருக்கடிகள் பற்றிக் கூறுங்கள்..**

கொண்டல் ஒரு அரசியல் பின்புலம் சார்ந்து எழுதப்பட்ட நாவல். விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரப் போராட்டங்கள், சாதிரீதியான பிரச்சனைகள், நீர் மற்றும் கடைமடை நீர்த்தேக்கம் மற்றும் விவசாயப் பிரச்சனைகள் என அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மிக முக்கியமான காரணமாக இறால் வளர்ப்பு இருந்தது. கோரிக்கையாகச் சொன்னபோது அதற்குச் செவி கொடுக்காத அரசால் அதைப் போராட்டரீதியாக மக்கள் கையாண்டபொழுது ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

இந்தச் சூழலில் ஒரு பெரும் புயல் கடந்துவிடுகிறது. அதற்கு முன்னேற்பாடுகள் எதுவும் செய்யாமல் அதற்கான வழிமுறைகளும் தெரியாமல் இருந்ததால் வெளி உலகோடு தொடர்பற்று வாழ்வாதாரங்களை இழந்து திருமண மண்டபங்களிலும் கோவில் அரங்குகளிலும்

புயல் பாதுகாப்பு மையங்களிலும் தார்ச் சாலைகளிலும் மக்கள் நின்றனர். அச்சூழலில் நிவாரணம் கேட்டுப் போராடிய அவர்கள்மீது வன்முறைகளைத் தூண்டியதாக வழக்குகள் தொடுக்கப்பட்டன. இது பற்றிய பதிவாகத்தான் அந்த நாவல் எழுதப்பட்டது.

முன் பின் பெரிதாக நாவல் எழுதி அனுபவம் இல்லை. நாவல்கள் மீதான பெரிய வாசிப்பு அனுபவம் எனக்கில்லை. அதற்கான நேரம் பெரிதாக வாய்க்கவில்லை. அவ்வகையில் எழுதிப் பார்த்த அந்த நாவலை எழுதுகின்றபொழுது பல பிரச்சனைகளைச் சந்திக்க நேர்ந்தது.

இதை முதலில் வலஞ்சுழி என்ற பெயரில் நாவலாகக் கொண்டுவரலாம் என்று முயன்று அதற்கு எதிர்ப்புகள் வந்து எனக்கும் நிர்ப்பந்தங்கள் வந்த பிறகு அதைக் கொண்டல் என்ற பெயரில் நாவலாகக் கொண்டு வந்தோம். அது சரியான நபர்களிடம் போய்ச் சேர்ந்து இன்றும் எல்லோரும் கேட்கின்ற ஒரு விவாதிக்கிற தளத்தில் இருக்கிறது.

**தற்போது என்ன எழுதிக்கொண்டு இருக்கிறீர்கள்?**

இரண்டு நாவல்கள் எழுதிக்கொண்டிருக்கிறேன். ஒரு நாவல் முடித்து ஓராண்டு காலம் ஆகிறது. திருநங்கைகள் பற்றிய ஒரு குற்ற வழக்கின் மீது ஹிஜ்ரா நாவல் பயணிக்கிறது. பிரான்ஸ் நகரின் கலேக்குக்கும் இங்கிலாந்தின் டோவர் நகருக்கும் இடையே கடல்மார்க்கமாக சட்டவிரோதமாகப் பயணித்த நண்பர்களின் வாழ்க்கை அனுபவத்தை இன்னொரு நாவலாக எழுதிக்கொண்டிருக்கிறேன்.

இரண்டு கவிதைத் தொகுப்புகள் முடித்து வைத்திருக்கிறேன். விரைவில் மீன்பிடித் தடைக் காலம் கவிதைத் தொகுப்பு வெளிவரும் என்று நினைக்கிறேன். அத்தியழல் கவிதைத் தொகுப்பு ஏறக்குறைய முடிந்துவிட்டது.

கீழத்தஞ்சையின் சாதி அடக்குமுறைகளுக்கு உள்ளாகிய மனிதர்களின் மொழியாக இன்னொரு தொகுப்பு இருக்கும் என நம்புகிறேன். இன்னும் பெயரிடாத அந்தத் தொகுப்பு நிறைய சமயங்களில் என்னை மன அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றது. எழுதிக்கொண்டு இருக்கிறேன். அடுத்த ஆண்டு முடிவுக்கு வரும் என்று நம்புகிறேன்.

**பிலிப் அறக்கட்டளை நிறுவக் காரணமாக அமைந்தது எது? எந்த மாதிரியான பணிகளை அது முன்னெடுத்துச் செல்கிறது?**

அப்பொழுது பக்கத்து மாநிலத்தில் பணியில் இருந்தேன். எனது உணர்வுக்கு அந்தப் பணி முற்றிலும் பொருந்தவில்லை. மெல்ல மெல்ல என்னை சமரசம் செய்துகொண்டு பணியைத் தொடர்ந்துகொண்டே இருந்தேன். திடீரென ஒருநாள் செய்துகொண்டிருந்த பணியை விட்டுவிட்டு ஊருக்கு வந்துவிட்டேன். மனைவியிடம் சொன்னேன், இந்தப் பணி மனதுக்கு நெருக்கமானதாக இல்லை, என்னால் உண்மையாகப் பயணிக்கவும் இயலவில்லை என்று. அவரிடம் மறுப்பு எதுவும் இல்லை.

அதன் பிறகு ஒரு எண்ணம் தோன்றியது. ஊரில் வசிக்கும் காலகட்டங்களில் புகையிலை விளையும் இந்த மண்ணிலிருந்து நிறைய நோயாளிகள் உருவாகிக்கொண்டிருந்தார்கள். கனிம வளங்களும் சிலிக்கான்களும் புகையிலை ஊடுருவிய நீர்ப்பரப்பும் இந்த மண்ணிலிருந்து நிறைய நோயாளிகளை உருவாக்கிக்கொண்டே இருந்தன.

அவர்களுக்கு மருத்துவத்தை எவ்வாறு கையாள்வது, மேலும் எங்கே எப்படி சரியான மருத்துவம் பெறுவது என்று தெரியவில்லை. எங்கு செல்வது எப்படி தொடர்பு கொள்வது என்று புரிதல் அற்ற நோயாளிகளை நேரில் சந்திப்பதை மெல்ல மெல்லத் துவங்கினேன்.

அவர்களுக்குச் சரியான வழிகாட்டுதல், பயண உதவிகள், நோய் முற்றிய

காலகட்டங்களில் வலி நிவாரணிகள் வாங்கித்தர உதவுதல், கைவிடப்பட்ட அவர்களுக்கான மருத்துவ உதவிகள் என்று மெல்ல மெல்ல ஆரம்பித்தோம். நிறைய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த நிறைய நிறைய நபர்களைச் சந்தித்தோம். கொஞ்சம் மாற்றங்கள் வந்தபொழுது மகிழ்வாக இருந்தது.

நிறைய உழைத்தும் வறுமையில் உழலும் இறுதிக் காலகட்டங்களில் புற்றுநோய்க்குப் போராடி மரணிக்கும் மனிதர்களுக்கு என்னால் இயன்றவரை அவர்களுக்கு ஆறுதலாக உடனிருந்து பயணித்து இருக்கிறேன்.

**எழுத வேண்டுமென்று தூண்டிய அல்லது உங்களுக்கு எழுத பெரும் உத்வேகமாக இருந்த படைப்பு எது?**

இலக்கியச் செயல்பாடுகள் தவிர்த்து அடிப்படையில் நான் ஒரு புற்றுநோய் கதிரியக்க சிகிச்சையாளர். நோய் முற்றிய விளிம்புநிலை மக்களுக்காகப் பத்து ஆண்டுகளுக்கு மேலாக இலவசமாக வலி நீக்கும் சிகிச்சைகளுக்காகப் பயணப்பட்டுக்கொண்டே இருக்கிறேன். அவர்களின் வலிகளில் இருந்து நான் எனக்கான வாழ்வியலைக் கற்றுக்கொண்டேன். அவர்களுக்காகத் தினம் தினம் மருந்துகளுக்கும் பொருளாதாரத்திற்கும் ஓடப் பழகிக்கொண்டேன். அவர்களின் குரல்களை, சொற்களை, கொடும்வாதைகளை நானும் சுமக்கிறேன். இந்த வாழ்வு ஒருபோதும் முழுமையடையாத அனுபவங்களைத் தந்துகொண்டே இருக்கட்டும். அதன்வழி நான் எழுதிக்கொண்டே இருக்க விரும்புகிறேன். ஒருவகையில் இந்த வாழ்வு அவ்வளவு பாவப்பட்டிருக்கிறது போலும்.

**எழுத்தாளர் அ.கரீம் அவர்கள் தொகுத்த இருண்டகாலக் கதைகள் எனும் தொகுப்பில் உங்களின் "நான் மீண்டும் திரும்புகிறேன்" சிறுகதை ஒன்று வெளிவந்திருக்கிறது. ஆனால் நீங்கள் அதிகமாகச் சிறுகதைகள் எழுதுவது இல்லையே.. ஏன்?**





சிறு வயதுகளில் அம்மாவிடம் உறங்கப் போகும் முன் கதை சொல்லச் சொல்லிக் கேட்கும் வழக்கம் இருந்தது. அவர் தினமும் கதைசொல்ல சிரமம் ஏற்பட்டபோது மிகமுக்கியமாகக் கதைகளுக்குப் பஞ்சம் ஏற்படவே.. அம்மா மாத இதழ்களில் வரும் கதைகளை எனக்கு வாசித்துக் காண்பிக்க ஆரம்பித்தாள். அப்படித்தான் கதைகள் எனக்கு பரிச்சயமாகியது. அம்மாவிற்குக் கவிதை மிகப் பிடித்தது.

மிகச் சிறு பிராயத்தில் எனக்கு அப்படித்தான் வண்ணதாசன் அறிமுகமானார். அவரது கவிதைகள்தான் வளர்ந்த பிறகும் வாசிக்கக் கிடைத்தது. சென்னையில் படித்துக்கொண்டிருந்த காலகட்டங்களில் ஒருமுறை அவருக்கு மடல் எழுதியிருந்தேன். ‘உங்களது புத்தகங்களை வாங்க வசதி இல்லை. எனக்கு உங்கள் புத்தகம் வேண்டும்’ என்று கேட்டிருந்தேன். மறுக்காமல் உடனடியாகப் புத்தகங்களை அஞ்சலில் அனுப்பி வைத்திருந்தார். அவரது கவிதைகள் அப்படித்தான் இன்னொரு புது உலகைக் கொண்டுவந்தது. அதிலிருந்துதான் எழுதவும் ஆரம்பித்தேன்.

இன்னொருவர் எஸ் ராமகிருஷ்ணன். அவரது கதைகள் அம்மாவிற்கு மிகப் பிடிக்கும். அவரது பயணக் கட்டுரைகள் இப்பவும் மிகப் பிடித்த ஒன்று. விகடனில் தொடராக அவரது படைப்புகள் வரும்போது அம்மாவிற்கு விகடன் வாங்கிக்கொடுப்பது வழக்கமாக இருந்தது. முதல் சம்பளத்தில் முதன்முதலாகக் கதாவிலாசம் புத்தகத்தை வாங்கிய ஞாபகம் இருக்கிறது.

அப்படித்தான் எழுத்துக்கள் பழக்கமாகி நிறைய வாசிக்க வாசிக்க ஒவ்வொரு உலகமும் விரிந்துகொண்டே போய்க் கொண்டிருந்தது. சமகாலத்தில் உடன் எழுதுகின்ற அத்துணை எழுத்துக்களையும் முதன்முதலில் வாசித்த முதன்முதலில் கேட்ட அதே காதலோடுதான் இப்போதும் வாசித்தும் நேசித்தும் கடந்துபோகிறேன்.

**தற்போதைய நிலையில் தமிழ் இலக்கியம் எந்த நிலையில் உள்ளது?**

எனக்குத் தெரிந்த வரையில் தமிழ் இலக்கியம் தன்னியல்புடன் நன்றாகத்தான் இருக்கிறது. வாசிப்பு மற்றும் படைப்புகளுக்கு எல்லோரும் நேரம் ஒதுக்கும் காலகட்டங்கள் இப்போது அதிகம் என்று நினைக்கிறேன். கடந்த பத்து ஆண்டுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டால்கூட ஒவ்வொரு வருடமும் வெளிவரக்கூடிய புத்தகங்களின் எண்ணிக்கையும் வாசகர்கள் எண்ணிக்கையும் கூடிக்கொண்டுதான் வருகிறது.

**மரநாய் - கவிதைத்தொகுப்பு இந்திய அரசின் யுவபுரஸ்கார் விருதை வென்றுள்ளது. உயரிய விருது அறிவிப்பு வந்தபோது உங்கள் மனநிலை என்னவாக இருந்தது? யார் மூலமாக விருது அறிவிக்கப்பட்டதைத் தெரிந்துகொண்டீர்கள்?**

விருது அறிவிக்கப்பட்ட தினத்தின் மாலைப்பொழுதில் கலைக்கோவன் அழைத்திருந்தார். 'நான் செய்தியில் மரநாய் தொகுப்பிற்குச் சாகித்ய அகாடமி விருது அறிவித்திருப்பதாகப் பார்த்தேன். வாழ்த்துக்கள் தோழர்,' என்றார். எனக்கு அப்பொழுது என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அவ்வளவு ஆச்சரியமாக இருந்தது. உணர்ச்சிவசப்பட்டு அழுதுவிட்டேன்.

எனக்கிருந்த ஒரு தாழ்வு மனப்பான்மையின் காரணமாகவும் மற்ற நிறைய விருதுகளிலிருந்து என்னுடைய கவிதைத் தொகுப்பு புறக்கணிக்கப்பட்டதன் காரணமாகவும் அதை என்னால் சட்டென நம்பவும் இயலவில்லை. உண்மையாகவா என்று அவரிடமே கேட்டேன். அடுத்து அழைப்பில் நரன் அதை உறுதி செய்தார்.

அவ்வகையில் என்னுடைய எழுத்துக்களுக்கு இந்த விருது ஒரு பேருதவி செய்திருக்கிறது. ஏனெனில் எனது எழுத்துக்கள் எப்போதும் பிரசுரமாகாது என்று நம்பிக்கொண்டிருந்த எனக்கு நிறைய தளங்கள் அறிமுகமாகியுள்ளன. அடுத்தடுத்த தொகுப்புகள் வெளிவருகின்றன. எனக்கு நேர்மையாக எது தோன்றியதோ அதையெல்லாம் எழுதிப்பார்க்கும் ஒரு நெஞ்சுரத்தையும் அது அருளி இருக்கிறது.

**அபோர்ஷனில் நழுவிய காரிகை கவிதைத் தொகுப்பில் உங்களை மிகவும் பாதித்த கவிதை எது?**

புறநகர் சாலையில் ஒரு விபத்து. நான் தன்னிச்சையாக அந்த நகரைக் கடக்கிறேன். எனக்கு ஒரு அவசரப் பணி. வேலை





நிமித்தமாக அந்த நகரின் வழியாகப் போக நேரிடுகிறது. அந்தச் சாலை விபத்தில் சிக்கிய நபர் கேரளத்தைச் சேர்ந்தவர். அந்த விபத்திற்குப் பின்னர் அவரை அவசர ஊர்தி ஏற்றி அனுப்பி வைத்துவிட்டு அவரது உறவினர்களுக்கும் தகவல் சொல்லிவிட்டு நானும் போய்விட்டேன்.

ஒரு வருடம் கழித்து அந்த நபரின் குடும்பத்தினரைக் கேரளத்தில் சந்திக்க நேர்ந்தது. அந்த வலியை, அவர்கள் குடும்பம் இருந்த சூழலை, அவர்கள் எதிர்கொண்ட பிரச்சனைகளை 'அந்த மழை நாளில் அந்த நொடியில்' என்ற பெயரில் அபோர்ஷனில் நழுவிய காரிகை தொகுப்பில் கவிதையாக்கி இருந்தேன்.

அது ஒரு பெரும் துயர். நமது சுற்றத்தில் ஒருவர் ஒரு விபத்தில் மரணத்தை எதிர்கொண்டு அவர் விலை பேசப்பட்டு அவரது உடலைப் பெற்றுக்கொள்ள அலைக்கழிக்க வைக்கப்பட்டு கடைசியில் உடல் ஒப்படைக்கப்பட்டு எடுத்துச் செல்லக் கூட பணம் இல்லாமல் கைவிடப்பட்ட ஒரு அபலைப் பெண்ணின் வலி வாசிக்கையில் உணர்வீர்கள்.

**பரவலாக எல்லா இலக்கிய அமைப்புகளிலும் உங்கள் கவிதைத் தொகுப்பு அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. தமிழ் இலக்கிய அமைப்புகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக உள்ளதா?**

நிச்சயமாக. அவர்களின் அத்தகைய பணிகள் ஆச்சரியம் ஊட்டுகின்றன. எனது கவிதைத் தொகுப்புகளுக்காக தேனீர் பதிப்பகத்தின் மெரினா இலக்கிய அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்குப் போயிருந்தேன். ஒரு குடும்பத்தினரின் இலக்கியத்தின் மீதான காதலை முதன்முதலாக அங்குதான் பார்த்தேன்.

எப்பொழுது என்னுடைய படைப்புகள் வெளிவந்தாலும் உடனடியாக பொள்ளாச்சி இலக்கிய வட்டம் அதற்கான விமர்சனக் கூட்டத்தை முன்னெடுக்கும். என்னுடைய எல்லாப் படைப்புகளையும் பரவலாக

அங்கிருக்கும் நண்பர்களிடம் கொண்டு சேர்த்திருக்கிறார் இரா. பூபாலன்.

தோழர் கரீம், வேல்கண்ணன், பெரியசாமி அவர்கள் முயற்சியால் கோவை மற்றும் வேலூர் தமுஎச புத்தக விமர்சனக் கூட்டத்தில் என்னுடைய படைப்புகள் விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அது மறக்க இயலாத அனுபவம். அது சமயம் நண்பர்கள் மூவரின் கூட்டு முயற்சியால் கும்பகோணத்தில் தாழ்வாரம் இலக்கிய அமைப்பு எனக்கான படைப்புகளுக்குத் தொடர் முன்னெடுப்புகளை எடுத்து விருதுகளையும் வழங்கி வந்திருக்கிறார்கள். சாமானியர்கள் தங்களது அன்றாட சேமிப்பிலிருந்து எந்த ஆதாயமும் இல்லாமல் ஒரு இலக்கிய நிகழ்வு ஒருங்கிணைப்பது ஆச்சரியமாக இருந்தது.

திண்டுக்கல்லில் வெற்றி மொழி வெளியீட்டகம் ஒருங்கிணைத்த இலக்கிய நிகழ்வுக்கு அபோர்ஷனில் நழுவிய காரிகை தொகுப்புக்காகப் போய் வந்து இருந்தேன். அவர்களும் அப்படித்தான்.

புதுக்கோட்டையில் நிகழ் இலக்கிய அமைப்பு சார்பாக என்னுடைய கொண்டல் நாவலுக்காக எழுத்தாளர் சுரேஷ் சூர்யா அவர்கள் சமீபத்தில் விமர்சனக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். இணைய வழியாக இந்த நோய்த்தொற்று காலத்தில் என்னுடைய புத்தகங்கள் நிறைய முறை விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் என் நன்றிகள்.

**உங்கள் படைப்புகளில் நிலம் சார்ந்த பாடுபொருள்கள் அநேகமாக எல்லாப் படைப்புகளிலும் வருகின்றன. அது தானே தகவமைத்துக்கொள்கிறதா? திட்டமிட்டு வைக்கிறீர்களா?**

உண்மையில் நான் பிறந்து வளர்ந்த இந்தக் கீழத்தஞ்சை பற்றிய பிம்பங்கள் எல்லோரிடமும் கோயில்களாகவும் கர்நாடக இசையாகவும் பரதநாட்டியமாகவும் தலையாட்டிப் பொம்மைகள் ஆகவும் மட்டுமே மீதம் இருக்கும். ஆனால் நெடும் வரலாறு கொண்டது இந்த நிலம். எல்லா நிலப்பரப்பிலும் இருப்பது போல இதற்கும் ஒரு தனித்த அடையாளங்கள் உண்டு.

வளம் தரும் இந்தக் காவிரியும் அதன் கிளை ஆறுகளும் மழை நாளில் வெள்ளத்தை வாரித் தந்து விட்டுப் போகும். செழித்துக் கிடக்கும் இந்த நிலப்பரப்பு வறட்சியும் வீசி எறிந்து போகும். வெப்பம் தாளாது உயிர்கள் மாண்டு போகும். இந்த நிலப்பரப்பில் ஓயாது மழையும் பெய்து தீர்க்கும். கிழக்கிலிருந்து காற்று வீசும், கொஞ்சம் உறங்கலாம் என்று கயிற்றுக் கட்டிலோடு காத்திருந்த இந்தப் பரப்பில் புயலும் கடந்துபோகும்.

இந்தச் சமுதாயத்திலிருந்து இதன் கலாச்சாரத்திலிருந்து வெறும் இசையும் நடனமும் மட்டும் வரவில்லை. இந்தக் கலாச்சாரத்தை ஒத்த தொழில்களும் ஆதாயங்களும் இந்தப் பண்பாட்டிலிருந்து கிடைத்த அனுபவங்களும் இன்று வான் பார்த்து தவிப்போடு மழைக்காகக் காத்திருக்கும் ஒரு சராசரி விவசாய மொழியிலேயே அவ்வப்போது கவிதைகளாக எழுதிப் பார்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றை விட்டுவிட்டு என்னால் எழுத இயலாது. எழுதவும் தெரியாது. இந்த வாழ்வு அவ்வாறுதான் கட்டமைத்துக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மாற்றங்களைக் கவிதைகளில் சொல்லி இருக்கின்றேன். இந்தச் சிதைந்த கலாச்சாரத்தையும் அப்படித்தான் சொல்லி இருக்கின்றேன்.

இந்தக் கீழத்தஞ்சை பல இடர்களையும் வலிகளையும் தாண்டி செழித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதிகாரம் இந்த நிலங்களைத் துளையிட்டு எண்ணெய் வளத்திற்காக அலைந்தது. ஒருபுறம் கனிமவளங்களுக்காக இந்த நிலப்பரப்பின் மீது அலைந்தது. ஒன்றல்ல நிறைய இருக்கிறது. இந்தச் சிக்கல்கள் எல்லாம் தீர்த்துக்கொள்ள யாராலும் முடியுமா எனத் தெரியவில்லை. ஆனால் எழுதிப் பார்க்கையில் கொஞ்சம் பாரம் குறையும் உணர்வு.

**உங்கள் படைப்புகள் எந்தத் தத்துவம் சார்ந்து இருப்பதாகக் கருதுகிறீர்கள்?**

தத்துவம் சார்ந்து என்றெல்லாம் எதுவுமில்லை. அது கொஞ்சம் சிக்கலான விஷயம். எனக்குக் கவிதைக்காகக் கிடைத்த துவக்கம் ஒன்றுதான். 'வலி.' அதை மட்டும்தான் நான் எழுதிப் பார்க்கிறேன். என்னால் இப்படியான கட்டமைப்புக்குள்தான் என்றெல்லாம் எழுதத் தெரியாது. ஏனெனில் நான் ஒருபோதும் வாழ விரும்பிய கடக்க விரும்பிய எதையும் அடைந்ததில்லை. யோசித்துப் பார்க்கையில் சக மனிதர்களைப் பற்றி, வாழும் நிலப்பரப்பைப் பற்றி, நோய்களையும் அதன் வலிகளையும் சேர்த்துத் தாங்குகின்ற தோள்களைப் பற்றி என அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை மட்டும் எழுதிப் பார்த்துக்கொண்டே வந்தபின் அந்தப் பயம் மறைந்து அவையே எனது எழுத்துக்களாகப் பிரசுரமாகி எனது படைப்புகளாக மாறின. எனக்கு என் கண்முன் நிகழ்ந்தது, நான் பார்த்தது, எனக்குத் தோன்றியது என அவற்றைத்தான் எழுதிப் பார்த்திருக்கிறேன். அவ்வளவுதான்.

உண்மையில் எனக்கு மட்டுமல்லாது என்னைத் தனிப்பட்ட முறையில் நன்கு அறிந்தவர்களுக்கும் என் சகிப்புத்தன்மையோடு இணைந்து பயணிக்கும் அத்தனை நபர்களுக்கும் இது நன்றாகத் தெரியும். அப்படி என்றால் அவர்களுக்காக மட்டும் எழுத வேண்டியதுதானே என்று யாரும் கேட்க இயலாது. ஏனென்றால் நான் தீர்ப்பு எழுத இயலாத சாட்சியங்கள் அற்ற ஒரு கொடுமையை ஒரு ஆதிக்கத்தை ஒரு இழப்பை எழுதிப் பார்க்கிறேன். நிறைய மோசமான வார்த்தைகளால் வசைபாடத் துடிக்கும் பிரச்சனைகளைக்கூட நான் எழுதிப் பார்க்கிறேன். எனக்கான வரைமுறைகள் சட்டகங்கள் எதுவும் இல்லை. நான் என்னுடைய எழுத்துக்களை நம்புகிறேன். பிரத்தியேகமாக என் பாடுபொருட்கள் என் மக்களிடமே இருக்கின்றன. அவர்களுக்காக இந்த எழுத்துக்கள் இருந்துவிட்டுப் போகட்டும். அதுவே கருவும் மகவும் ஆக.

**சமகாலத்தில் எழுதுவதில் என்ன மாதிரியான சவால்களை எதிர்கொள்கிறீர்கள்?**

சவால்கள் என்று எதுவுமில்லை. ஆனால் தேடல். அது நீண்ட வண்ணம் இருக்கிறது. அது ஒரு சுவாரசியமாகவும் இருக்கிறது. சமயங்களில் எவ்வளவு பிறழ்வுக்கு உள்ளாக்குகிறதோ சமயங்களில் உற்சாகமளிக்கவும் தவறுவதில்லை. மறுபடியும் மறுபடியும் தேடுதல் தொடரும்பொழுது அவற்றைப் படைப்பாக்குவதில்தான் சிரமம் இருக்கிறது.

சில கவிதைகளை மிக எளிதாக எழுதிவிட்டாலும் சிலவற்றைக் கட்டமைப்பதில் பெரும் சிரமம் இருக்கும். மீண்டும் மீண்டும் அவற்றுக்காக நேரம் ஒதுக்கி சமயங்களில் சில நோய்கள் அல்லது உடல் பாகங்கள் பற்றிய மொழிபெயர்ப்புக்கு அலைந்து சிலவற்றைப் புரிந்துகொண்டு கட்டமைப்பதில் மிகுந்த சிரமம். ஆனால் இத்தகைய படைப்புகள்தான் உலகங்கள்தான் விருப்பமானவை.

சில நேரங்களில் ஆற்றாமையால் முற்றுப்பெறாமல் விடப்பட்ட கவிதைகளும் உண்டு. சிலவற்றைச் சரியாக சொல்லியிருப்பதாக உணர்ந்திருக்கிறேன். மற்ற நேரங்களில் சிலர் சிலவற்றைப் புரியவில்லை என்று சொன்னதையும் நான் மறுப்பதற்கில்லை. நிறைய கவிதைகள் இவ்வாறாகச் சில நாட்களைத் தின்று கொண்டுவரப்பட்ட கவிதைகள்தான்.

இத்தகைய தருணங்களில் எழுதியவற்றை என்னால் நினைவும்கூர இயலும். நுட்பமான கருப்பொருள் என்று ஒன்று இல்லை. அதற்காக நினைப்பதும் இல்லை. சொல்லப்போனால் எழுதுவதென்பது என்னுடைய தினசரி வாழ்வோ அல்லது ஒருநாளின் அங்கமோ அல்ல. எனக்கு சௌகரியமான நேரம் ஒதுக்கி எழுதப்படுவது அல்ல.

**நீங்கள் அதிகம் விரும்பி வாசிக்கும் எழுத்தாளரின் படைப்பு எது?**

அதிகம் விரும்பி வாசித்தல் நிறைய இருக்கிறது. சிறு பிராயம் தொட்டு அத்தனை பேரையும் வாசித்துக்கொண்டே வந்திருக்கிறேன். அது ஒரு நெடும் பட்டியல்.

சிறந்த கற்பனைத் திறன் கொண்ட புதிதுபுதிதான நிறைய பேர் எழுத வருகிறார்கள். சாதுரியமான மொழியில் அவர்களது கவிதைகள் அவ்வளவு அழகாக இருக்கின்றன. பதற்றம் ஏற்படுத்தும் கவிதைகள் எனக்கும் மிகப் பிடிக்கும். மூத்தவர்கள் அதை அவ்வளவு அழகாக எழுதித் தந்துகொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் இந்தக் கவிதைகள் ஒரு நண்பனைப் போல அமையப் பெற்றிருக்கின்றன. எழுத வேண்டியவற்றை இவ்வளவு அழகாக எழுத முடியுமா என்று சில கவிதைகளை நான் மீண்டும் மீண்டும் வாசித்திருக்கிறேன். அது எனக்கு உள்ளுணர்வுடன் ஒன்றும் பட்சத்தில் நான் அதனுடன் இணைந்து பயணிக்கிறேன். அந்தக் கணம் இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு தேவதையைப் போல உணரவைக்கிறது. எல்லோருடைய படைப்புகளுக்கும் அது பொருந்தும்.

**நவீனக் கவிதைகளுக்கும், கவிஞர்களுக்கும் பொதுவாக மக்களிடம் வரவேற்பு உள்ளதா?**

நிச்சயமாக இருக்கிறது, இல்லாமலில்லை. நவீனக் கவிதைகள் மக்களிடம் சென்று சேர்ந்திருக்கின்றன. மெல்ல மெல்ல வாசிக்கத் துவங்குகிறவர்களிடம் அவைகள் ஒரு உலகைப் பரிசளிக்கின்றன. நம்மில் இருந்து மாறுபட்டு அவர்களின் குரலாக இந்தக் கவிதைகள் ஒரு பிரயாணத்தில் தோழன் போல இணக்கமாகத் தானே பயணிக்கின்றன. அவ்வகையில் நவீனக் கவிதைகள் வாசிப்பின் மீதான தடைகளை மீறி இன்னமும் வாசிப்பை விசாலமாக்க உதவும் என்று நினைக்கிறேன். ■



தொடர் – 5

● மு.முருகேஷ்



# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்றதுமே திரைப்படப் பாடலாசிரியர் என்கிற ஒற்றைப் பிம்பம்தான் என் மனதில் முதலில் பதிந்திருந்தது. கவிஞரது திரைப்படப் பாடல்களில் வெளிப்படும் எளிமையும் இயல்பும் நிரம்பிய வார்த்தைகள் என்னை ரொம்பவே ஆகர்ஷித்தன.

**'என்னருமைக் காதலிக்கு வெண்ணிலாவே,**

**நீ இளையவளா மூத்தவளா**

**வெண்ணிலாவே...'**

என்கிற கேள்வி எந்தக் காலத்து இளைஞனின் இதயத்திலும் தங்கி நிற்கும் வரிகள்தானே..!

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்ட 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் திரையிசைப் பாடல்கள்' எனும் நூலினை 1980-களின் இறுதியில் வாசித்தேன். இந்த நூலுக்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் எழுதிய முன்னுரையை வாசித்ததும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எனும் கவிதையாளுமைப் பற்றிய எனது எண்ணம் பன்மடங்கு உயர்ந்தது. வெறும் சினிமா பாடல்களைத்தானே எழுதியவர் என்கிற எனது புரிதல் தவிடுபொடியாக நொறுங்கியது.

திரைப்படப் பாடல்களில் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த எளிய மனிதர்களைப் பற்றி எழுதியதோடு, பொதுவுடைமைச் சிந்தனைக் கருத்துக்கள் நிரம்பிய பாடல்களையும் எழுதிய பெருமைக்குரியவர் பட்டுக்கோட்டையார் என்ற எண்ணம் மேலோங்கியது. அதன்பிறகான எனது வாசிப்பில் பட்டுக்கோட்டையாரின் திரைப்பாடல்களைச் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்திய அர்த்தம் பொதிந்த பாடல்களாகப் புரிந்துகொள்ளத் தொடங்கினேன்.

தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை அருகேயுள்ள செங்கப்படுத்தான்காடு எனும் கிராமத்தில், எளிய விவசாயக் குடும்பத்தில், அருணாச்சலம் – விசாலாட்சி தம்பதியினரின் இளைய மகனாக 1930ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று பிறந்தவர் கல்யாணசுந்தரம்.

கவிஞரின் தந்தையாரும் கவி பாடும் ஆற்றலுடையவர்.

‘முசுகுந்த நாட்டு வழி நடைக்கும்பி’ என்றொரு நூலையும் எழுதியுள்ளார். தந்தையிடமிருந்து கிடைத்த தூண்டுதல் மைந்தர்களான கணபதிசுந்தரத்திற்கும், கல்யாணசுந்தரத்திற்கும் கவிதை எழுதும் ஆர்வம் வர காரணமானது. திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்த கல்யாணசுந்தரம், 2ஆம் வகுப்பிற்குப் பிறகு அங்கு செல்ல பிடிக்காமல், தனது அண்ணன் கணபதிசுந்தரத்திடமே ஆரம்பக் கல்வியைக் கற்றார். இளமையிலேயே கவிதை எழுதும் ஆர்வமிருந்தாலும், அதை வெளிக்காட்டிக்கொள்ளாதவராக இருந்த கல்யாணசுந்தரம், பள்ளிப் படிப்பை முடித்ததும் திராவிட இயக்கத்திலும், பொதுவுடைமைக் கொள்கையிலும் ஈடுபாடு உடையவராக இருந்தார்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாய இயக்கத்தை வளர்த்தெடுத்த முன்னோடித் தியாகிகளான சிவராமன், இரணியன் போன்றோரோடு இணைந்து செயல்பட்டார். தொடக்கக் காலத்தில் ‘ஜனசக்தி’ பத்திரிகையில் கவிஞரின் பாடல்கள் பிரசுரமாகின. தனது 19ஆவது வயதில் பாடல்களை எழுதுவதில் மிகுந்த நாட்டமுடையவரானார். நாட்டுப்புறப் பாடல்களைத் தழுவிய நடையில் பாடல்களை எழுதத் தொடங்கினார். பாடல்களில் அழகிய சொல்லாடலைக் குறைத்து, உணர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தார். விவசாய இயக்கத்தோடு சேர்ந்து இயங்கிக்கொண்டிருந்த கவிஞருக்கு, நடிப்பிலும் ஆர்வம் உண்டானது.

நாடகங்களில் நடிக்கும் ஆசையில் ‘சக்தி நாடக சபா’வில் சேர்ந்தார். இந்த நாடக சபாவில் சேர்ந்து, பின்னாளில் புகழ்பெற்ற நடிகர்களாக அறியப் பெற்றவர்கள் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், எம்.என்.நம்பியார், ஓ.ஏ.கே.தேவர் உள்ளிட்ட பலர். ஏனோ கவிஞருக்குள் நடிப்பின் மீதான ஆர்வம் குறைய, பாடல் எழுத விரும்பினார்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனை நேரில் பார்க்காமலேயே அவரைத் தனது மானசீக குருவாகக் கருதிய பட்டுக்கோட்டையார், புதுச்சேரிக்குச் சென்றார். அங்கு புரட்சிக்கவிஞரிடம் உதவியாளராகச் சேர்ந்து, பாடல் எழுதும் பயிற்சியைக் கற்றுத் தேர்ந்தார். அங்கே பெற்ற உத்வேகத்தோடு சென்னைக்குப் பயணமானார்.

1954ஆம் ஆண்டில் ’படித்த பெண்’ என்கிற திரைப்படத்தில் தனது முதல் பாடலை எழுதினார் கவிஞர். (ஆனாலும் படம் 1956 ஏப்ரல் 20இல் வெளியானது.) சிறுவயதில் விவசாய வேலைகள், மாட்டு வியாபாரம், மாம்பழம் விற்பது, தேங்காய் வியாபாரம், உப்பளத் தொழில் எனப் பல்வேறு தொழில்களைச் செய்துவந்த கவிஞருக்கு, அந்த அனுபவங்களெல்லாம் பாடல் எழுதும்போது கை கொடுத்தன.

திரைப்படங்களில் பாடல் எழுதும் வாய்ப்புத் தேடி அலைந்துகொண்டிருந்த கவிஞருக்கு, 1956ஆம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்திலிருந்து ஓர்





அழைப்பு வருகிறது. கவிஞரும் அங்கு சென்றார். இசையமைப்பாளர்கள் எம்.எஸ். விஸ்வநாதன் – கே.வி.மகாதேவன் இருவரும் 25 வயது இளைஞனான கவிஞரைச் சற்றே ஏற இறங்கப் பார்த்தனர். 'ஒரு இளைஞனால் இந்தக் கருத்திற்குப் பாடல் எழுத முடியுமா?' என்கிற சந்தேகத்தோடு இருக்க, கவிஞர் எழுதித் தந்தார் பல்லவியை.

**'குட்டி ஆடு தப்பி வந்தால் குள்ளநரிக்குச் சொந்தம்**

**குள்ளநரி மாட்டிக்கிட்டா கொறவனுக்குச் சொந்தம்!**

**தட்டுக்கெட்ட மனிதர்கண்ணில் பட்டதெல்லாம் சொந்தம்**

**சட்டப்படி பாக்கப்போனா எட்டடிதான் சொந்தம்!'**

பாடலில் வெளிப்பட்ட ஆழ்ந்த பொருளும், வெகுஇயல்பாக வந்து விழுந்த சொற்களும் இருவரையும் வியக்க வைத்தன. 'பாசவலை' படத்திற்குப் பாடல் எழுதும் வாய்ப்பினை மிகுந்த மகிழ்ச்சியோடு கவிஞரிடமே கொடுத்தார்கள். இந்தப் படத்தின் பாடல்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. தொடர்ந்து ஏராளமான பாடல் வாய்ப்புகள் கவிஞரைத் தேடிவந்தன.

பின்னர் 5 ஆண்டுகாலம் அதாவது, கவிஞரது இறுதிக்காலம் வரை திரையுலகின் சுடர்மிகு பாடலாசிரியராக வலம்வந்தார் பட்டுக்கோட்டையார். தத்துவப் பாடல்களை எழுதுவதிலும் தனிக் கவனம் பெற்றவராக விளங்கினார்.

பல திரைப்படங்களுக்குக் கவிஞரெழுதிய தத்துவப் பாடல்கள் முக்கால் நூற்றாண்டினைக் கடந்த வேளையிலும் இன்னமும் விரும்பிக் கேட்கப்படும் அர்த்தமிக்க வாழ்வியல் தத்துவங்களாக மிளிர்வதைப் பார்க்க முடிகிறது. அத்தகைய பல பாடல்களுள் இதுவுமொன்று.

1959இல் வெளியான 'பாண்டித்தேவன்' திரைப்படத்தில் கவிஞர் எழுதிய 'சொல்லுறதைச் சொல்லிப்புட்டேன், செய்யுறதைச் செஞ்சிடுங்க' எனும் பாடலின் கடைசி சரணம் இப்படி முடிகிறது.

**‘சித்தர்களும் யோகிகளும் சிந்தனையில்**
**ஞானிகளும்**
**புத்தரோடு ஏசுவும் உத்தமர் காந்தியும்**
**எத்தனையோ உண்மைகளை எழுதிஎழுதி**
**வச்சாங்க…**
**எல்லாந்தான் படிச்சீங்க என்ன பண்ணிக்**
**கிழிச்சீங்க?’**

என்கிற ஒற்றைக் கேள்வி, தமிழ்ச் சமூகத்தின் மனசாட்சியில் இன்னமும் கூத்தீட்டி போல் பாய்ந்து நின்று, பேருண்மையைச் சொல்வதாக உள்ளது.

காதல் பாடல்களையும் தனித்துவத்துடன் எழுதுவதில் வல்லவரான கவிஞரின் பல பாடல்கள் நூற்றாண்டுகள் கடந்தும் வாழும் கல்வெட்டு வரிகள்.

**‘ஆடைக்கட்டி வந்த நிலவோ? – கண்ணில்**
**மேடைகட்டி ஆடும் எழிலோ?…’**
(படம்: அமுதவல்லி)

**‘முகத்தில் முகம் பார்க்கலாம் – விரல்**
**நகத்தில் பவழத்தின் நிறம் பார்க்கலாம்…’**
(படம்: தங்கப்பதுமை)

**‘கண்ணோட கண்ணு கலந்தாச்சு**
**காணாத இன்பம் கண்டாச்சு**
**ஒண்ணோட ஒண்ணு துணையாச்சு**
**உள்ளம் நெனச்சது நடந்தாச்சு…’**
(படம்: நாடோடி மன்னன்)

அதேபோல், முற்போக்கான சிந்தனைகளையும் தன் பாடல் வழியே தமிழ்த் திரையிசையில் ஆழப் பதியமிட்டவர் பட்டுக்கோட்டையார்.

திருமணம் என்பது ஒரு பெண்ணை வீட்டிற்குள்ளும் சமையலறைக்குள்ளும் முடக்குவதாக, பெண் உரிமையை மறுதலிப்பதாக உள்ளது என்பதை மிகச் சரியாக, அதே நேரத்தில் அதிர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு பாடலாக எழுதினார். ‘வீரக்கனல்’ எனும் படத்தில் இடம்பெற்ற அந்தப் பாடலின் தொடக்க வரிகள் இவை;

**‘பெண்: போட்டுக்கிட்டா ரெண்டு பேரும்**
**சேர்ந்து போட்டுக்கணும் – ஒலகம்**
**புதுசா மாறும்போது பழைய**
**மொறையை மாத்திக்கணும்…’**

என்று ஒரு பெண் பாடுவதாகத் தொடங்கும் வரிகள், ‘இவர் எதைச் சொல்கிறார்?’ என கேட்ட அனைவரையும் புருவம் உயரச் செய்தது. அடுத்து, ஆண் பாடும் வரியில் அதற்கான பதில் கிடைத்தது.

**‘ஆண்: போட்டுக்கிட்டா – ஆமா**
**போட்டுக்கிட்டா – தாலி**
**பெண்: போட்டுக்கிடும் முன்னே நல்லா**
**பொண்ணும் புள்ளையும் பாத்துக்கணும்**
**புடிக்குதான்னு கேட்டுக்கணும்…’**

இன்றைய காலத்திற்கு இந்தப் பாடலின் வரிகள் சாதாரணமாகக்கூடத் தெரியலாம். ஆனால், மணமாகுமுன்னே ஆணும், பெண்ணும் சந்திப்பதென்பது ஒரு காலத்தில் நடக்கவே முடியாத ஒன்று. மணமேடையில்தான் மணமக்கள் முதன்முதலாக முகம் பார்த்துக்கொள்ள முடியும் என்கிற நிலையிருந்த காலத்தை எண்ணிப் பார்த்தால் இந்தப் பாடலில் வெளிப்பட்டுள்ள முற்போக்கான பார்வையைப் புரிந்துகொள்ள முடியும்.

திருமணமானதன் அடையாளத்தைப் பெண் மட்டுமே தாலியாகச் சுமக்கும் நிலையே இன்றுவரை உள்ளது. ஆனால், அன்றே ‘ஆணும் பெண்ணும் சமம்’ என்பதை வலியுறுத்தி, ‘தாலி போட்டுக்கிட்டா ரெண்டுபேரும் சேர்ந்து போட்டுக்கணும்’ என்று எழுதிய பட்டுக்கோட்டையாரின் மேன்மையான சமத்துவப் பார்வையைக் கொண்டாடாமல் இருக்க முடியுமா..?

குழந்தைகளுக்காகக் கவிஞர் எழுதிய பாடல்களும் புகழ்பெற்றவையே. அவற்றுள் சில:

**‘திருடாதே! பாப்பா திருடாதே!’** (படம்: திருடாதே)

***'சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா!'*** *(படம்: அரசிளங்குமாரி)*

***'தூங்காதே தம்பி தூங்காதே'*** *(படம்: நாடோடி மன்னன்)*

*தனது சுயமரியாதையை எப்போதும், எதற்காகவும் இழக்காத தன்மானமிக்க கவிஞராகத் திரையுலகில் வலம்வந்தார் பட்டுக்கோட்டையார். படங்களுக்குப் பாடல் எழுதிய தொடக்கக் காலங்களில் வறுமையில் இருந்தாலும் அதற்காக யாரிடமும் போய் உதவி கேட்டு நின்றதில்லை.*

*ஒருமுறை பட நிறுவனமொன்று கவிஞர் எழுதிய பாடலுக்குப் பணம் தராமல் இழுத்தடித்தது. பணத்தைக் கேட்டு பட அதிபரைப் பார்க்கப் போனார் கவிஞர். "இப்ப பணம் இல்லே. நாளைக்கு வா. இல்லே, நிக்கிறதா இருந்தா, நின்னுக்கிட்டே இரு" என்று சொல்லிவிட்டு, வீட்டுக்குள் போய்விட்டார் பட அதிபர்.*

*உடனே, சிறுதாளொன்றை எடுத்து நான்கே மூன்றே வரிகள்தான் எழுதிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டார் கவிஞர். கொஞ்ச நேரத்திலேயே பட நிறுவனத்திலிருந்து கவிஞரைத் தேடிவந்தது பணம். கவிஞர் தாளில் இப்படி எழுதியிருந்தார்.*



***'தாயால் வளர்ந்தேன்; தமிழால் அறிவு பெற்றேன்;***

***நாயே! நேற்றுன்னை நடுத்தெருவிலே சந்தித்தேன்;***

***நீ யார் என்னை நில் என்று சொல்ல?'***

*1959ஆம் ஆண்டு அக்டோபர் 9ஆம் தேதியன்று தனது 29 வயதில் காலமான கவிஞர், ஐந்தே ஆண்டுகள்தான் திரைப்படப் பாடல்களை எழுதினார். மொத்தம் 51 திரைப்படங்களுக்கு 201 பாடல்களை எழுதினார். ஒவ்வொரு பாடல்களும் தன்னளவில் கருத்து வளமிக்கதாகவும், சமூக அக்கறையை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றன. 1993இல் கவிஞரின் அனைத்துப் பாடல்களும் அரசுடைமை ஆக்கப்பட்டன. 2000த்தில் பட்டுக்கோட்டையில் தமிழக அரசு மணி மண்டபம் கட்டியது.*

*பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல்களில் இரண்டு கதைப் பாடல்களையும் எழுதியுள்ளார். 1956இல் நவம்பர் 1 அன்று சிவாஜி, எஸ்.எஸ்.ஆர்., பானுமதி ஆகியோர் நடித்த 'ரங்கோன் ராதா' படம் வெளியானது. அறிஞர் அண்ணாவின் கதைக்கு, கலைஞர் மு.கருணாநிதி திரைக்கதை எழுத, ஏ.காசிலிங்கம் இப்படத்தை இயக்கினார். ராஜா தேசிங்குவின் கதையைப் பாடலாக அதில் எழுதியிருப்பார்.*

*மற்றொரு கதைப்பாடல் 'குலதெய்வம்' எனும் படத்தில் இடம்பெற்றது. இந்தப் பாடல் வீரபாண்டிய கட்டபொம்மனின் வலதுகரமாக விளங்கிய தலைமைத் தளபதி பகதூர் வெள்ளையத் தேவனைப் பற்றியது.*

***'அடியார்கள் உள்ளத்தில் குடிகொள்ளும் தேவதையே***

***ஆதரிக்க வேணுமே என் ஜக்கா தேவி***

***அடங்காத பேர்களையும் ஆலைவாய்க் கரும்புபோல***

***ஆட்டிவைக்கும் அம்பிகை நீயே – என் ஜக்கா தேவி***



***ஆதரிக்க வேணுமே!***

***காகம் பறக்காத தேசமெல்லாம்***

***கத்தியால் வெட்டுவேன் பாதர்வெள்ளை***

***– அய்யா***

***கறுவறுத்தவன் பாதர்வெள்ளை...***

***பாதர்வெள்ளை யென்ற பெயரைக்***

***கேட்டால்***

***பத்துமாதக் கர்ப்பம் பறந்துவிடும்!***

***இலங்கைத் தேசத்திற்கு இந்திரஜித்து***

***பாஞ்சால நாட்டிற்குப் பாதர்வெள்ளை!***

***பாஞ்சாலங் குறிச்சியின் பஞ்சவர்ணக்கிளி***

***வந்தேனே நானும் வந்தேனே!'***

என்று வெள்ளையத் தேவனின் பெருமையைப் போற்றித் தொடங்கும் பாடல், வெள்ளையத் தேவனுக்கும் அவனது மனைவி வெள்ளையம்மாளுக்குமான உரையாடலாகத் தொடர்கிறது.

***'பாதர்: போருக்குப் போறேண்டி பாதர்***

***வெள்ளை***

***போக விடைதாடி வெள்ளையம்மா!***

***வெள்ளை: போகாதே போகாதே என்***

***கணவா***

***பொல்லாத சொப்பனம் நானும்***

***கண்டதினால்...***

***பாதர்: கண்ட கனவதைச் சொல்லாவிட்டால்***

***கத்தியால் வெட்டுவேன் பாதர் வெள்ளை.***

***வெள்ளை: பிஞ்சு மலருமே சோம்பக்***

***கண்டேன்***

***பிஞ்சிட்ட வாழையும் சாகக் கண்டேன்.***

***பாதர்: பிஞ்சிட்ட வாழையும் சாகக்***

***கண்டால்***

***பின்வாங்கேன் சண்டையில்***

***பாதர்வெள்ளை...'***

என மனைவி மறுத்தும் போருக்கு வீறுகொண்டு செல்வதாகக் கதைப்பாடலினை முடித்திருப்பார் பட்டுக்கோட்டையார்.

1799 செப்டம்பர் 5 அன்று ஆங்கிலேயப் படைத்தளபதி கர்னல் பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சியை முற்றுகையிட, கட்டபொம்மனின் படைத்தளபதியான வெள்ளையத் தேவன் ஆங்கிலப் படையை எதிர்கொண்டு வீரச்சமர் புரிந்தான். மறைந்திருந்து ஒருவன் துப்பாக்கியால் சுட, குருதி கொப்பளிக்கப் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் பார்த்தபடியே உயிர் துறந்தான் வெள்ளையத் தேவன் என்பது வரலாறு.

வரலாற்றின் வீர நாயகன் ஒருவனைப் பற்றிய கதையினைத் திரைப்பாடலின் வழியே சொல்லியுள்ள பட்டுக்கோட்டையாரின் மதிநுட்பம் நம்மை அசரடிக்கிறது. மக்கள் கவிஞர் என்றும், பாட்டுக்கோட்டை என்றும் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைத் தமிழுலகம் போற்றுவதற்கான அனைத்துக் காரணிகளையும் தனது பாடல்களிலேயே பொதிந்துவைத்த அந்தச் 'சித்தர்களின் தத்துப்பிள்ளை, அவன் சேரித்தமிழ் பூத்த முல்லை; அவ்வைப்பாட்டியின் பேரன், அவன் அனுபவப் பள்ளி ஆசானு'க்கு (நன்றி: நவகவி) இன்னும் ஒன்பதாண்டுகளில் (1930-2030) நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவிருக்கிறோம் என்பது மனதிற்கு மிகுந்த நிறைவைத் தருவதாக இருக்கிறது.

**- இன்னும் சொல்வேன்**

● ந.சிவநேசன்
● புகைப்படம் : ஆர்.ஆர்.சீனுவாசன்



# நகுலன் எழுத்துக்களில் ஆன்மாவின் தேடல்

எளிமையாலான சாவியைக் கொண்டு தத்துவார்த்தத்தைத் திறக்கும் யுக்தியை எவ்விதச் சிரமமுமின்றி கடைசிவரை கடைபிடித்து வந்தவர் நகுலன். அவரது பெயரை உச்சரித்ததும் எல்லோருக்குமே நினைவுக்கு வருவது இராமச்சந்திரன் கவிதைதான். அதை ஏற்கெனவே பல்வேறு விமர்சகர்களும் விசிறிகளும் போதுமான அளவுக்கு அலசி ஆராய்ந்துவிட்டாலும் அது இல்லாத நகுலன் போற்றுதும் எழுத்து நிறைவடையாது என்பதால் அதைக் கடைசியில் வைத்துக்கொள்வோம்.

நகுலனின் வரிகளில் முக்கியமான ஸ்திரமொன்று படித்த நொடியில் நம் மனதைக் கவ்விக் கொள்கிறதென்றால் அதில் ஒளிந்திருக்கும் ஒருவித மர்மத்தன்மையும் மாயச்சித்திரமும்தான்.

எனக்கு

யாருமில்லை

நான் கூட..

தனிமையில் தன்னை அமர்த்திவிட்டு பூனையைப் போல விலகிச் சென்று ஒளிந்திருந்து கவனிக்கும் தன் ஆன்மாவைத்தான் இவ்வரிகளில் நிறுத்தியிருக்கிறார் போலும். அவர் மூன்று வரிகளில் முடித்துவிட்டதைப் பற்றிய விவரணைக்கு இத்தனை வரிகள் வேண்டியிருப்பதிலேயே அவரது சொற்புலத்தை அறிந்துகொள்ள முடிகிறது.

நவீனன் சொன்னது என்ற மற்றொரு கவிதையில்

என்ன மனிதன்!

வாயைத் திறந்து

பேசவே பயப்படுகிறான்

நவீனன்

'நகுல'னிடம் சொன்னது

எனும்போது அந்த மனிதனுக்குள் தன்னை இருத்திப் பார்க்கும் முனைப்பாட்டை வெளிப்படையாக்குகிறார்.

இதில் இன்னொரு விஷயம் கேள்வியெழுப்பும் நவீனனும் அவரே என்பதை ‘ஒரு இராத்தல் இறைச்சி’ சிறுகதையில் அறியமுடிகிறது.

அந்தக் கதையில் வரும் நவீனன் என்ற பெயருடைய அவர் ஒரு நாய் வளர்க்கிறார். அதற்கு வெள்ளிக்கிழமைகள்தோறும் தவறாமல் ஒரு இராத்தல் இறைச்சி வேலைக்காரனின் கைங்கர்யத்தில் கிடைத்துவிடுகிறது. தான் வாலைக் குழைத்து நிற்காதபோதும்கூட தனக்கான விருந்து கிடைத்துவிடுமெனத் தெரிந்தும்கூட எதற்காகவோ அன்றைய தினத்தில் விடாமல் அவர் காலை நக்கி இம்சை பண்ணுகிறது.

‘நீ ஏன் என்னை அடிக்கிறாய்? நீ இறைச்சி வாங்கித் தருவதற்கென்றா நான் இதைச் செய்கிறேன்? நானோ நாய் ஜென்மம். மனிதன் காலை நக்குவதில் அதுவும் உன்னைப் போல் தயை காட்டுபவர்களின் காலை நக்குவதில் எங்களுக்கு ஒரு தனி ருசி. நீ இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்வது போல் இருக்கும்,’ என அவரே அதன் மொழியை விவரிக்கும் இடத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். நாயைப் போல மனிதனும்தான் அவ்வப்போது காரியம் சாதிக்க ருசி காண்கிறான். அதை ஏற்று ஆராதிப்பதில் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு நன்றாகப் பொழுது போகிறது.

இப்படியான ஒரு தருணத்தில் எழுத்தாளராகிய நண்பரொருவர் அதே வெள்ளிக்கிழமையில் விருந்தினராக வர அந்த நாய் தன் விருந்துக்கு ஏதேனும் தடை வந்துவிடுமோ என்ற பரபரப்பில் இவரைக் கடித்துவிடுகிறது. இறுதியாக வேலைக்காரன் அதைக் கார்ப்பரேஷனில் பிடித்துத் தந்துவிட கதையை இப்படி முடிக்கிறார்..

‘ஆனால் நான் வேலைக்காரனைத் தடுக்கவில்லை. ஏனென்றால் அது என்னைக் கடித்ததை விட வாரந்தவறாமல் என் காலை நக்கியதைத்தான் சகிக்கமுடியவில்லை.’

இந்தக் கதையை இராஜு எனப் பெயரிடப்பட்ட ஒரு நாயின் வாழ்வாக மட்டும் வெறுமனே கடந்துவிட முடியாது. ஏனெனில் அந்த இறுதி வரிகள்!

அடிமைத்தனத்துக்கும் விசுவாசத்துக்கும் இடையில் அல்லாடும் மனிதனின் பொதுப்புத்தியை அந்த நாயின் வடிவில் எளிதாகப் பொருத்திப் பார்க்க முடியும். அதீதப் பற்றுதலினால் உண்டாகும் மனக்கசப்பையும் இதில் கொண்டு வந்திருக்கிறார்.

எமிலி டிக்கின்சன் சொன்ன ‘அகராதி எனது நெடுநாளைய உற்ற தோழன்’ என்ற வரிகளை அடிக்கடி சுட்டிக்காட்டுபவர். படைப்பிலக்கியத்திற்கான தேர்ச்சியான பாஷையின் தேவையை அறிந்திட அகராதி துணைபுரிவதாகவும் எடுத்துக் காட்டுகிறார். ஆனால் இன்றைய இலக்கியம் பயில்பவர்களுக்கு நகுலனே ஒரு அகராதியாகத் துணை நிற்பது வேறு விஷயம்.

ஞானம் ததும்பும்போதும் துணைவியாரைப் புரிந்துகொள்ள மாட்டாமல் அகங்காரத்தை வெளிப்படுத்துபவர்கள் மத்தியில் தன் மனைவியை நன்கறிந்து எழுத்தில் அவர்களை இடம்பெறச் செய்யும் சில அரிய எழுத்தாளர்களைப் போல நகுலனும் தன் மனைவியின் மேல் கொண்ட உயிர்ப்புடைய காதலின் அடர்த்தியைப் பின்வரும் கவிதை வரிகளில் உணரச் செய்கிறார்.

ஒருவர் சாவதும்

ஒருவர் இருப்பதும்

வெறும் சாவு என்பதை விட

இது மிகவும் குரூரம்

இதைச் சொன்னதும்

சுசீலா தான்

எனும்போது சொல்லமுடியாத துயரத்தின் இருள் சூழ்ந்து கொள்கிறது.

ஒரே சமயத்தில் கவிதையிலும் சிறுகதைகளிலும் தன் அடையாளத்தைப் பதிக்க முடிந்தவரானதற்குக் காரணமாக அவரது சிறுகதைகளில் தெறிக்கும் கவித்தன்மையைத் தவிர வேறெதை உதாரணமாக்குவது?

தில்லைவெளி எனும் சிறுகதையில் அசுவாரஸ்யத்தோடு வாழ்வை அணுகும் ஒரு இளைஞனைக் கண்முன்னே நிறுத்துபவர் அவனது மழுங்கல்தனமான மனநிலைக்கு எதிர்வினையாற்றும் அதே தெருவில் வசிக்கும் முதியவரை அவனோடு உறவாட விடுகிறார்.

ஊதியம் குறைவாக வாங்கியும் அதை உயர்த்திக்கொள்ள எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாதவனின் மந்தநிலையை மாற்றி சம்பள உயர்வுக்கு அவர் வழிகோலிய நாள் தொடங்கி இருவரும் சிநேகமாகிறார்கள். ஓய்வுப் பொழுதுகளில் கூடி அளவளாவி தம் நட்பை வலுப்படுத்துகிறார்கள்.

சர்ப்பம் குறித்தான மர்மக்கதையொன்றை அவர் சொல்லிமுடித்த மறுநாளிலிருந்து அவர்கள் சந்திப்பு தள்ளிப்போக என்னவென்று இவன் விசாரிக்கையில் அவர் இறந்துபோன தகவல் வருகிறது. பின்னொரு நாளில் அவர் வசித்திருந்த வீட்டைக் கடக்கிறான்.

காலியான மனதோடு தன் இருப்பைக் கடனே என நகர்த்திக்கொண்டிருந்தவனால் அவரது உபயத்தால் இப்போது அந்த வீட்டைக்கூட காலியானதாகக் கருதமுடியவில்லையென்ற உணர்வைக் கடத்தி இக்கதை நிறைவுறுகிறது.



மாய யதார்த்த நிலையை ஓவியங்களில் மட்டுமில்லாது வாழ்விலும் கடைபிடிக்கும் ஒரு நண்பனைப் பற்றிய கவிதைதான் ‘எல்லாம் என்பது பற்றி ஒரு கவிதை.’ இதில் அந்த நண்பனோடு உரையாடிய பிறகான சந்திப்பின் முடிவில்

‘எல்லாமே வெகுளிமையாகத்தான்

இருக்கிறது

ஆனால் அந்த

எல்லாம் என்பதுதான் எதுவென்று

தெரியவில்லை’

என்றவன் உரைக்கும்போது அவரோடு சேர்ந்து நாமும் சிறிது அதிர்கிறோம். இங்கே அவர் என்பது அவனை எழுதிய அவர். இதுபோன்ற உணர்வு ஜாலங்களை வரிகள்தோறும் நிகழ்த்துவதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

நண்பர்கள்

வருகிறார்கள்

வந்தபின் போகிறார்கள்

தனிமையில் தள்ளப்பட்ட

நான் அவர்கள் வந்ததா அல்லது

சென்றதா

உண்மையில் உண்மை

என்ற உள்போதத்தில்

என்னிடமிருந்தே

நான் வந்து கொண்டும்

போய்க் கொண்டுமிருக்கிறேன்.

மனதின் உளவியலோடு நெருங்கிச் சங்கமித்து உறவாடும் இதுபோன்ற எழுத்தின் உன்மத்த நிலையை நமக்கு அப்படியே கடத்துவது ஏதேனும் ஒரு வகையில் நம் ஆழ்நிலையைப் பாதிப்பதோடு கவிதாச்சாரத்தின் அசத்தும் அழகியலை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது.

கத்தாழைச் செடி

சப்பாத்தி முள்



ஒட்டகங்களாகவே உயிரை சலித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

நகுலன் வரிகள் யாவும் தேர்ந்த இலக்கியவாதிகளையும் நேற்றுதான் வாசிக்கப் பழகிய முதிரா வாசகனையும் ஒரே கோட்டில் நிறுத்தி யோசிக்க வைக்கின்றன. எழுத்து புகட்டிய போதையில் திக்குமுக்காடச் செய்து ஞானியின் பாதையில் மிதிபடும் இலைச்சருகின் ஓசையைக் கேட்டு லயிக்க தவமிருக்கச் செய்யும் சக்தி வாய்ந்தவையே அவரது பேனாத்துளிகள். கவிதைகளைப் பொறுத்தவரை சொற்களைப் பஞ்சாரத்தில் அடைத்துத் தேவையானபோது திறந்துவிட்டு இரைமேயக் காத்திருக்கும் ஒரு பறவை மேய்ப்பனின் சாகசமும் ஒரு சொல்லும் மீந்துவிடாதபடியும் தொலைந்து விடாதபடியுமான பொறியை விரல்நுனியில் வைத்துச் சுழற்றும் அனுபவமும் அவருக்குச் சர்வசாதாரணமான கைக்கூடும் வித்தைகள்.

ராமச்சந்திரனா

எனக் கேட்டேன்

ராமச்சந்திரன்

என்றார்

எந்த ராமச்சந்திரன்

என்று நான் கேட்கவில்லை

அவர் சொல்லவுமில்லை

எனும் கவிதையில் வாழ்வின் அபத்த தருணங்களுக்குள் சிக்கி எதையெதையோ தேடியலையும் பிரயாணத்தில் எதிரில் நிற்பவரும் கடந்து செல்பவரும் காத்து நிற்பவரும் கடன் சொல்பவருமென அனைவருமே ராமச்சந்திரன்கள்தான் என நைச்சியம் பேசிச் சிரிக்கிறார்.

நகுலனின் எழுத்துக்கள் இறவாப் புகழோடு வாசிப்பவனின் ஆன்மாவைக் கிளறி விடை தெரியாக் கேள்விகளைப் புதிர் போடுவதோடு காலத்தின் சாரத்தைத் துளித்துளியாய் ருசித்துப் பயணிக்கும் சூட்சுமத்தையும் போதிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

பாலைவனச் சோலைகள் என

தோற்றமளிக்கும்

கானல் நீர் பரப்புக்குள்

ஊர்ந்து செல்லும் ஒட்டகங்கள்

இங்கும்

உயிர் சலித்துக் கொண்டிருக்கிறது

என்ற கவிதையில் பாலைவனச் சோலையாக நம் மனத்துள் எழும் பிம்பங்கள் வாழ்வில் வந்து போகும் சிற்றின்பங்களின் அணிவகுப்பாகவே தெரிகிறது. அல்ப சந்தோஷங்களுக்கான நொடிப்பொழுதில் குமிழியாய்த் தோன்றி மறையும் ஒரு கண நிம்மதியைத் தேடி நம் ஆன்மாவைக் கயிறு கட்டி மாய்ந்து இழுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்காகவா இந்தப் பிழைப்பென இளைப்பாறிச் சிந்திக்கும் நாம் யாவரும் நகுலன் நடை பழக்கிய

● ஜின்னா அஸ்மி

# ரகசியங்கள்

யாரிடம் சொல்வது
எனத் தவித்த தருணத்தில்
எனக்குள்ளிருந்து
வெளியே வந்தான் அவன்...

எல்லாவற்றையும்
எல்லோரிடமும்
சொல்லிவிட வேண்டிய
அவசியமில்லை என்றான்

மேலும்
உன்னிடம்
சில ரகசியங்கள் இருக்கிறது
அவை
உனக்குள்ளே
ரகசியமாகவும் இருக்கிறது...

வெளிப்படையான விசயங்களை
ரகசியமாக்குவதும்
ரகசியமான விசயங்களை
வெளிப்படையாக்குவதும்
ஒருவகை ரகசியங்களே...

நீ ஒரு ரகசிய செய்தியை
பிறரிடம் சொல்லும்போது
அந்தச் செய்தி
அந்த ரகசியத்திலிருந்து
தன்னை விடுவித்துக்கொள்ளும் என்றான்

நான் மௌனமானேன்

மௌனம் என்பது ரகசியமல்ல
ரகசியம் என்பது மௌனமாக இருக்கலாம்...
ரகசியத்திற்கும் மொழி உண்டு
அவை
ரகசியமாகவே பேசப்படும் என்றான்

இனி
என் ரகசியத்தைக் காக்க
நான் மனம் திறக்கப் போவதில்லை என்றேன்

ரகசியங்களை மட்டுமே
கடவுச் சொல்லாகக் கேட்கும்
கணினிக்குத் தெரியும்...
மூடி வைப்பதற்கு மட்டுமல்ல
சில நேரங்களில்
திறப்பதற்கும் ரகசியங்கள்
தேவைப்படுமென்றான்...

நான் யாரிடமும் சொல்லப்படாதவைகளே
ரகசியமென நினைத்திருந்தாலும்
என்னிடம்
சொல்லப்பட்டவைகளைக்கூட
நான் இன்னும்
ரகசியமாகத்தானே
வைத்திருக்கிறேன் என்றேன்...

இதில் ரகசியம் என்னவென்றால்
உன்னுடைய பலம் பலவீனத்தைக்கூட
உனது ரகசியங்களே
முடிவுசெய்கின்றன... என்றான்

– அவன் இன்னும் சொல்வான்...



● கோ.லீலா

# கெத்து வாத்தியம் / ஜல்லரி (சல்லரி)



தமிழிசை மிகப் பழமையான இசை என்பதோடு மிக நுட்பமும், இனிமையும் வாய்ந்தது ஆகும். இனிமை மிக்க தமிழரின் இசைக்கருவிகளில் ஒன்று கெத்து வாத்தியம் என்கிற ஜல்லரி.

**கெத்து வாத்தியம் - பெயர்க் காரணம்**

கற்றறிந்த மாந்தர்கள், கலைகளில் சிறந்து விளங்குபவர்கள், படைப்பாளிகள் போன்றோருக்கு எப்போதும் ஒரு செருக்கு இருக்கும். அதை "வித்யா கர்வம்" என்றும் சொல்வர்.

ஜல்லரி என்ற மிக இனிய இசையை எழுப்பும் இக்கருவியை இசைத்தோருக்கும் அத்தகைய செருக்கு "கெத்து" இருந்ததால் இக்கருவிக்குக் கெத்து வாத்தியம் என்றும் பெயருண்டு என்கிறது செவிவழிச் செய்தி.

கெத்து என்ற வேர்ச் சொல்லில் இருந்து Guts என்ற ஆங்கிலச் சொல் விளைந்திருக்குமோ என மொழியறிஞர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

**கெத்தின் கெத்து**

பார்க்க நரம்புக்கருவியாகத் தோன்றினாலும், உண்மையில் தான் ஒரு தாளக்கருவியெனக் கெத்து காட்டுகிறது கெத்து வாத்தியம். மிருதங்கத்தில் வாசிக்கப்படும் அத்தனைச் சொற்கட்டுகளையும் இவ்வாத்தியத்தில் பிசிறின்றி வாசிக்க முடியும். இசையரங்கங்களிலும் பக்கவாத்தியமாக இசைக்கப்பட்ட இசைக்கருவி ஜல்லரி, ஜல்லி போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

**அமைப்பு**

வீணையைப் போலவே தோற்றம் கொண்டது கெத்து வாத்தியம். குடத்தின் அடிப்பகுதி, யாழின் அடிப்பகுதி இரண்டும் தரையில் வைத்துக்கொள்ளும் அளவுக்குத் தட்டையாக அமைந்துள்ளன. சுருதியை மாற்றுவதற்கான குதிரை, இடப்புறத் தண்டியில் இடம்பெற்றுள்ளது. தண்டியில் மேளங்கள் இருக்காது. மேலே 4 வெள்ளி தந்திகள் (வேறு வேறு கன அளவுள்ளதாக) இழுத்து 4 பிரடைகளில் கட்டப்பட்டிருக்கும்.

25 மற்றும் 32 செ.மீ நீளமுள்ள இரண்டு மூங்கில் குச்சிகளால் இந்தத் தந்திகளைத் தட்டி இசைக்க வேண்டும். வீணையைப் போன்றே இதிலும் மணிக்காய்களின் மூலம் துல்லியமாக சுருதி சேர்க்கப்படும்.

இதில் மத்திய ஸ்தாயி சட்ஜம், அனுமந்திர ஸ்தாயி சட்ஜம், மத்திய ஸ்தாயி பஞ்சமம், தாரஸ்தாயி சட்ஜம் (அல்லது அனுமந்திர பஞ்சமம்) ஆகிய சுரங்கள் ஒலிக்கும். இடதுகைக் குச்சி சிறிது தட்டையாகவும், வலதுகைக் குச்சி சிறியதாகவும் இருக்கும். இக்குச்சிகளின் கைப்பிடிப் பகுதிகளில் பரல்களும் சலங்கைகளும் பொருத்தப்பட்ட

வளையமைப்பு உண்டு. இவை சலங்கை மற்றும் வெண்கல நாதத்தை உருவாக்கும்.

வலதுகைக் குச்சியைத் குதிரைப் பகுதிக்கு அருகில் தட்டினால் விதம்விதமான ஜதிக்கோர்வைகள் உருவாகும். இதை வாசிக்க மிகுந்த சாமர்த்தியமும் புலமையும் தேவை.

**புலம் பெயர்ந்த கெத்து**

தஞ்சாவூரை ஆண்ட மன்னர் இரகுநாத நாயக்கர் (1600–1645), ஒருமுறை பயண இடைவெளியில் ஆவுடையார்கோவிலில் தங்க நேர்ந்தது. அம்மன்னரை மரியாதை நிமித்தமாக ராமநாதபுரம் சமஸ்தான மன்னர் ஒருவர் சந்தித்தார். அந்நிகழ்வில், தஞ்சை மன்னரோடு வந்திருந்த சேஷய்யா, குப்பையா, சுப்பையா சகோதரர்கள் இந்த வாத்தியத்தை இசைத்து மகிழ்வூட்டினார்கள். ஜல்லரியின் நாதத்திலும் வடிவத்திலும் வாசிக்கும் முறையிலும் மயங்கிப்போன சமஸ்தான மன்னர், 'இக்கலைஞர்களையும், இந்த இசைக்கருவியையும் திருப்பெருந்துறை கோயிலுக்குக் கொடையாகத் தரவேண்டும்' என்று தஞ்சை மன்னரிடம் கோரிக்கை விடுத்தார்.

தஞ்சை மன்னர் அக்கோரிக்கையை ஏற்றுக் கொடையளித்தார். இன்று வரையிலும் சேஷய்யா சகோதரர்களின் பரம்பரையினரே கெத்துவாத்தியத்தை ஆவுடையார்கோவில் சிவயோக நாயகி சன்னிதியில் வாசிக்கிறார்கள். இவர்களுக்கு இறையிலி நில மானியமும் அளிக்கப்பட்டுள்ளது.

**பாடல்களில் கெத்து**

கெத்து வாத்தியத்தினை அகத்திய முனிவர் தனது வழிபாட்டின்போது வாசித்ததாகக் கூறுவர். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இதை வருணிக்கிறது.

துத்தங்கைக் கிளை விளரி தாரம்
உழை இளிஓசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்றோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்(து)
அத்தனை விரவினோடாடும் எங்கள்
அப்பன் இடம் திருவாலங் காடே.

சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கைலாய ஞான உலாவில் இறைவன் புறப்பாட்டிற்கு வாசிக்கப்படும் இசைக்கருவிகள் கூறப்படுகின்றன.

மேலும் ,

சல்லரியி யாழ்முழவம் மொந்தைகுழ
றாளமதி யம்பக்
கல்லரிய மாமலையர் பாவையொரு
பாகநிலை செய்து
அல்லெரிகை யேந்திநட மாடுசடை
யண்ணலிட மென்பர்
சொல்லரிய தொண்டர்துதி செய்யவளர்
தோணிபுர மாமே
(திருமுறை 3- 3.81.2, சம்பந்தர்)

தக்கைதண்ணுமை தாளம்வீணை
தகுணிச்சங்கிணை சல்லரி
கொக்கரைகுட முழவினோடிசை கூடிப்பாடிநின்
றாடுவீர்
பக்கமேகுயில் பாடுஞ்சோலைப்பைஞ்
ஞீலியேனென நிற்றிரால்
அக்கும்ஆமையும் பூண்டிரோசொல்லும்
ஆரணீய விடங்கரே
(திருமுறை 7.36.9)

விச்சா தரர்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடசுரர் – எச்சார்வும்
சல்லரி தாளந் தகுணிதந் தத்தளகம்
கல்லலகு கல்ல வடம்மொந்தை – நல்லியலத்
தட்டழி சங்கஞ் சலஞ்சலந் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம் – கொட்டும்
குடமுழவம் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாந் தடாரி படகம் – இடவிய
மத்தளந் துந்துபி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப – ஒத்துடனே

மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்குங் கிலுகிலுப்ப

(திருமுறை 11.300)

எனவும் கூறப்படுகின்றன.

ஸ்ரீ சுப்ரமண்ய சகஸ்ர நாமத்தில் 'ஜல்லரி வாத்ய சுப்ரியாய நம' என்றும், முத்துசாமி தீட்சிதரின் கிருதியில் 'ஜல்லி மத்தள ஜர்ஜர வாத்ய' (துவஜாவந்தி ராகம்) என்றும், பழைய குமாரதந்திரம் குறிப்புகளிலும் இப்பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஃபுல் பெஞ்ச்**

அந்தக் காலத்தில் சில வித்துவான்கள் தங்கள் கச்சேரிகளில் மிருதங்கத்தைப் பக்கவாத்தியமாக வைத்துக்கொள்வது போன்றே, முகர்சிங், கடம், கஞ்சிரா, கொன்னக்கோல், கெத்து போன்ற மற்ற உப பக்கவாத்தியங்களையும் வைத்துக்கொண்டு கச்சேரி செய்வது வழக்கமாகும்.

இதுபோன்று பக்கவாத்தியம், உப பக்கவாத்தியம் என்று எல்லா வித்துவான்களையும் இணைத்துக்கொண்டு கச்சேரி செய்வதற்குப் "ஃபுல் பெஞ்ச் கச்சேரி" (Full Bench Concert) என்று பெயர்.

**கோயில்களில் கெத்து வாத்தியம்:**

இடைக்காலத்தில் அதாவது சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தக் கெத்து இசைக்கருவி திருக்கோயில்களில் வாசிக்கப்பட்டு வந்துள்ளது.

"அஷ்டாதச வாத்தியங்கள்" என்று பதினெட்டுக் கருவிகள் இறைவழிபாட்டில் இடம்பெற்றிருந்தன. திருவாரூர் தியாகராஜ பெருமாள் ஆலயத்திற்கு உள்ள 18 இசைக்கருவிகளில் ஜல்லரி (பெரிய தாளம்) இருக்கிறது. மேலும், செய்யூர் என்னும் ஊரிலுள்ள திருக்கோயிலில் 'சர்வ வாத்தியம்' என்னும் பெயரில் 18 வகையான காற்றுக் கருவிகளும், தோல் கருவிகளும் இணைத்தும் தனித்தும் வாசிக்கப்படுகின்றன. இதில் 'ஜல்லரி' என்று இந்தக் கெத்து வாத்தியம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இங்கு இவை எல்லாம் அவ்வளவாக வாசிக்கப்படுவதில்லை. மேலும் மறைந்துகொண்டும் இருக்கின்றன எனலாம்.





புதுக்கோட்டை மாவட்டத்தில் திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார் கோயிலில் இந்தக் கெத்து வாத்தியம் தினசரி வாசிக்கப்படுகின்றது. அங்குள்ள ஸ்ரீ யோகாம்பிகை சந்நிதியில் தினசரி மாலை நேர பூஜையின்போது இதனை முறைப்படி வாசித்து வருகின்றனர். கி.பி.1600ஆம் ஆண்டிற்குட்பட்ட ராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களில் இந்த ஜல்லரி வாசிக்கும் கைங்கர்யம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இங்குள்ள தெய்வம் ஸ்ரீ யோகாம்பிகை யோக நிலையில் இருப்பதாக ஐதீகம். எனவே, சாயங்கால பூஜையில் மென்மையான இசையைத் தரும் வீணையும் அதற்குப் பக்க வாத்தியமாக இந்தக் கெத்து வாத்தியமும் அங்கு வாசிக்கப்படுகின்றன.

**கெத்து வாசித்த இசைக் கலைஞர்கள்**

இந்தக் கெத்து இசைக் கருவியைத் தஞ்சை சமஸ்தானக் கலைஞர்களான சேசையா சுப்பையா குப்பையா சகோதரர்களுக்குப் பிறகு கிருஷ்ணபாகவதர் (கி.பி.1803), சுப்பராம ஐயர் (கி.பி.1906) போன்றோர்களும் சிறப்பாக இசைத்துள்ளனர். சமீப காலங்களில் சீதாராம பாகவதரும் அவர் மகன்களான வீராசாமி ஐயர் மற்றும் அரிகர பாகவதரும் (1895-1976) இதனை வாசித்துள்ளனர்.

தற்சமயம், அரிகர பாகவதரின் மகன்களான சீதாராம பாகவதர் மற்றும் சுப்ரமண்ய பாகவதர் இந்தக் கெத்து வாத்தியத்தை மிகவும் சிறப்பாக வாசித்து வருகின்றனர் என்றாலும், எதிர்காலத்தில் இந்தக் கெத்து இசைக் கருவியை வாசிக்க ஆள் இல்லை என்பதுடன், இசைக் கச்சேரிகளில் இந்தக் கெத்து இசைக்கருவி முற்றிலுமாக மறைந்தும் போய்விட்டது என்பதே உண்மை நிலையாகும். ■

காலம் கடந்த காவியம்
சிறுகதை
நகுலன் நினைவுகள்


- நகுலன்
- ஓவியம் : அன்பழகன்


# ஒரு ராத்தல் இறைச்சி

என் பெயர் நவீனன். சென்ற 25 வருஷங்களாக எழுதிவருகின்றேன். நான் எழுதியது ஒன்றாவது பிரசுரமாகவில்லை. அப்படிச் சொல்வது கூடப் பிசகு. சுமார் 15 (கதை, குறுநாவல், கவிதை) பிரசுரமாகியிருக்கும். இவற்றில் 13க்கு ஒருவிதச் சன்மானமும் கிடைக்கவில்லை. 14வது கதைக்கு வந்த செக்கைக் கமிஷன் குறைத்துக் கையில் கிடைத்தது 4 ரூ. 25 பைசா.

நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவள் பெயர் சுசீலா. அவளுக்குக் கல்யாணம் நடந்தது. இப்பொழுது அவள் ஒரு தாயார். இதை நினைக்கும்பொழுதெல்லாம் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இருந்தாலும் கல்யாணம் நடைபெறுவதும் குழந்தை பெறுவதும் சர்வசாதாரணமான நிகழ்ச்சிகள் என்பதும் எனக்குத் தெரியாததில்லை.

நான் வேலை செய்து வரும் பாங்கில் எல்லோருக்கும் உத்தியோக உயர்வு, எனக்கு முன்னரே ஏற்பட்டது. எனக்கு ஒரு வருஷத்திற்கு முன்தான் உயர்வு கிடைத்தது. அப்பொழுது விலைவாசியும் உயர்ந்தது. என் உடன்பிறந்தவர்கள் அயலூரில் இருக்கிறார்கள். மூன்று வருஷங்களுக்கு முன் என் பெற்றோர்களும் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர்.

ஆனால் இதனால் ஒன்றும் நான் அசைந்துவிடவில்லை. எனக்கு ஒருவிதக் கசப்பும் ஏற்படவில்லை.



நான் கடந்த 5 வருஷமாக ஒரு நாய் வளர்த்து வந்தேன். அது ஒரு நாட்டு நாய். மங்கின செங்கல் வர்ணம். வளையாத காதுகள், குள்ளமும் இல்லை, உயரமும் இல்லை, நல்ல முரட்டுத் தேகம். அதற்கு நான்

ராஜூ என்று பெயர் வைத்திருந்தேன். அதற்கு இப்பொழுது வயோதிகம் தட்டிவிட்டது. இருந்தாலும் அது என்னுடன் அன்பாக இருந்தது. சில நாட்கள் நான் அதனுடன் பேசுவேன்.

“ராஜூ மகாலக்ஷ்மி தியேட்டரில் கைதி வந்திருக்கிறது. பார்க்கலாமா? என்ன சொல்கிறாய்?”

அது படுத்துக்கொண்டே வாலையாட்டும்.

“ராஜூ உனக்குக் கதை பிடிக்குமா? குறுநாவல் பிடிக்குமா?”

அது என்னைப் பார்த்துக்கொண்டே படுத்துக்கொண்டிருக்கும்.

ஜூரத்தில் நான் படுத்துக் கொண்டிருந்தால் என்னை விட்டு ஒரு அடி நகராது. அப்படி ஒரு தடவை நான் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கையில் என் காலில் என்னவோ வழவழவென்று ஊர்வது மாதிரி ஒரு உணர்ச்சி. நான் பயந்து சத்தம் வெளிவராத நிலையில் கண்ணைத் திறந்தபொழுது ராஜூ என் காலை நக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

ஒரு நிமிஷம் நான் அசடாகிவிட்டேன் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் இவ்வளவு அன்புள்ள ராஜூ எனக்கு வெள்ளிக்கிழமைதோறும் ஒரு பெருஞ்சோதனையாகி விட்டது என்றே சொல்ல வேண்டும். வெள்ளிக்கிழமைதோறும் வேலைக்காரன் அதற்கு இறைச்சி வாங்கி வருவான். அதை அவன் பாகமாக்கிக் கொடுக்க 12.30 மணி ஆகும். எனக்குக் காப்பிக் கொடுத்துவிட்டு அவன் இறைச்சி வாங்கப் புறப்படுவான்.

ஆனால் ராஜூ 11.30 மணிக்கே என் அறைக்கு வந்துவிடும். என்னைப் பார்த்துவிட்டு சமையல் அறைப்பக்கம் வேலைக்காரன் இருக்கும் இடத்திற்கு ஓடும். பிறகு என்னிடம் வரும், பிறகு அவனிடம் போகும். நான் அதட்டுவேன்.

ஒரு அரை நாழிகை அடங்கிக் கிடக்கும். பிறகு என்னைப் பார்த்துவிட்டு என் முகபாவம் சரியாக இருந்தால், சமையல் அறைப்பக்கம் பார்க்கும், பிறகு மெல்ல எழுந்திருக்கும். நான் ஒன்றும் சொல்லாவிட்டால் பழைய பல்லவி. அதற்கு இறைச்சி வருவதற்கு முன் எனக்குக் காபி வரும்.

அது என்னையே பார்த்துக்கொண்டிருக்கும். ‘உங்க மனித ஜாதியே இப்படித்தான். எதிரில் ஒரு நாலுகால் மிருகம் பட்டினி கிடப்பது மறந்துவிடும். உங்களுக்கு இரண்டு கால்தான். இருந்தாலும் நீங்கள்தான் பிரதானம் என்ற திமிர்’ என்று சொல்வது போல் இருக்கும். நான் கவனிக்க மாட்டேன்.

ஆனால் வேலைக்காரன் வந்து இறைச்சி வாங்க என்னிடம் காசு கேட்க வருவான். அப்பொழுது நீங்கள் ராஜூவைப் பார்க்க வேண்டும். திடீரென்று அறை முழுவதும் தலைதெறிக்க ஓடும். என் இரண்டு கால்களின் நடுவில் நுழைந்து என் கால்களை உரசிக்கொண்டு, என் காலை நக்கிக் கொடுக்கும்.

நான் எவ்வளவோ தடவை கண்டித்தும் அடித்தும் அதன் இந்தப் பழக்கத்தை மாற்ற முடியவில்லை.

‘நீ ஏன் என்னை அடிக்கிறாய்? நீ இறைச்சி வாங்கித் தருவதற்கென்றா நான் இதைச் செய்கிறேன்? நானோ நாய் ஜென்மம். மனிதன் காலை நக்குவதில் அதுவும் உன்னைப் போல் தயை காட்டுபவர்களின் காலை நக்குவதில் எங்களுக்கு ஒரு தனி ருசி. நீ இதைப் புரிந்துகொள்ள வேண்டும்’ என்று சொல்வது போல் இருக்கும்.

அதன் சுபாவத்தை என்னால் மாற்ற முடியவில்லை. அதனால் நான் வெள்ளிக்கிழமைதோறும் வீட்டிலிருக்கும்போது கூடக் கான்வாஸ் ஷூஸ் அணிந்துகொள்வது வழக்கமாகிவிட்டது.

ராஜூ அதைப் பொருட்படுத்தவில்லை. செருப்பை நக்குவதில் அதற்குப் பன்மடங்கு உற்சாகம். என் நண்பர்கள்கூட ஏதாவது “சருமவியாதி பிடித்துவிட்டதா?” என்று

கேட்டார்கள். நான் அவர்களிடம் என்ன சொல்வது. "வெள்ளிக்கிழமைதோறும் 12 மணிக்கு இறைச்சி கிடைக்கும் என்பதால் என் ராஜூ என் காலை நக்கித் தின்கிறது" என்று சொல்ல முடியுமா? நான் சிரிப்பேன்.

ஆனால் 10 நாட்கள் முன்பு நடந்த சம்பவம்தான் என்னை அசத்திவிட்டது.

அன்றும் ஒரு வெள்ளிக்கிழமை. பாம்பேயிலிருந்து என்னைக் காண்பதற்குப் பிரசித்த எழுத்தாளர் என். எஸ். கானேகர் வருவதாக எழுதியிருந்தார்.

இத்தனைக்கும் அவர் என்னை ஸ்டேஷனுக்கு வரக்கூட எழுதவில்லை, நான் போகவுமில்லை. அவராகத்தான் வீடு தேடி வந்தார். நான் அவருக்கு ஹோட்டலில் அறை எடுத்துக் கொடுக்கவில்லை. அவருடன் சேர்ந்து போட்டோ எடுத்துக்கொள்ளவில்லை. ஏன், முதல் நாள் அவர் நண்பர் ஒருவர் வீட்டில் சாப்பிட்டார் என்பதால் அடுத்தநாள் என் வீட்டில் வலுக்கட்டாயமாகச் சாப்பிடவும் செய்யவில்லை.

ஆனாலும் அவர் என்னைப் பார்க்க வந்திருந்தார். வெகு காலமாக எங்கள் இருவருக்கும் இலக்கியம் மூலமாக ஒரு பிணைப்பு. ஒவ்வொரு சமயம் என்னிடம் "என்னைவிட நீ நன்றாக எழுதுகிறாய்" என்று சொல்லியிருக்கிறார்.

எனக்கு அவர் என்னை உற்சாகப்படுத்த அப்படிச் சொல்கிறார் என்பது தெரியும். இல்லாவிட்டாலும் எங்களிருவரிடையும் நீ பெரியவன் நான் சின்னவன் என்ற சின்னத்தனமான பாவம் என்றுமே இருந்ததில்லை.

அப்படிப்பட்டவரிடம் நான் வெள்ளிக்கிழமை என்பதையும் மறந்து பேசிக்கொண்டிருந்தேன். ராஜூ சற்று நேரம் அவரையே பார்த்துக்கொண்டிருந்தது. பிறகு சமையல் அறைப்பக்கம் சென்றது. மீண்டும் என்னருகில் வந்தது. மீண்டும் வாசல் திண்ணைக்குச் சென்றது. மீண்டும் என்னிடம் வந்தது.

"இவருடன் ஏன் சமயத்தை வியர்த்தமாக்குகின்றாய்? ஏதாவது இறைச்சி கிடைக்குமோ?" என்று கேட்பது போல் இருந்தது.

திடீரென்று அது வாசல் திண்ணையில் இருந்த காக்கையைத் துரத்திச் சென்றது.

கானேகர் என்னிடம் "உன் நாய் ஏன் ஒரு மாதிரி இருக்கிறது?" என்று கேட்டார்.

நான் ஒன்றுமில்லை என்றேன். அப்படி இல்லாமல் நான் அவரிடம் என் செருப்பை நக்கச் சமயம் கிடைக்காததால் அதற்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று சொல்ல முடியுமா?

மணி 12 அடித்தபொழுது கானேகர், "வா வெளியில் போய்ச் சாப்பிடலாம்" என்றார்.

அப்பொழுதுதான் ராஜூ ஓடிவந்து என் காலின் ஆடு சதையைக் கடித்தது. கானேகர் ஆடிவிட்டார். அவர் 'முதலில் நாயைப் பிடித்துக் கட்டு' என்றார். ஆனால் ராஜூ நான் அதட்டியவுடன் அடங்கிவிட்டது. வேலைக்காரன் அதைக் கட்டினான்.

கானேகர் ஊருக்குத் திரும்பும் முன் என்னுடன் டாக்டரிடம் வந்தார். டாக்டர் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்றார். கானேகர் ரயிலில் ஏறினதும் (நான் ராஜூ என்னைக் கடித்ததும், அதன் பரபரப்பின் காரணத்தைச் சொல்லியிருந்தேன்) சிரித்துக்கொண்டே நாய்க்கு ஒரு ராத்தல் இறைச்சி என்றால் இவ்வளவு சபலமா என்று கேட்டது ஞாபகத்திற்கு வந்தது.

பத்து நாட்களுக்குப் பிறகு என் வேலைக்காரன் ராஜூவைக் கார்ப்பரேஷன் நாய் பிடிக்கிறவனிடம் சேர்த்தபொழுது எனக்குச் சற்று வருத்தமாகத்தான் இருந்தது. ஏனென்றால் அது செய்தது அவ்வளவு பெரிய குற்றமாக எனக்குப் படவில்லை. ஆனால் நான் வேலைக்காரனைத் தடுக்கவில்லை. ஏனென்றால் அது கடித்ததைவிட அது வாரந் தவறாமல் என் காலை நக்கினதுதான் எனக்குச் சகிக்க முடியவில்லை.

● ஆதிரன்

# மனநிலைக் குறிப்புகள் - 11

## ஓவிய மனநிலை

மிகவும் புகழ்பெற்ற கிரேக்கத் தொல்லியலாளர் ஸ்பைரிண்டொான் மாரினாடொஸ் (Spyridon Marinatos) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய கால சுவரோவியத் திருவிழா தற்போதைய க்ரீஸ் நாட்டின் ஏஜியன் (Aegean) கடல் தீவான சண்டோரினியில் (Santorini) உள்ளது. இது பண்டைய காலத்தில் தேரா என்றழைக்கப்பட்ட நகரமாகும். ஏறக்குறைய 5000 வருடப் பழைமையான ஏஜியன் பண்பாட்டின் அடையாளம் இந்த ஓவியங்களின் கூட்டம். ஸ்பைரிண்டொான் இவற்றை 1967 முதல் 1974 வரையில் கொஞ்சகொஞ்சமாக வெளிக்கொண்டுவந்தார். தொல்லியல் வரலாற்றில் இது ஒரு அளவிட முடியாத சாதனை என்பது என் எண்ணம். முரல் ஓவியங்களின் வகைமைகளில் ஒன்றான சுதை ஓவியங்கள் இவை.

சுதை ஓவியம் (Fresco) என்பது சுண்ணாம்பு காரைப்பூச்சு சாந்து மீது வரையப்படும் ஓர் சுவர் ஓவியத் தொழில்நுட்பமாகும். நிறமூட்டுப் பொருளுக்கான ஊடு பொருளாக நீர் பாவிக்கப்பட்டு, சாந்தினைச் சரி செய்து, வண்ணப் பூச்சு சுவருடன் சேர்ந்துவிடும் ஒன்றாக இம்முறை உள்ளது. இந்த ஓவியங்களில் ஒன்றை நான் இங்கு பகிரக் காரணம், இந்த ஓவியம் சிந்துப் பண்பாட்டினையும் ஏறக்குறைய 3600 வருடங்களுக்கு முன்னான இந்திய-கிரேக்க வணிகப் பண்பாட்டினையும் எடுத்துக் காட்டுவதாகச் சமீபத்திய தொல்லியல் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன என்பதால்தான்.

நீலநிறத்தில் வரையப்பட்ட சாம்பல் குரங்கு (Gray langurs) இந்தியத் துணைக்கண்டத்தில் மட்டுமே காணப்படும் ஒருவகை குரங்கினமாகும். இந்த வகை குரங்குகள் கப்பல் வழியாக வணிகச் செயல்பாடுகளில் இந்தியர்களால் தேரா

நகருக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். இந்தக் குரங்கிற்கு நீலநிறத்தில் ஏன் வண்ணம் அளிக்கப்பட்டது என்பது குறித்து பென்சல்வேனிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமகாலத் தொல்லியல் ஆய்வாளரான மரியா நிக்கோல் பரெஜா *(Marie Nicole Pareja)* நீண்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார். நாம் மினோவன், எகிப்து, சிந்துவெளி போன்ற நாகரீகங்களைத் தனித்தனியே பார்க்கிறோம். உண்மையில் உலகின் பண்டைய நாகரீகங்களை நாம் இணைத்துப் பார்க்கவேண்டியிருக்கிறது என்பது மரியாவின் கூற்று.

பட்டுச் சாலை *(silk road)* என்றழைக்கப்படும் பெருவணிகப் பாதை (இந்திய - சீன - மெசபடோமிய - ஐரோப்பிய இணைப்புச் சாலை) என்பது உலோகக் காலத்திலேயே இருந்திருக்க வாய்ப்புள்ளது. இந்தக் குரங்கு இந்தியாவில் இருந்து கடலில் நீந்திச் சென்றிருக்க வாய்ப்பில்லை அல்லவா அல்லது நம்ம ஊர் ஓவியன் எவனாவது அங்கு சென்று தன் வேலையைக் காட்டியிருப்பானோ?



• • •

## தத்துவ மனநிலை

தத்துவம் என்றால் ஒவ்வொரு மனிதரும் குறைந்தபட்சம் ஜெர்மனைச் சார்ந்த மெய்யியலாளர் ஃப்ரெடரிக் நீட்சேவை அறிமுகம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது எனது எண்ணம். நீட்சேவை ஒரு பக்க அளவில் வரையறுப்பது முடியாத செயல். அதனால் விக்கிபீடியாவில் இருக்கும் ஒரு குறிப்பை அப்படியே தருகிறேன், "ஃப்ரெடரிக் நீட்சே நவீன சமுதாயத்திலும் கலாச்சாரத்திலும் ஒரு நம்பிக்கையற்ற கருத்துக்களைக் கொண்டிருந்தார். பிரபலமான கலாச்சாரத்தின் கருத்துக்கு எதிராக அவருடைய கருத்துக்கள் நிற்கின்றன. பத்திரிகை மற்றும் வெகுஜன கலாச்சாரம் இணங்குவதற்கு வழிவகுத்ததோடு, மத்தியஸ்தம் பற்றியும் அவர் நம்பினார். மனித இனத்தின் சரிவுக்கு வழிவகுக்கும் அறிவார்ந்த முன்னேற்றமின்மையை நீட்சே கண்டார். நீட்சேவின் கூற்றுப்படி, இந்த வகை வெகுஜன கலாச்சாரத்தை சமாளிக்க தனிநபர்கள் தேவை. சிலர் சக்தி வாய்ந்தவராய் இருப்பதன் மூலம் உயர்ந்த நபர்களாக ஆக முடிந்தது என்று அவர் நம்பினார். வெகுஜன கலாச்சாரம் வளர்ச்சி அடைவதன் மூலம், சமூகம் அதிகமான, பிரகாசமான மற்றும் ஆரோக்கியமான மனிதர்களை உற்பத்தி செய்யும் என்பது நீட்சேவின் கருத்தாகும்."

இது நீட்சே பற்றிய ஓரளவு மொத்தச் சித்திரத்தை உருவாக்குகிறது. அவனது களேபாரமான வாழ்க்கையை அறிந்துகொள்வது ஒரு தத்துவச் சிந்தனை விரும்பும் மனிதருக்கு உறுதியான தேவை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. நீட்சே இருத்தலியல் *(existentialism)* சிந்தனையாளனா அல்லது சூனியவாதம் அல்லது விக்கிபீடியாவால் இல்லாமைத் தத்துவம் *(Nihilism)* என்று பெயரிடப்பட்ட வகைமையிலான சிந்தனையாளனா என்கிற – என்னைப் பொருத்தவரை – மிகவும் சுவாரஸ்யமான விவாதத்தை என்னுள் உருவாக்கிக் கொண்டுள்ளேன். ஆக, முதலில் இருத்தலியம் என்றால் என்னவென்றும் சூனியவாதம் என்றால் என்னவென்றும் நமக்குத் தெரியவேண்டும். இதுவும் ஒரு பெரும் கடல்பயணத்திற்கு ஒப்பானதாகும். நிறைய விளக்கங்கள், புத்தகங்கள் இணையத்திலும் கிடைக்கின்றன.

நான் என்னளவில் இவற்றை இங்கு மிகச் சுருக்கமாக அறிமுகம் செய்கிறேன். அவை எவ்வளவு சரி என்பதை வாசகர்கள் தங்களது தேடலில் கண்டடையுங்கள்.

முதலில் இருத்தலியக் கோட்பாடு என்பது அதன் பெயரளவில் இருப்பது போலவே மனித வாழ்வின் இருப்பு குறித்த சிந்தனையைப் பற்றியது. மனித இருப்பின் சாரம் என்ன என்பதை அடிப்படைக் கேள்வியாகக் கொண்டது. பொருள் அல்லது பருண்மை அதனளவில் நிலையான நோக்கத்தைக் கொண்டிருக்கிறது.. அதே நேரம் மனித இருப்பு அல்லது பிறப்பிற்கு நிலையான நோக்கம் என்பது இல்லை. எனவே அது வாழ்வு ஒரு அபத்த நிகழ்வு என்று விவாதிக்கிறது.

மாறாக இல்லாமைத் தத்துவம்.. அதனளவில் வாழ்வு என்பது ஒன்றுமே இல்லை. அது ஒரு மாயத்தைப் பிரதிபலிக்கிறது. வாழ்வின் மதிப்பீடுகள் என்பவை அடிப்படையற்றது என்றும் எதுவுமே புரிந்துகொள்ளத் தக்கதல்ல என்பதோடு எவற்றோடும் தொடர்புபடுத்திக் கொள்ளவும் இயலாது என்பதாக விவாதித்துச் செல்கிறது. மேலோட்டமாக இந்த இரண்டு தத்துவச் சிந்தனைகளும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போலத் தெரிந்தாலும் ஒன்றுக்கொன்று முரணானதாகவும் இருக்கின்றன. அபத்தத்தை ஒப்புக்கொண்டாலும் இருத்தலியம் ஒருவகையில் நேர்மறைச் சிந்தனையை வாழ்க்கையின் மீது உருவாக்குகிறது. ஆனால் இல்லாமைவாதம் தீவிர எதிர்மறையையும் அவ நம்பிக்கையையும் வாழ்வின் மீது உருவாக்குகிறது என்று சொல்லலாம். இதனடிப்படையில் நீட்சேவின் சிந்தனைகளைப் புரிந்துகொள்வது ஒரு புதிர்த்தன்மை மிக்க செயல்பாடு.

இது தொடர்பாக விக்கிப்பீடியா இவ்வாறு விவரிக்கிறது: "நீட்சே, சூனியவாதத்தை உலகை வெறுமையாக்குதல் என்றும், மனித வாழ்வின் பொருள், நோக்கம் மற்றும் உண்மை அல்லது அவசியமான மதிப்பு ஆகியவற்றிலிருந்து வெறுமையாக்குவது என்றும் கூறுகிறார். நீட்சேவின் கருத்தியல் தத்துவத்தில் இந்த விளக்கம் காணப்படுகிறது, அல்லது அவருடைய மேற்கோளான 'அறிவு' எப்போதும் யாரோ ஒருவரின் ஏதோ ஒன்று: அது எப்போதுமே கருத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது, உண்மையாக இருப்பதில்லை என்பதன் அடிப்படையில் இது விளக்கப்படுகிறது. ஆனாலும், உலகை நாம் புரிந்துகொள்வதற்கும் அதற்குப் பொருள் தருவதற்கும் பல புரிதல் வழிகள் இருக்கின்றன. புரிந்துகொள்ளுதல் என்பது இல்லாமல் நம்மால் எதையும் செய்ய முடியாது, உண்மையில் அது நமக்குத் தேவைப்படுகிற ஒன்றாகும். உலகைப் புரிந்துகொள்வதற்கான ஒரு வழி, அதனுடைய நியாயத்தின் அடிப்படையில் புரிந்துகொள்ள முயற்சிப்பதாகும். இதன் அடிப்படையிலேயே பெரும்பாலான நபர்கள் உலகைப் புரிந்துகொள்கின்றனர். குறிப்பாக அவர்களின் சொந்த எண்ணங்கள் மற்றும் செயல்களைப் பொறுத்து. நீட்சே வலுவான மற்றும் ஆரோக்கியமான நியாய உணர்வை விவரிக்கிறார். அதாவது ஒரு நபர் அதைத் தானே கட்டுகிறோம் என்று உணர்ந்திருக்கும் நிலையைக் குறிக்கிறார். வலுவற்ற நியாய உணர்வில் புரிந்துகொள்ளுதலானது புற காரணிகளிலிருந்து எழும். வலிமையின் அடிப்படையின்றி, நியாய உணர்வானது, நமக்குப் பொருளைத் தருகிறது. அது உருவாக்கப்பட்டதாக இருந்தாலும் 'கருத்தில் சேர்க்கப்பட்டதாக' இருந்தாலும் அது நாம் வாழ்வை நடத்த உதவுகிறது. இந்த காரணங்களினால்தான், நீட்சே நீலிசத்தை "உண்மையான பொருளற்றநிலை" அல்லது "எதற்கும் பொருளில்லை" என்றவாறு குறிப்பிடுகிறார், மேலும் ஆபத்தானது என்றும் "மிகப்பெரிய ஆபத்து" என்றும் கூறுகிறார். மக்களின் வாழ்க்கை, ஆபத்துக்களை எதிர்கொள்வது மற்றும் வாழ்க்கையில் சந்திக்கும் கடின சூழல்கள் ஆகியவற்றைப் பற்றிய முழுமையான மதிப்பீடாகும் இது. எல்லா வகையான

*பொருள் அல்லது மதிப்புகளையும் அழிப்பது என்பது, தற்கொலை அல்லது ஒட்டுமொத்த படுகொலைக்கு வழிவகுக்கக்கூடும்". எனவே நண்பர்களே... நீட்சேவை அறிய விரும்புபவர்கள் கவனமாக இருங்கள்.*



• • •

## இலக்கிய மனநிலை

*எனது காலத்தில் அப்பாஸ் என்றொரு கவிஞன் இருந்தான். (நன்றி: திண்ணை.காம்)*

1. நாளை

எப்படி வேண்டுமானாலும்
நீ அவைகளைப் பிடித்துக்கொள்
உனது பிஞ்சு விரல்களில்
அவை படபடப்பதே இல்லை
பயமேதும் இல்லாமல்
அவை உன் தலையிலும்
முதுகிலும் அமர்ந்து கொள்வதும்
பின்பு அவைகளை
நீ பிடிப்பதும்
விட்டு விடுவதும்
கைகொட்டி சிரிப்பதும்
புரண்டு விழுந்து எழுந்து
ஜன்னல் கம்பிகளின் ஒளியலில்
நீ
அவைகளை விரட்டித் திரிவதும்
பயமேதும் இல்லாத உனது விளையாட்டு
வண்ணத்துப்பூச்சியே
நாளையும் வா

2. குறிப்பு

அவள் விசாரித்துக்கொண்டே இருக்கிறாள்
தன் ஞாபகக்குறிப்புகளை
நீ எங்கே போனாய்
என்ன பேசிக்கொண்டிருக்கிறாய்
யார் அது
ஏன் தாமதம்
இரவு அமைதியாய் இருக்கிறது
பறவைகள் தூங்குகின்றன
அவன் உறங்கிக்கொண்டிருக்கிறான்
அவள் ஞாபகத்தில்
கொத்தப்படாத ஒரு பூ
பூத்திருக்கிறது அவனுள்

3. கோடுகள்

நான் இல்லாத வேளை
நீ என்ன செய்துகொண்டிருந்தாய்
என் மகளே
வயலின் இசைத்துக்கொண்டு
தொலைபேசியில் உன் நண்பர்களோடு
அறையினுள்

அல்லது

உனது விரல்களில் வழியும்

வர்ணங்களின் கோடுகளோடு

அப்படியேதான்

நான் இல்லாத வேளையில்

என்ன செய்துகொண்டிருக்கிறாயோ

அதுவே அதுவே

உனது வேலை

என் மகளே

4. நண்பகல்

என்னைக் கேட்காமலேயே

எனது அறையினுள் வந்துவிடுகிறது

சப்தமற்ற

இந்த நண்பகல்

பின் மதிய வேளையில்

வெளியேறும் பொழுதும்

என்னிடத்தில்

சொல்லிக்கொள்வதே இல்லை

கேட்காமலும் சொல்லிக்கொள்ளாமலும்

வரும்போகும்

நண்பகலைக் காண

நீயும் ஒருமுறை

வா

எனது மகளே

• • •

## பொதுவான மனநிலை

கடந்த மாதங்களில் கிளப் ஹவுஸ் ஒரு சுவாரஸ்யம். புத்தகம் வாசித்தல், திருக்குறள் சொற்பொழிவுகள், கவிதைகள் குறித்த உரையாடல்கள் எனச் சில நல்ல அனுபவம் கிடைத்தன. பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள் என்கிற புத்தக வாசிப்பு நிகழ்ச்சி தளத்தில் நிகழ்ந்தது. பல பெண்கள் தங்களது வாழ்வியல் அனுபவத்தைப் பகிர்ந்தார்கள். நிறைய விடயங்கள் தெரிந்துகொள்ள முடிந்தது.

அதில் முக்கியமானது மாதவிடாய்க் குருதியை மறுசுழற்சி வகைமையில் செடிகளுக்கு உரமாகப் பயன்படுத்தலாம் என்றும் அது தொடர்பான ஆக்கப்பூர்வமான ஆராய்ச்சிகள் உலகெங்கும் தொடங்கி உள்ளன என்றும் தெரியவந்தது. அதிலும் ஒரு பெண் தனது வீட்டில் வளர்க்கும் துளசிச் செடிக்கு அந்தக் குருதியை உரமாகப் போட்டுப் பரிசோதித்ததில் துளசியின் வளர்ச்சி மிகச் செழிப்பாய் இருந்ததாகச் சொன்னார். நான் வியந்துவிட்டேன். என்ன ஒரு அற்புதமான செயல். எனது வாழ்நாளில் நான் கேட்ட நல்ல செய்திகளில் அதுவும் ஒன்று.

இந்தக் குருதி உரம் பற்றிய விழிப்புணர்வைச் சில கேரள நடிகைகள் உருவாகிக்கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். நல்ல விசயம். இது தொடர்பாக இணையத்தில் அலைந்ததில் உலகத்தில் பல்வேறு நாடுகளில் விடாய்க் குருதியை மறுசுழற்சி முறையில் உரமாகப் பயன்படுத்துவது தொடர்பாக அறிவியல்பூர்வமான முன்னெடுப்புகளை உருவாக்கி வருகிறார்கள் எனத் தெரிந்துகொண்டேன். நன்று. *https://www.forg-erecycling.co.uk/blog/a-guide-to-reusable-eco-friend-lier-period-products* என்ற தளம் இதனை மிக எளிமையாக விளக்குகிறது.

இந்த கிளப்ஹவுஸ் - ஐத் தமிழ்ப்படுத்துதல் என்ற ஒரு சொல்லாடல் இணையத்தில் ஓடியது. கூட்டத்தோடு கூட்டமாக நானும் அதற்கு 'கூடுகை வீடு' என்றொரு சொல்லைக் கூறினேன். எப்பொழுதும்போல யாரும் அதைக் கண்டுகொள்ளவில்லை. ■

● தங்கத் துரையரசி
● புகைப்படம் : ஆர்.ஆர்.சீனுவாசன்



# ‘நவீனத் தமிழ்ச் சித்தர்’ நகுலன்

தமிழ்க் கவிதை உலகில் சித்தர்கள் சிலர் சிலபல காரணங்களால் தம் சித்துக்களைக் கவிதையாக்கித் தமிழன் தன் சித்தங்கலங்க சிந்தித்தாலும் அறியாமுடியாத தத்துவங்களைக் கவிதையாக்கித் தந்தனர். அத்தகைய சித்தர்களுள் நவீனத் தமிழ்க் கவிதையுலகில் நாற்பதாண்டுகள் சஞ்சரித்தவர் நகுலன். க.நா.சு உரையாட விரும்பிய இருவருள் ஒருவர்.

பாரதக்கதையில் தான் கற்ற குதிரைகளின் மொழியான பரிபாஷையில் தன்னிகரற்றவனாக அறியப்படும் பாத்திரம் நகுலன். அந்தப் பெயரைத் தம் பெயராக டி.கே.துரைசாமி அவர்கள் புனைந்துகொண்டதும் பரிபாஷை போன்றதொரு பிறர் அறியாப் பாஷையில் கவிதை புனையத் துவங்கியதும் எத்தனை பொருத்தம்..

தனக்குள் தோன்றிய வினாக்களை எதிர்வினைக் கவிதைகளாக்கியதை நேர்த்தி என்று பாராட்டலாமா? நகுலனை அறிந்தவர்கள் அவரது சுசீலாவையும் அறிந்திருப்பார்கள். தன் வாழ்நாளின் பெரும்பகுதியைத் தனிமையில் கொண்டாடிய நகுலனின் ‘கண்ணம்மா’ அவர். தனக்குள் இருந்த அவநம்பிக்கையை சுசீலாவுக்கு உடுத்தி, தனது சோர்வைக் கொண்டு அவளை அலங்கரித்திருப்பார். அவரது விளிம்பு மனத்தின் பிம்பம் சுசீலா. அவரது நினைவின் படிமங்களுக்கு அவரிட்ட புனைபெயர்.

தமிழ் மட்டுமின்றி ஆங்கில இலக்கியங்களிலும் அவருக்குப் பரிச்சயம் இருந்தது. அந்த நட்புடன் இலக்கிய உலக நண்பர்களின் நட்பும் இருந்ததால் திருமணம் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லையோ என்னவோ, வாழ்நாளின் இறுதிவரை திருமணமே செய்துகொள்ளவில்லை அவர்.

இரும்புப் பொருட்கள் உரசிக்கொள்ளும்போது ஏற்படும் விரும்பத்தகாத ஓசையைப் போன்ற கூரோசையைத் தரும் சில கவிதைகளின் ஊடே பலரும் படித்ததும் மனதில் பாடம் செய்துகொள்ளும் தன்மையில் அமைந்த கவிதைகளும் உண்டு. இவர் எழுதியவற்றுள்,

‘யாருமற்ற பொழுதுகள்

எல்லாம்’

எனும் கவிதையைப் போல !

நனவோடை உத்தி, நான்-லீனியர், கட்டுடைத்தல், அமைப்பியல், மார்க்ஸிய அழகியல் ஆகியவை கொண்டு வனையப்பட்ட கவிதைகள் ஆழ்ந்த பொருள் கொண்டவையாக இருந்தன. சொற்களில் எந்த விளையாட்டும் இல்லை. சிறப்பு கவனமும் இல்லை. ஆனாலும் ‘ஒரேயொருமுறை வாசித்ததும் புரிந்துகொள்வேன்’ என்று கூறுபவர்கள், எங்கே முயற்சித்துப் பாருங்களேன்:

‘முக்கோணத்தின்

முடிவில் ஊசிமுனையாக

ஞானம்’

நகுலனது படைப்புகளில் காலம் தன்னைப் புரட்டிப்பார்த்துச் சரிபார்த்துக் கொள்கிறது. காலமும் ஒரு உருவகமாக

பவனி வருகிறது. 'சாவிலும் ஒரு சுகமுண்டு' என்று அதனால்தான் அவரால் படைக்க முடிந்தது. தாட்சண்யமோ, முகதாட்சண்யமோ அவசியப்படாத அவரது உலகில் அலங்காரங்களைத் தவிர்த்து, அகங்காரங்களை உதிர்த்து வாழும் சித்தனாக அவர் வாழ்ந்தார். தன் வாழ்வையே கவிதையாகப் படைத்தார்.

தனிமையில் வசிப்பவனிடம் தத்துவங்கள் பிறப்பது உலக இயற்கை. பொருளற்ற கவிதைகள் பலவும் தத்துவம் எனும் பெயரில் அவரது படைப்புலகில் பிறந்தன. அதேசமயத்தில் எத்தனை முறை வாசித்தாலும் சலிப்புத்தட்டாத கவிதைகளும் அவைகளுக்கிடையில் பிறப்பதுண்டு.

உதாரணம்:

'எனக்கு

யாருமில்லை

நான்

கூட'

ஒவ்வொருமுறை வாசிக்கும்போதும் வெவ்வேறு வாசிப்பனுபவங்களைத் தரும் படைப்புகள் சிறந்தவை என்றால் இவரது சில கவிதைகள் வெகு சிறப்பானவை. ஜெயமோகன், நாணற்காடன் உள்ளிட்ட இலக்கியவாதிகள் பலரால் இவர் ஒரு இலக்கியவாதியாக ஏற்றுக்கொள்ளப்படாமல் இருப்பதோ, நேரடியான மற்றும் மறைமுகமான எதிர்மறை விமர்சனங்களை இன்றளவும் அவரது படைப்புகள் எதிர்கொள்வதோ நவீன இலக்கிய உலகில் அவருக்கான இடத்தை அசைத்துப் பார்க்க முடியாதது வியப்பே.

நகுலனின் படைப்புகளை முழுமையாக வாசித்துப் பார்த்தோ அல்லது பார்க்காமலோ கூட அவரை 'ஆகச்சிறந்த படைப்பாளி' என்று கொண்டாடுவோரும் இன்றளவும் உண்டு. 'Oxford of South India' என்று சாதாரணமாக ஒருவரைக் குறிப்பிட்டுவிட முடியுமா?

இந்தக் கும்பகோணத்து இலக்கிய மகாமகம் படைத்தளித்த கவிதைகள் மட்டுமல்ல.. கட்டுரைகளும், சிறுகதைகளும், புதினங்களும், திறனாய்வுகளும் அவரது தொடர்ந்த இயக்கத்தினால் விளைந்தவை. ஆங்கிலத்துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்தாலும் ஆர்வத்தின் காரணமாகத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்தார்.

புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். நவீனக் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் கொண்ட தொகுப்பான 'குருஷேத்திரம்' கவனம் ஈர்த்த ஒரு தொகுப்பு. அது பல்வேறு புதிய எழுத்தாளர்களை அடையாளப்படுத்தியது.

சாந்தோம் கம்யூனிகேசன் சென்டர் விருது, அமெரிக்க வாழ் தமிழர்கள் அளித்த 'விளக்கு' விருது, 'குமாரன் ஆசான்' உள்ளிட்ட பல விருதுகள் அவரைப் பெருமைப்படுத்தி உள்ளன. எழுத்து, ழ, மீட்சி, பயணம், கல்குதிரை, பாலம், மீள்சிறகு, காலச்சுவடு, முன்றில், பவளக்கொடி போன்ற இதழ்களில் இவரது படைப்புகள் இடம்பெற்றன.

நிழல்கள், நாய்கள், நவீனன் டைரி, வாக்குமூலம், அந்த மஞ்சள்நிறப் பூனைக்குட்டி, கோட் ஸ்டாண்ட் கவிதைகள், மூன்று ஐந்து, இரு நீண்ட கவிதைகள், ஒரு ராத்தல் இறைச்சி போன்றவை இவரது குறிப்பிடத்தக்க படைப்புகள். ஆங்கிலத்திலும் *Words to the wind, Non-being, A Tamil writers journal, Words to the air* ஆகியவை இவரது நேரடிப் படைப்புகளாம்.

கோணங்கி தனது 'கல்குதிரை'யை, நகுலன் வாழ்ந்தபோதே 'நகுலன் சிறப்பிதழ்' ஆக்கிச் சிறப்பித்தார். தனிமையின் தரிசனத்தை நகுலன் போன்றே தரிசிக்கும் வாழ்வமையப் பெற்றவர் கோணங்கி. 'நகுலன் இறந்தபின்னும் ஒலிநாடா ஓடிக்கொண்டிருக்கிறது' சிறுகதை நகுலனுக்கான கோணங்கியின் அழுத்தமான பதிவு. தி.ஜா.பாண்டியராஜ் என்பவர் நகுலன் குறித்த ஆவணப்படம் ஒன்றையும் இயக்கி இருந்தார். அப்படத்தையும் நகுலன் கண்ணாரக் காணக்கிடைத்தது அவரது பேறு.

எண்பது வயதிலும் எதையோ தேடிக்கொண்டிருந்தார் தனது வாசிப்பின்மூலம் அந்த இளைஞர். பிரமிளின் வார்த்தைகளில் சொல்வதானால் 'அதிர்கிற தந்தியில் குந்தாத தூசி' எனப் பயணித்தவர் நகுலன். 'நகுல்' என்னும் சொல்லுக்குக் கூருள் தரும் பல்வேறு பொருள்கள் அத்தனையும் இவரது படைப்புகளுக்கும் பொருந்தும். ■

● கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

அன்னவர் ஆயிரம் பேர்
அவை நடுவே
வீற்றிருக்க
அவையை நடத்தும்
முன்னவர் ஆயிரம் பேர்
முன் வரிசையில்
அமர்ந்திருக்க..
சத்ருக்கன் சுருதகீர்த்தி
பரதன் மாண்டவி
என
தன்னவர்களோடு
தம்பிகள் இருவர்
தனியாசனங்களை
அலங்கரிக்க...
இணையில்லாமல்
அமர்ந்திருக்கும்
இலக்குவனைக்
கண்டு
இராமன் புருவங்களை -
உயர்த்தினான்
ஊர்மிளையையும் சீதையையும்
தேடி
விழிகளை
அங்குமிங்கும் -
செலுத்தினான்...!

வில்லொத்த
புருவங்களிரண்டும்
வியப்பில் மேலும் -
விரிந்தன
விடைதெரியாத
காரணத்தால்
அவையிரண்டும்
நெற்றியைச் சுருக்கி -
நெரிந்தன...!

கண்ணசைவில்
இலக்குவனை
அழைத்தான்
கொஞ்சம்
காரம் சேர்த்து
வார்த்தைகளைக் -
குழைத்தான்
பிறர் காதுகளுக்கு
எட்டாதவாறு
தொண்டையைத் -
தழைத்தான்
"முடி சூடும் வேளையில்
ஈதென்ன புது -
குழப்பம்
மூத்தவளும்
இளையவளும்
இல்லாமல்
தீபமேற்றுவதல்ல
நம் குல -
வழக்கம்
அறிஞர்களையும்
முனிவர்களையும்
காக்க வைப்பதில்
வரும் எனக்கு
அவப்பெயரும் -
இழுக்கும்
அரை நொடியில்
அவர்களை
அழைத்து வா"
என்ற இராமனின்
குரலில் தொனித்தது
அரசனுக்கே உரிய -
முழக்கம்....!

இலக்குவன் -
எழுந்தான்
அது
அரசவை என்பதை -
மறந்தான்
அண்ணனின் பாதங்களில்
அடியற்ற மரமாய் -
விழுந்தான்...!

"தம்பி...!
இப்படி
தொட்டதற்கெல்லாம் -
தொழவேண்டுமா
பட்டதற்கெல்லாம்
பதறி -
அழவேண்டுமா
கடிந்துகொள்கையில்
எல்லாம் காலில் -
விழவேண்டுமா...
வேண்டாம்..
வேண்டாம்..
கானகம்
மீண்டதிலிருந்து
உன்னைக்
கவனித்தபடிதான் -
இருக்கிறேன்
களையிழந்து சிரிக்கும்
ஊர்மிளையின்
வதனத்தில்
கலந்தே கிடக்கிறது -
கலக்கம்
உங்கள் இருவரிடத்திலும்
இணக்கமில்லை
ஏனிந்த -
சுணக்கம்..
இதயங்கள் இணையாத
இல்லறத்தில்
இலவம் பஞ்சு கூட -
கனக்கும்
கசக்கி நுகர்ந்தாலும்
காகிதப்பூ எப்படி -
மணக்கும்..
எனது கேள்விகளுக்கு
எல்லாம்
கட்டாயம்
விடை தெரிந்திருக்கும் -
உனக்கும்... "
என்றான் இராமன்..!

"சீதையையும்
ஊர்மிளையையும்
சென்று தேடி-
அழைத்துவா..
சீக்கிரம் சீக்கிரம்"
என்று
சினந்தான் -
இராமன்....!

அவனுக்குள்
இப்போது
பிரளயப் -
பெருங்குழப்பம்
தமக்கையை
அழைத்து வரப்போன
தாரத்தின் மீதும்
தளும்பிக் கொண்டிருந்தது -
பெருங்கோபம்....!

- ஊர்மிளை வருவாள் ■

● கரிகாலன்

# தேநீர் சாலை



## வாழ்வெனும் மதுரம்!

~

குடி வாழ்வெனும் மதுரத்தைக் கசப்பாக்கிவிடுகிறது. அது பகலையும் இருளாக்குகிறது. இருளை நரகமாக்குகிறது. குடிகாரர்களுக்குத் திசைகள் இல்லை. அவர்களால் சாக்கடை ஓரத்தில் உறங்கமுடிகிறது.

நானும் சில காலம் குடியில் மயங்கியிருக்கிறேன். கழிப்பறையில் அமர்ந்தபடி தூங்கியிருக்கிறேன். குடியால் தகாத வார்த்தைகளைப் பேசியிருக்கிறேன். பொய் சொல்லியிருக்கிறேன். கடன் வாங்கியிருக்கிறேன். இத்தனைக்கும் ஒருபோதும் நான் மகா குடிகாரனாக இருந்ததில்லை.

காலையில் கண் விழித்தபோது குளியலறை செல்வேன். என்னை எனக்கே பிடிக்காது. நீ ஒரு மிருகம்! என என்னை நானே திட்டியிருக்கிறேன். அழுதிருக்கிறேன். கடவுள் நம்பிக்கை இல்லாதவன். 'இந்தப் பழக்கத்தை மறக்கவை!' கடவுளிடம் மன்றாடியிருக்கிறேன். 'பிள்ளைகள் அழகாக வளர்கிறார்கள். அவர்கள் நற்பெயரைக் கெடுத்துவிடாதே!' தமிழ் மெல்லிய தொனியில் சொல்வார்.

என்றுமே நான் அதிகம் குடித்ததில்லை. நினைவு தவறி விழுந்ததில்லை. ஆனாலும் இப்படி ஆகிவிடக் கூடாதே! எனக் கவலைப்பட்டேன். எத்தனையோ முறை உறுதியோடு மதுக்குவளையை உடைத்திருக்கிறேன். ஆனாலும் ஏதோ ஒரு பலவீன வேளையில் என் குவளை தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும். அதன் மாய உலகத்தில் பறந்து ரசிப்பதை ஒரு கவிஞனாக அனுபவித்திருக்கிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒருநாள் நிரந்தரமாக என் மதுக்குவளையைக் கடவுள் உடைத்தார். மாலைப் பொழுதில் தேநீரை அருந்தி மகிழ்ந்தேன். எனது சிடுசிடுப்பு, சிக்கலான மனம், பொய்கள், வீட்டுக்குள்ளேயே திருடுவது இவை எல்லாமே படிப்படியாகக் குறைந்து போயின.

இன்று சன்நெக்ஸ்ட்டில் வெள்ளம் பார்த்தேன். முரளி நம்பியார் (ஜெயசூரியா) எனும் குடிக்கு அடிமையான மனிதனின் கதை இது. தொடக்கக் காட்சியே குடியின் தீவிரத்தை உணர்த்திவிடுகிறது. முரளி உறவினர் கல்யாண வீட்டில் விருந்து பரிமாறுவதில் உதவுவான். அவனைப் பந்தியில் அமர்த்திச் சாப்பிட வைப்பார்கள். அவனுக்குப் பக்கத்தில் வயதான பெரிய மனிதர். காந்தியோடு போராட்டங்களில் ஈடுபட்டவர். முரளி சாப்பிடுமுன் வேட்டியில் மறைத்து வைத்திருக்கும் குவார்ட்டரைக் குனிந்து எடுத்து, பிளாஸ்டிக் டம்ளரில் சரக்கைக் கலந்து உணவு மேசையில் வைப்பான்.

காந்தியவாதி தண்ணீரென எடுத்துக் குடித்து மயக்கமாகிவிடுவார். கல்யாண வீடு ரணகளமாகும்.

முரளி குடித்துவிட்டு மயங்கி ஏரியில் விழுகிறான். கிணற்றில் விழுகிறான். தூக்கிவந்து வைத்தியம் பார்க்கிறார்கள். கண்நிறைந்த மனைவி. நன்றாகப் படிக்கும் பெண் பிள்ளை. ஆனாலும் குடும்பத்தின் அருமையைக் குடியில் மயங்கித் தொலைக்கிறான்.

உறவினர் திருமண வீட்டில் ஒரு சிறுமியின் மோதிரம் காணாமல் போகிறது. எல்லோரும் முரளியைச் சந்தேகப்பட்டு அடிக்கிறார்கள். அக்காட்சியை மகள் காணக்கூடாதேயென, கண்களைப் பொத்துகிறாள் முரளியின் மனைவி சுனிதா (சம்யுக்தா மேனன்).

மகள் பள்ளியில் விழா. தந்தையை அழைக்கிறாள் மகள். அப்போதுதான் தெரிகிறது தன்னிடம் ஒரு செட் நல்ல உடுப்புகூட இல்லையென்பது. அப்பாவின் செருப்பை அணிந்து செல்கிறான். பள்ளியில் மகளை இறக்கிவிடுபவன், அதற்குள் குடிக்க ஓடுகிறான். விழா நடக்கும் பள்ளி வளாகத்துக்கு வெளியே தெருப் புழுதியில் மயங்கிக்கிடக்கிறான்.

ஒரு கட்டத்தில் மகள் செயினையே திருடுகிறான். அதைப் பார்க்கும் மனைவி இனி முரளியோடு இணைந்துவாழ முடியாது என மகளை அழைத்துக்கொண்டு வெளியேறுகிறாள்.

குடி முரளியைச் சிறையில் கொண்டு சேர்க்கிறது. சிறைவாசம் முடிந்து வெளியே வருபவனை, அவனது நண்பர் ஒருவர் குடியை மறக்கவைக்கும் ஒரு டாக்டரிடம் சேர்க்கிறார். அந்த நண்பரைக் குடியிலிருந்து மீட்டவர் டாக்டர். டாக்டரையும் ஏமாற்றிக் குடிக்கிறான் முரளி. 'திருந்த நினைக்கிறேன். ஆனால் முடியவில்லை டாக்டர்!' அழுகிறான் முரளி.

'இந்த உலகத்தில் குடும்பம்தான் சொர்க்கம். அதை இழந்துவிடாதே!' என்கிறார் டாக்டர். திருந்திவாழ நினைக்கும் முரளிக்குக் குடிகாரன் என்கிற அவப்பெயர் தடையாய் இருக்கிறது. யாரும் வேலை தரவில்லை. மீண்டும் டாக்டரைச் சரணடைகிறான் முரளி. 'சரி, நீயே சொந்தமாக பிஸ்னஸ் செய்!' என்கிறார். 'டாக்டர் அதற்கு மூலதனம் வேண்டுமே!' முரளி தயங்குகிறான்.

'நீ இதுவரை சேர்த்த அவமானம்தான் மூலதனம்!' டாக்டர் சொல்வது அவனை எங்கோ ஆழத்தில் தொடுகிறது. புதுவகையான டைல்ஸ் ஒன்றைத் தயாரிக்கிறான். அந்த டைல்ஸைப் பார்த்து ஆச்சரியப்படும் பெரிய கட்டுமான நிறுவனர், செக்கில் எழுத கம்பெனி பெயர் கேட்கிறார். தன்னை எல்லோரும் கேலியாக அழைக்கும் நிக் நேம் ஞாபகம் வருகிறது. 'வாட்டர் மேன்' என்கிறான் முரளி. இப்போது முரளியிடம் பல தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

முரளி குன்னம்புரத்து எனும் குடிநோயாளி அடிக்ஷனிலிருந்து விடுபட்டு பெரிய பிஸினஸ்மேனாக வெற்றி பெற்றார். அவரது வாழ்வைத் தழுவிய படம். இந்தப் படத்தின் பல இடங்களில் கண்ணீர் விட்டு அழுதேன். ஏதோ ஒரு சூழலில் குடிக்க ஆரம்பிக்கும் மனிதர்கள், அதே மதுக்குவளையில் மூழ்கிப் போகிறார்கள். தம் குடிமக்கள் ஆரோக்கியமாக வாழ மருத்துவமனை கட்டும் அரசே, மதுக்கடைகளைத் திறந்து குடிநோயாளிகளையும் உருவாக்குவது நகைமுரண்.

வழக்கம்போல கலை மானுடத்தின் மீது அக்கறை செலுத்துகிறது. குடியை மய்யமாகக் கொண்ட படம் என்பதால், எந்தவிதத்திலும் அறிவுரை சொல்லவோ, ஆவணத்தன்மையின் நிறம் பரவவோ இந்த வெள்ளம் திரைப்படம் அனுமதிக்கவில்லை. இதற்காக படத்தின் இயக்குநர் பிரஜேஷ் சென்னைப் பாராட்டியாக வேண்டும்.

நிதானமாக இருக்கும்போது குடியால் பாதிக்கப்பட்டவர்கள் பார்த்தால், நிச்சயம் இந்தப் படம் அவர்களுக்கு நேர்மறையாற்றலைத் தரக்கூடும். அவர்கள் மாற்றத்தை நோக்கி ஒரு அடிவைக்க உதவக்கூடிய படம்.

• • •

## தலைவர்!

~

நிகழ்காலத்தின் வெய்யில் சுட்டெரிக்கும் வேளையில் சங்ககாலத்தின் நிழலில் ஒதுங்கி இளைப்பாறப் பயின்றவன் கரிகாலன். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்துவிடுகிறான். அவன்பால் அன்பு பூண்ட குடிகள் பலர் அவனுக்காக உயிர் துறக்கின்றனர். அவனது மாண்பை ஐயூர் முடவனார் பாடுகிறார்.

இறந்தவரைத் தாழியில் புதைப்பது தமிழர் வழக்கம். அதன்பொருட்டு குயவரிடம் வளவனோடு இறந்த அனைவரையும் சேர்த்து புதைக்குமளவு தாழி செய்து கேட்கும் வகையில் அமைந்த பாடல் இது!

**திணை - பொதுவியல்**

**துறை - ஆனந்தப்பையுள்**

**'கலம் செய் கோவே! கலம் செய் கோவே!**

**இருள் திணிந்தன்ன குரூஉத்**

**திரள்பரூஉப் புகை அகல் இரு விசும்பின்**

**ஊன்றும் சூளை, நனந் தலை மூதூர்க்**

**கலம் செய் கோவே!'** என்று தொடங்கும் பாடலில் 'புதைதாழி செய்யும் கோமகனே!

இருள் கவ்வுவது போன்ற புகை சூழும் சூளை வைத்து வளவனுக்காகத் தாழிக் கலம் செய்கிறாய். அது உன்னால் முடியாது. நீ இரக்கம் கொள்ளத்தக்கவன். நிலப்பரப்பெங்கும் பரந்து கிடக்கும் பெரும் படையை உடையவன் வளவன். புலவர் பொய்மை இல்லாது பாடிய புகழைக் கொண்டவன். வானில் எழுந்தோங்கும் ஞாயிறாகப் புகழ் உடையவன். செம்பியர் குலத்து வழித்தோன்றல். யானைமீது கொடி விளங்கத் தோன்றுபவன். நெடுமாவளவன் எனப் போற்றப்படுபவன். இவன் வானுலகம் சென்றான். இவனை இடுவதற்கு நீ தாழி செய்வாயானால் அந்தத் தாழியானது நிலம் அளவு பரந்த சக்கரத்தில் மலை அளவு மண்ணை வைத்துச் செய்யவேண்டியிருக்குமே. உன்னால் முடியுமா? முடியாதே!' எனச் சோழனின் புகழ் பாடுகிறார் ஐயூர் முடவனார்.

இதில் விசேடம் என்னவென்றால் குயவர்களைக் கோவே என்றழைத்தது தமிழ்ச் சமூகம். உழவன், ஆயன், பரதவன், மறவன், குயவன் எனத் தமிழனைத் தொழிலோடு பார்த்ததே தவிர சாதியாகப் பார்த்ததில்லை நம் சங்க மரபு.

மட்பாண்டம் செய்த குயவரைக் 'கோ' (அரசன், தலைவன்) என அழைத்த நாகரீகம் நம்முடையது. அந்த நாகரிகம் கீழடி மண்ணில் இன்றும் புதைந்து கிடக்கிறது. திராவிட நாகரீகத்தின் அடையாளமாகத் தாழி திகழ்கிறது. நம்மிடையே வெண்ணிக் குயத்தியார் என்கிற கவி வாழ்ந்து மறைந்திருக்கிறார். இறையடிகளாரை அலட்சியம் செய்து ஈசனிடம் நேரடியாகச் செல்ல முயன்ற சுந்தரர் தவறுணர்ந்து பாடுகிறார்.

'தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்
கடியேன்'

ஆறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான திருநீலகண்டர் ஒரு குயவர்!

இயற்கையைத் தனது பயன்பாட்டுக்கு உகந்ததாக மாற்றிய மனிதனது கொடையே பண்பாடு. நிலத்தைப் பிளந்து உழவு செய்ய மனிதன் கண்டுபிடித்த கலப்பை ஒரு பண்பாட்டுச் சாதனம். வெடித்த பருத்தியின் நூலிழை கொண்டு மானம் காக்கும் ஆடைநெய்ய அவன் கண்டுபிடித்த ராட்டை ஒரு பண்பாட்டுச் சாதனம்.

பெய்த மழையை உழவுக்குப் பயன்படுத்த குளங்களும் வாய்க்கால்களும் அணைக்கட்டுகளும் உருவாக்கி நீர் மேலாண்மை கண்டானே தமிழன், அது பண்பாடு!

அவ்வண்ணம், செல்லுமிடமெல்லாம் நீரெடுத்துச் செல்ல விலங்குகளின் தோலையும் சுரைக் குடுக்கைகளையும் பயன்படுத்தியவன் கண்டுபிடித்ததே மண்பானை. அது ஒரு பண்பாட்டுச் சாதனம்! இதே 'கலம் செய் கோவே!' என்கிற விளி, இன்னொரு புறநானூற்றுப் பாடலிலும் வருகிறது.

'கலம் செய் கோவே! கலம் செய் கோவே!' என்றே தொடங்கும் அந்தப் பாடலில், 'ஊருக்கெல்லாம் பிணம் புதைக்கும் தாழி செய்து தரும் தலைவனே, என் காதலனுக்குத் தாழி செய்கிறாய். பானை செய்யும் உன் சக்கரத்தில் ஒட்டிக்கொண்டுள்ள சிறிய வெண்ணிறப் பல்லி சக்கரம் சுழலுமிடமெல்லாம் செல்லுமல்லவா? அவ்வாறே என் காதலன் காட்டில் செல்லுமிடமெல்லாம் அவனோடு ஒட்டிக்கொண்டு நானும் சென்றேனே. அவன் இறந்த பின்னர் அவனை இட்டுப் புதைக்கும் தாழியில் என்னையும் இடவேண்டும். இருவரையும் இடும் அளவுக்கு அகலமுள்ளதாகப் பிணத்தாழி செய்வாயாக!' என்கிறாள் காதலி.

இப்பாடலை எழுதியவர் பெயர் சிதைந்துபோய்விட்டது. ஆனால் பாடல் அழியவில்லை. பானையை வனைந்த குயவனே சக்கரத்தைக் கண்டுபிடித்தான் எனும் உண்மையை உணர்த்தும் பாடல்.

பானை ஒரு அரிய பயனுடைய கண்டுபிடிப்பு. இன்று ஹரப்பா, மொகஞ்சதாரோ, புதுக்கோட்டை, கீழடி எனப் புதைந்து கிடக்கும் தாழிகளைச் செய்தவர்களை, இந்து சனாதனம் குலாளர்களாக, சூத்திரர்களாக மாற்றியது! பண்பாடு சாதியோடு இணைந்தபோது நமது நாகரீகத்தை இருள் மூடியது. மானமும் அறிவும் கொண்ட தமிழ்ச் சமூகம் தங்கள் விளக்குகளை அணைத்துவிட்டு, மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சத்தை உதயம் என நம்பலாமா?

நாம் தமிழர், நாமே தலைவர்! நெஞ்சு நிமிர்த்தி வாழ்வோம். கெஞ்சி யார் பின்னும் செல்லோம்!

கவிஜி

# மூளையில் ஒட்டிக்கொண்ட தோட்டா



## திரைப்படம் : The Thin Red Line (1998)

நிஜமாகவே ஒரு போரை நேரில் கண்டது போல உணர்ந்தேன்.

எதுவெல்லாம் வாழ்வென்று நினைக்கிறோமோ அதற்கு எதிர் திசையில் நின்று ஒரு நிழலைப் போலத் தொடர்ந்துகொண்டிருக்கிறது வாழ்வின் எதிர் முனை. வேட்டைச் சமூகத்தின் ஆழ்மனம் இன்னமும் துப்பாக்கி தூக்கிக்கொண்டு வெறி பிடித்து அலைகிறது. தோட்டாக்களின் கணக்கும் எதிரிகளின் கணக்கும் சமன்செய்யும் ராட்சசச் சமன்பாடுகளைப் போர் என்று சொல்லி நாமே வளர்த்தெடுப்பது நிச்சயம் சர்வ நாசத்துக்கான இன்னொரு முயற்சி.

எத்தனை வீரம் பேசினாலும்.. துப்பாக்கியின் தோட்டா இடம் மாறிவிட்டால் உயிர் போகும் படபடப்பு சொல்லி மாளாது.

*The Thin Red Line* படத்தில் ஆஸ்டென் மலை அடிவாரத்தில் இருந்து மலை உச்சிக்கு அமெரிக்க ராணுவ C கம்பெனி முன்னேறிச் செல்கிறது. ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு புல்லட் வந்து வந்து பாய்கிறது. கொத்துகொத்தாய் அமெரிக்க வீரர்கள் செத்து வீழ்கிறார்கள். யாரெல்லாம் கதை நாயகன் போலத் தோன்றுகிறானோ அவனெல்லாம் அடுத்த நொடி எவ்விதத் தனித்த ஷாட்களும் இன்றிக் குண்டடி பட்டுச் சரிகிறான். பார்க்கப் பார்க்க அமெரிக்கா பக்கம் பரிதாபம் ஏற்படும் காட்சி சடுதியில் மாறும்போது ஜப்பான் பரிதாபமாக மண்டியிட்டு அமர்கிறது. போரின் நயவஞ்சகமே இதுதான். ஒரு கை ஓங்குகையில் சரிந்த கையில் மானுடம் வீழ்ந்து கொண்டிருக்கும். மண்டியிட்ட வெற்றியின் கோப்பையில் யார் வேண்டுமானாலும் மூத்திரம் அடிக்கலாம்.

ஒரு கட்டத்தில் தலைமைக்கும் கேப்டனுக்கும் வாக்குவாதம் முற்றுகிறது. தலைமை இன்னும் முன்னேறச் சொல்கிறது. வெற்றி வேண்டும் பிசாசு மனம் அத்தனைச் சீக்கிரத்தில் சமாதானம் அடையாது. அது எட்டு திசைகளிலும் நா நீட்டிக் குருதி குடிக்கும்.

கேப்டன், "ஏற்கனவே நிறைய பேர் செத்துவிட்டார்கள். இனியும் முன்னேறினால் அது தற்கொலைக்குச் சமம்" என்று வாதிடுகிறான். அவன் பேச பேச, அவனருகே என்ன பேசுகிறார்கள், பேச்சின் முடிவு என்னவாக இருக்கும் என்று உள்ளே பயந்துகொண்டு கண்களால் ஆராய்ந்துகொண்டு நிற்கும் சக வீரர்கள்.... சிறுபிள்ளையின் தோல்விச் சாயல்கள். ஒரு கட்டத்தில் முற்றிய மனநிலையில் ஏழு பேரைக் கூட்டிக்கொண்டு முன்னேறுகிறான் கேப்டன். க்ளைமாக்ஸ் சண்டையைப் போல அப்படி ஒரு யுத்தம். துப்பாக்கிகள் வெடித்துக்கொண்டே இருக்கின்றன. புற்கள் கருகுகின்றன. புகை மண்டலம் பரவுகின்றது. மனிதர்கள் நொடிக்கு நொடி வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே முள்ளாய் நகர்கிறார்கள்.

பார்க்கப் பார்க்கவே உலகப்போரின் கோர முகம் நமக்குள் வந்து வந்து போகிறது.

மேலே சென்றால் ஜப்பானிய ராணுவப் படை பதுங்கு குழிக்குள் பத்திரமாக நின்றுகொண்டு நொடிக்குப் பல தோட்டாக்கள் சிதறும் ஐந்து துப்பாக்கிகளை நிறுத்திவைத்து ஜம்மென்று அடித்து நொறுக்குவதைக் காண முடிகிறது. தட்டுத் தடுமாறி உயிர் போய் உயிர் கொண்டு மேலே சென்ற அமெரிக்கப் படை கொலை வெறியோடு சுற்றி வளைக்கிறது. மாட்டிக்கொண்ட பின்.. துப்பாக்கி பிடுங்கப்பட்ட பின்.. இருந்த தைரியமும் இருந்த ஆவேசமும் பயமாக மாறி நடுங்குகிறது. குத்த வைத்து அமர்ந்துகொண்டு ஆடையின்றி அமர்ந்துகொண்டு தியானம் செய்துகொண்டு சரணாகதி ஆகிக்கொண்டு மண்டியிட்டுப் பரிதாபமாக ஜப்பானிய வீரர்கள் இருக்கும் காட்சி பதற வைக்கிறது. பொதுவாகவே எதிரிப் படையிடம் மாட்டிக்கொண்ட வீரர்கள் நிலை காணச் சகியாதது. பொறுத்து விளையாடிக் கொல்வது வெற்றி கொண்ட படையின் பொழுதுபோக்கு. வக்கிர வடிகால். வஞ்சம் தீர்க்கும் முறை. பார்வையில் சுய கழிவிரக்கத்தோடு நகரும் காட்சிகள் போர்க்களத்தின் முகமூடியை உரித்துப் போடுகின்றன. நிஜ முகத்தில் வழியும் குருதியில் அரசியல் புழுக்கள்.

“இந்த நாடு வெற்றி வாகை சூடிவிட்டது. அந்த நாடு அப்படி போரிட்டு வெற்றி கொண்டது” என்றெல்லாம் வரலாறு பேசுவதை நான் மறுபரிசீலனை செய்கிறேன். ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னும் முன்னால் நின்று போரிடும் வீரர்களின் மன உளைச்சலும் தடுமாற்றமும் வெறி கொண்ட மனமாற்றமும் வேறு வழியில்லாத இயலாமையும் இருக்கின்றன. தோற்றுப்போன படைகளின் பின்னால் குமுறி அழுகும் தசை நார்களின் சொதசொதத்த குடும்ப வாழ்வியலின் ரத்த நாளங்கள் வெடிக்கின்றன.

சண்டையிட்ட ஒவ்வொரு இடைவெளியின்போதும் வீட்டு ஞாபகமும் மனைவியின் நினைவும் காதலியின் பிரிவும் அம்மாவின் பாசமும்.. பர்ஸுக்குள் இருக்கும் ஏதோ ஒரு கருப்பு வெள்ளை புகைப்படம் காலத்தை நிறுத்திக் கேள்வி கேட்கிறது. கசிந்துவிட்ட வீரத்தின் பின்னால் கதவு பிடித்துக்கொண்டு எட்டிப் பார்க்கும் அன்பின் சுவடுகளைக் காண முடிகிறது. எதற்கு இத்தனை ஆயுதம்? எதற்கு இத்தனை போர்! எதற்கு இத்தனை குரூரம்....

யோசிக்க யோசிக்க பற்றிக்கொண்டு எரிகிறது பச்சைக்காடுகளின் வயிறு.

இந்த இயற்கை மிகக் குரூரமானது என்று ஒரு வசனம் கூட இடையே வருகிறது. ஆம்... இந்த மனிதர்கள்கூடத்தான் என்று இயற்கையும் மார் தட்டும். ஒரு ராணுவ வீரக் கதாபாத்திரத்தின் மனைவியிடமிருந்து வரும் கடிதத்தில் ஒரு கட்டத்தில் இன்னொருவருடன் காதல் வந்தது குறித்தும் தனிமை தன்னைக் காவு வாங்கிவிட்டது என்றும் உன்னிடமிருந்து விவாகரத்து வேண்டும் என்றும் என்னை விடுவித்து எனக்கு உதவி செய்ய வேண்டும் என்றும் எழுதியிருக்கிறது. படித்துவிட்டு என்ன எதிர் வினை புரிவதென்று தெரியாமல் சோர்ந்து சிரிக்கும் அந்த வீரனைப் பார்க்கவே பயமாக இருந்தது. ஒவ்வொரு போர் வீரனின் மனநிலையும் கணிக்க முடியாதவை. அது எப்போது எதைச் செய்யும் என்று கணிக்க முடியாத அழுத்தங்களால் சூழ்ந்திருக்கிறது. எல்லாம் அறிந்த தவிப்புகளின் வசமே இருக்கிறது அவை. இடையே மனநலம் பிறழ்ந்து தடுமாறும் வீரன் ஒருவனைக் காணுகையில்... ராணுவ வாழ்வின் போராட்டமும், கொடூரமும் சம்மட்டியால் சுடுகிறது.

இரு நாடும் சேர்ந்து ஒன்றை ஒன்று அடித்துக்கொள்வதாக இரு நாட்டு வீரர்களையும் அழித்துக் கொல்கிறது. அந்தக் காட்டைப் போலவே போரிடும் மனங்களும் பற்றி எரிகின்றன. அமைதியின்றி அலைகின்றன. “என் வயதான பெண்மணிக்கு எழுதுங்கள். என் இறப்பைப் பற்றிய செய்தியை எப்படியாவது கொண்டு சேர்த்துவிடுங்கள்” என்று கெஞ்சும் ஒரு வயதான வீரனின் இறுதிக் கெஞ்சல்கள் அருகில் இருக்கும் வீரர்களையும் குலை நடுங்கச் செய்பவை. “வாக்கை எப்படி காப்பாற்றுவது.. அந்தப் பெண்மணி

யாரென்றே எனக்குத் தெரியாதே” என்று மனம் உழலும் சக வீரனின் நெஞ்சுக்குள் இனம் புரியாத தோட்டாக்கள் பாய்வதை வெளிப்படுத்தும் முகத்தை நாம் அத்தனை சீக்கிரம் மறந்துவிட இயலாது. இத்தனை பலிகள் கொடுத்து இறுதியில் ஜெயிப்பவரின் வெற்றிக்குப் பின்னால் இருப்பது அத்தனையும் வியாபாரம். சந்தை.

இவ்வுலகம் மிக மோசமான வியாபாரத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறது. இப்படம் கூட ஓர் ஆக்கிரமிப்பின்... ஓர் அதிகாரத்தின்... ஓர் அரசியலின் மையத்தையே மீண்டும் மீண்டும் நடுகிறது.

ஜப்பான் படை சுற்றி வளைத்துவிட.... ஏற்கெனவே குண்டடி பட்டு கத்த முடியாத வேவு பார்க்க வந்த அமெரிக்க வீரன் எதிரிகளிடம் மாட்டாமல் ஆற்றில் அடித்துக்கொண்டு செல்லும் காட்சி... யாருமறியா மரணம். ஒரு தனிமனிதனின் மரணம் யாருக்கும் தெரியாமல் இருக்கவே கூடாது. கடைசியில் அவன் மரணித்ததாவது தெரிய வேண்டும். காலத்தில் இம்மாதிரி மரணங்களை எச்சில் தொட்டு அழிக்கிறது போர். இருப்பதிலேயே கொடுமையான மறைவு காணாப் பிணம் ஆவது. அந்த வீரனின் வீட்டுக்கு அவன் என்னாவாகிறான் என்ற கேள்வி அந்த ஆற்றிலிருந்து விழும் அருவியாகக் கொட்டிக்கொண்டே இருக்கிறது.

கீழ்படியாத கேப்டனைப் போரின் ஒரு கட்ட முடிவில் வீட்டுக்கு அனுப்பும் வேலையையும் வெற்றி மட்டுமே விதி என்று நம்பும் அகோரப் பசிக்கு ஆளான தலைமை செய்கிறது. சில வெற்றி மோசமான மனநிலையைப் படைக்கும் என்பதற்குச் சான்று இது.

நிஜம் ஒரு பக்கம் சுட.... இந்தப் படம் மறுபக்கம் ஆச்சரியத்தில் என்னை அசைத்துப் பார்க்கிறது.

எப்படி இப்படி ஒரு படத்தை எடுக்க முடிந்தது. ஒவ்வொரு ஷாட்க்கும் எத்தனை செலவு செய்தார்கள் என்று தெரியவில்லை. மொத்தச் செலவு 52 மில்லியன் என்று இணையம் சொல்கிறது. எத்தனை நாள் படப்பிடிப்பு நடத்தினார்கள் என்றும் தெரியவில்லை. ஒருவேளை அனுமதி வாங்கிக்கொண்டு நிஜமான ஒரு போர்ச் சூழலில் படம் பிடித்தார்களா என்று கூட சந்தேகம் வருகிறது.

நிறைய விருதுகளை வாங்கிய இந்தப் படம் எச்சரிக்கை மணியை அடிக்கிறது. யானை வரும் ஓசை அது. மோசமான மனிதச் சிந்தனையின் விளைவுதான் போர் என்ற தத்துவத்தைத் துப்பாக்கியில் மாட்டிக்கொண்டு பூமியை வலம் வருகிறது.

மாற்றி மாற்றிச் சண்டையிட்டுக்கொள்ளும் இடத்தில்.. பழங்குடிக் கூட்டம் ஒன்று வாழ்கிறது. இதுதான் நிஜத்தை யானைக் கால்கள் கொண்டு மிதிப்பது என்பது. விழும் நிழலில்... படியும் ரத்தத்துக்கு யார் பதில் தேடுவது என்று நியாயம் வியர்க்க பார்த்துக்கொண்டிருக்கும் இந்த “தி தின் ரெட் லைன்” படத்தில் நான் அறிந்துகொண்ட புரிந்துகொண்ட உணர்ந்துகொண்ட உண்மைகள்.. அழுகையோ அமைதியோ பயமோ படபடப்போ எல்லாவற்றையும் தாண்டி உயிர்கள் கொல்லப்பட படைக்கப்படவில்லை என்பதும் இந்த உலகம் வாழும் அனைத்து உயிரினங்களுக்குமானது என்பதும்.

இங்கே ஏகாதிபத்தியம்தான் இத்தனையும் செய்கிறது. தனிமனிதத் தன்முனைப்புக்குப் பலியாவதில் ஆரம்பிக்கிறது போர். போரின் கைகளில் விரல்கள் ஒருபோதும் கிடையாது. அத்தனையும் துப்பாக்கிகளே. துப்பாக்கிகள் எப்போதும் எதிரேதான் நீளும் என்பதற்கு எப்போதும் உத்திரவாதம் கிடையாது என்பதுதான் வரலாறு சொல்லும் நிஜம்.

படத்தொகுப்பு, இசை, நடிப்பு, கேமரா எல்லாவற்றையும் மீறி போரே முன்னால் நிற்கிறது. அத்தனை தத்ரூபம். அத்தனை நிஜம். அது எட்டிப் பார்க்கும் கண்களை “தி தின் ரெட் லைன்-ஜாக்கிரதை” எனப் பதைபதைக்க வைக்கிறது. படம் முடிந்த பிறகு மூளையில் எங்கோ ஒரு தோட்டா ஒட்டிக்கொண்டிருப்பதாக நம்புகிறது மனம். அது பயங்கரம்.

**இயக்குநர் : Terrance Malick**

**மொழி : ஆங்கிலம்** ■

● முனைவர் பொ.திராவிடமணி, தஞ்சாவூர்
● புகைப்படம் : ஆர்.ஆர்.சீனுவாசன்

# பன்முக ஆளுமை - நகுலன்



சுயம்புவாகத் தோன்றித் தனக்கு எவரையும் முன்மாதிரியாகக் கொள்ளாமல், தான் பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்த நவீன பிரம்மஞானி என்று போற்றப்படும் நகுலன் 21.07.1921ஆம் ஆண்டு கும்பகோணத்தில் பிறந்தார். இவரது தந்தை கேரள மாநிலம் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர் என்பதால் இவர் தமது 14வது வயது முதல் திருவனந்தபுரத்தில் வாழ்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுகலைப் பட்டத்தைப் பெற்ற இவர், கேரளப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டத்தையும், ஆராய்ச்சிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். கேரளாவில் திருவனந்தபுரத்தில் "இவானியர் கல்லூரி"யில் ஆங்கிலத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், தன் வாழ்நாளின் இறுதிவரை திருவனந்தபுரத்திலேயே வாழ்ந்தார்

இவருடைய சிறுகதைகள் "இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி" இதழிலும் வெளியாகியுள்ளன. திருவனந்தபுரத்தில் உள்ள கவிச் சம்மேளனத்தில் கட்டுரைகள் பல இவரால் படிக்கப்பட்டுள்ளன. ஆங்கில நவீன இலக்கியங்களில் ஆளுமையைச் செலுத்திக் கொண்டிருந்த ஆனைஸ் நின், சிமோன் வெய்ஸ், காஃப்கா, ஜேம்ஸ் சாய்ஸ், டி.எஸ்..எலியட் போன்றோர் படைப்புகளின் பொருண்மைகளால் ஈர்க்கப்பட்ட இவர் அது போன்ற எழுத்தைத் தமிழிலும் கொண்டுவர வேண்டும் எனச் சுயமுனைப்புடன் செயல்பட்டார். நகுலன் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பற்றி எழுதிய 'The little sparrow' என்னும் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் மிகவும் குறிப்பிடத்தக்கது. அது ஆகச் சிறந்த மொழிபெயர்ப்பாகக் கொண்டாடப்படுகிறது. மேலும் ஜேம்ஸ் ஜாய்ஸ், டி.எஸ்.எலியட், கே. அய்யப்ப பணிக்கர் போன்றோரின் நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார். 'குருசேத்ரம்' தொகுப்பும் குறிப்பிடத்தக்க நூலாகும். இது 1968இல் வெளிவந்துள்ளது.

நகுலனுடைய படைப்புகள் தொடக்கக் காலத்தில் வாசகரின் கவனத்தைப் பெறாததால், பதிப்பகத்தாரின் பார்வை அவர்மீது விழவில்லை. எனவே அவரது முதல் ஐந்து நூல்களை அவரே பணம் செலவுசெய்து வெளிக்கொண்டுவரும் சூழல் இருந்தது. இதனைத் தன் ஐந்து தொகுப்பு நூல் முன்னுரையில் பதிவு செய்துள்ளார். "எனக்கு வேலையிலிருந்து ஓய்வுபெற இன்னும் இரண்டு ஆண்டுகள் இருக்கின்றன. ஓய்வு பெற்ற பிறகு என் சொந்தச் செலவில் புத்தகங்களைப் பிரசுரிக்க முடியுமா என்பது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. அந்த நிலையில் இந்த இலக்கியச் சூதாட்டத்தில் என் கடைசிப் பைசாவையும் விளையாட முற்பட்ட துணிவே இந்த ஐந்து" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவரது எட்டாவது புதினமான 'மஞ்சள் நிறப் பூனைக்குட்டி' காவ்யா பதிப்பகம்

2002இல் வெளியிட்ட 'நகுலன் கதைகள்' எனும் நூலில் நேரடியாக இடம்பெற்றுள்ளது. நனவோடை உத்தியில் அமைந்த 'நினைவுப் பாதை' எனும் புதினம் குறிப்பிடத்தக்கது. இப்புதினம் தமிழ் இலக்கிய நெடும் பரப்பில் இவரைச் சிறந்த எழுத்தாளராக அடையாளப்படுத்தியது. புலப்பாட்டு நெறியிலும், மனிதர்களின் அகவெளியைப் பிரதிபலிப்பதிலும் சிறந்து விளங்கிய இப்புதினம் நடையாலும் புதுமையாய் மிளிர்வது.

"நகுலனின் அனுபவமும் எழுத்தாக்கமும் கனவும் நனவும் கலந்து மயக்கும் கற்பனை கடந்த நிலையில் உயிர்த்தெழும் அனுபவங்கள் மொழிவழியாக எழுத்துருவம் பெறுகின்ற இரசவாதம்" என்று இவரது எழுத்தின் இன்னொரு சிறப்பை டாக்டர் கி. நாச்சிமுத்து குறிப்பிட்டுள்ளார். மேலும், சுந்தர ராமசாமி நகுலனைப் பற்றிக் குறிப்பிடுகையில் "தமிழ் நாவல் வடிவங்களில் எந்த வகைமைக்குள்ளும் அடங்க மறுக்கும் புதுக்குரல்கள் நகுலனின் நாவல்கள்" என்பார். இவர் எழுதிய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு 1999இல் 'நகுலன் கதைகள்' எனும் பெயரில் வெளிவந்துள்ளன.

நகுலனைத் தமிழ்ச் சமூகம் ஒரு கவிஞனாகவே அடையாளம் கண்டது. இவரைத் தமிழ் நவீனத்துவக் கவிஞர்களின் முன்னோடி என்றால் அது மிகையில்லை. எவ்வித அலங்காரமும் இல்லாத இவரது கவிதைகள் பொருள் பொதிந்தவை. மனிதர்கள் பெரும்பாலும் அன்றாடம் கசப்பைத்தான் மென்று கொண்டிருக்கிறார்கள். என்றாலும் உலகியல் வாழ்வு அவர்களுக்குக் கசக்கவேயில்லை என்கிறார்.

**"அணைக்க ஒரு**
**அன்பில்லா மனைவி**
**வளர்க்க இரு நோயுற்ற சேய்கள்**
**வசிக்கச் சற்றும்**
**வசதியில்லா வீடு**
**உண்ண என்றும்**
**உருசியில்லா உணவு**
**பிழைக்க ஒரு**
**பிடிப்பில்லா தொழில்**
**எல்லாமாகியும்**
**உலகம் கசக்கவில்லை"**

திருமணம் செய்துகொள்ளாத நகுலன் தன் வாழ்நாளின் இறுதிவரை நண்பர்களுடன் கழித்தார். க.நா.சு, நீல பத்மநாபன், ஆ.மாதவன், சண்முகசுப்பையா போன்றோர் இவரது நெருங்கிய நண்பர்கள் ஆவார்.

**"ஒரு கட்டு வெற்றிலை**
**பாக்கு சுண்ணாம்பு புகையிலை**
**வாய் கழுவ நீர்**
**பிளாஸ்க் நிறைய ஐஸ்**
**ஒரு புட்டி பிராந்தி**
**வத்திப்பெட்டி சிகரெட்**
**சாம்பல் தட்டு**
**பேசுவதற்கு நீ**
**நண்பா**
**இந்தச் சாவிலும்**
**ஒரு சுகம் உண்டு"**

என்ற இக்கவிதை முழுக்க முழுக்க அவரது நினைவின் படிமம் என்கிறார் சோ.விஜயகுமார்.

**"வந்தவன் கேட்டான்**
**என்னைத் தெரியுமா?**
**"தெரியவில்லையே" என்றேன்**
**"உன்னைத் தெரியுமா?" என்று கேட்டான்**
**"தெரியவில்லையே" என்றேன்**
**"பின் என்னதான் தெரியும்" என்றான்**
**"உன்னையும் என்னையும் தவிர வேறு**
**எல்லாம் தெரியும்" என்றேன்"**

நகுலனுடைய இக்கவிதையில் அத்வைத தத்துவம் இழையோடி நிற்கிறது. ஜீவாத்மாவை விலக்கி ஸ்தூலமற்ற உலகின் தரிசன உலகுக்குள் இவர் லயித்துப் போயிருப்பதைக் காணலாம் என்கிறார் துரை.அறிவழகன். சுசீலா எனும் பெண்ணை மானசீகமாகத் தன்னுள் பிணைத்துக்கொண்ட நகுலன் தன் படைப்புகளிலெல்லாம் அவளை உலவவிட்டு மகிழ்ந்திருந்தார்.

பணி ஓய்வுக்குப் பின்னர் முழுநேர எழுத்துப் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட நகுலன் 17.05.2007இல் இறைப்பதம் அடைந்தார். நகுலன் என்ற பன்முக ஆளுமையின் பொன்னுடல் மறைந்தாலும் இப்புவி உள்ளமட்டும் அவர் புகழ் மறையாது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

● ஓவியங்கள் : அன்பழகன்

உச்சிக் கதிரவனை
அடிவயிற்றில்
சுமந்தபடி
முடங்கிக் கிடக்கிறாள்
பெருநகரத்துக் கிழவியொருத்தி...

அவள் ஞாபகத் திரட்சியின்
சிறு இணுக்குகளில்
உதிர்ந்து உடைகிறது
கத்தரிக்காயும்
கருவாட்டுக் குழம்பும்...

கன்னங்களில்
வழியும்
துளிகளின் தடங்களில்
இன்னும் மிச்சமிருக்கிறது
விறகடுப்பில் வடித்த
சுடுகஞ்சியும்
குருணைச் சோறும்...

பயணச்சீட்டு தேடும்
பதட்டத்தில்
கவனியாமலே
கடந்து போகும்
கரங்களில் ஏதோ ஒன்றில்
அகப்படலாம் அவளின்
அன்றைய பொழுதின்
கடவுச்சீட்டு...

அதுவரைக்கும்
பார்த்துக்கொள்ள வேண்டும்
இறுக்கிக் கட்டிய
துணியின் ஈரத்தைக்
காய விடாமல்.

– இனியவன் காளிதாஸ்



அகம் மலர்த்தும்
அன்பின் வேர்களில்
அப்பிக் கிடக்கிறது
பேரொளியின்
வாசம் வீசும்
எல்லாம்
இயற்றச் செய்திடும்
ஒரு நேசத்தின்
ஊற்று நீர்!
பருகிய கணங்களில்
மலர்கிறது
பூமி!
விரிகின்றன
அன்பின் ஒளிரும் சிறகுகள் !

– மகிழினி காயத்ரி

## ஏமாறும் கோலங்கள்

வாசலில் புதுக்கோலம்
வெற்று நாற்காலியின் காவலுடன்...
தாண்டிச் செல்லும்
ரசனையுள்ளவர்களையெல்லாம்
விட்டு விட்டு
மிதித்துச் செல்லும்
ரசனையற்றவர்களை மட்டுமே
எச்சரித்தும் ஏமாந்தும் விடுகிறது
நாற்காலியும் கோலமும்...

– நல முத்துகருப்பசாமி

இலைகள் கொஞ்சம்
உதிர்ந்திருக்கின்றன
மரமும் கொஞ்சம்
முதிர்ந்திருக்கிறது
நடைபாதையும்
நாற்காலியும்
மாறி இருக்கிறது
அந்தக் காகம் மட்டும்
மாறாமல் அன்றுபோலவே
இன்றும் கரைகிறது
எப்போதோ நிகழ்ந்த
பிரிவின் சாட்சியாய்...

– தீபிகா நடராஜன்

முகம் முழுக்க மஞ்சள் பூசி
தலை நிறைய எண்ணெய் தடவி
நேர் வகிடெடுத்து தலை சீவி
நாலணா அளவிற்குக் குங்குமமிட்டு
எப்போதும் பதினாறு கஜம் புடவையை
நேர்த்தியாகக் கட்டிக்கொண்டு
என் பிஞ்சு கைகளைப் பிடித்து
கம்பீரமாகச் சந்தைக்கு அழைத்துச் சென்ற
அதே அப்பத்தாதான்
இன்று எண்பது வயதில்
ஞாபக மறதியின் உச்சத்தில்
என்னை யாரென்று கேட்கிறாள்
ஐந்து நொடிகளுக்கொருமுறை
அவள் அணிந்திருக்கும் நைட்டியில்
அனிச்சையாய்த் துளி மறதியுமின்றி
முந்தானையைத் தேடிக் கொண்டிருக்கின்றன
அவள் விரல்கள்...

– பிரபுசங்கர்_க

ஆரவாரமற்ற மௌனத்தில்
கடல் தேடி நகர்கிற அலை
திசை மாறிக்
கரை தொட்டு
சலசலக்கும் சலம்பலில்
கடத்தும் ஏகாந்தத்தை
சட்டென எழும்பி
ஒன்றையொன்று
துரத்தி
இடையிடையே
அலை தடவி
மீன் கொத்திப்
பறக்கும் நாரைகள் கலைத்து
விதைக்கிறது ஏக்கத்தை.

– ரத்னாவெங்கட்



● ந.பத்மகுமாரி
● ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# அவள் வழி

“யாரயாச்சு காதலிச்சிருப்பா, அதான் ஓடிப்போய்ட்டா” என்ற பேச்சு காற்றில் கலந்து ஊர் முழுவதும் பரவிக் கிடந்தது. கோலம் போட வாசலுக்கு வரும்பொழுதும், பிள்ளைகளைப் பள்ளிக்கு வழியனுப்ப வரும்பொழுதும், கடைகளில் பொருட்கள் வாங்கும்போதும் எனச் சந்தர்ப்பம் கிடைக்கும் இடங்களில் எல்லாம் தங்கள் கற்பனைத் திறனையும் கொஞ்சம் தெளித்து அவரவர் ரசனைக்கேற்ப “அந்த ஓடிப்போன பிள்ளை...” என்று ஆரம்பித்து அவளின் வாழ்நாள் கதையை வடிவமைத்துக்கொண்டனர். தங்கள் வீட்டுப் பெண் பிள்ளைகளைத் தாங்கள் சரியாக வளர்த்திருப்பதாய்க் கூறி தனக்குத் தானே பாராட்டுப் பத்திரம் வாசித்துக்கொண்டனர்.

“பொம்பள பிள்ளய வேலைக்கு விடக் கூடாதுனு சும்மய சொல்லுகது..”

“குனிஞ்ச தலை நிமிராம போய்ட்டு, என்ன ஊம வேல பாத்திருக்கு!”

“படபடனு பேசுக பிள்ளைகள நம்பிரலாம். இந்த ஊம கொட்டான்கள நம்பிரவே கூடாது..”

என்று தங்கள் அபிப்ராயங்களைத் தீர்ப்புகளாய் வழங்கிக்கொண்டிருந்தனர், நேற்று வரை “பிள்ளனா நிலாவ மாதிரி இருக்கணும்” என்று கூறித் திரிந்த ஊர் மக்கள்.

ஒரு வாரத்திற்கு முன்பாக நிலா பார்த்துக்கொண்டிருந்த, வேலையை அவள் விட்டுவிட வேண்டும் என்று அவளை முடிவெடுக்க வைத்திருந்தார்கள்.

வழக்கம் போல் அவர்கள் முடிவை அவள் தலையாட்டித் தன் முடிவாக்கிக்கொண்டாள். அது அவளுக்குப் பல வருடங்களாகப் பழகிப் போயிருந்தது. தலையாட்டி பொம்மை கூட நம் அளவிற்குத் தலையாட்டி இருக்காதோ என்று அடிக்கடி அவள் நினைத்திருக்கிறாள்.

அப்படி நினைக்கும்போதெல்லாம் இடப்புற மார்பின் கீழே சுளீரென்று குத்துவது போன்று உணர்வாள். சில நேரங்களில் அந்தக் குத்தல் ஒரு நிமிடக் குத்தலாக இல்லாமல் சில நிமிடக் குத்தலாக நீடிக்கும். அந்தக் குத்தல் தரும் வேதனையைப் பொறுத்துக்கொள்ள முடியாத நேரங்களில் வாய்விட்டு அம்மாவிடம் கூறி விடுவாள். அம்மா 'வாய்வு' என்று கூறி வெள்ளைப் பூண்டு உரித்து நசுக்கிக் கொடுத்து வெந்நீரும் கொடுப்பாள். அது "வாய்வு" தந்த வலி இல்லை என்று தெரிந்தும், அம்மா தரும் பூண்டுத் துண்டை விழுங்கி வெந்நீரை வாயில் ஊற்றிக்கொள்வாள்.

அலறும் கைபேசி கையருகே இருந்தாலும் அதில் அலறிக் குதிக்கும் சிவப்பு பச்சை பொத்தான்கள், துள்ளி அடங்கும் வரை வேடிக்கை பார்த்துவிட்டு அழைப்பை ஏற்றுப் பேசாமலேயே இருந்தாள் அன்று.

எதிர்முனையில் நெருங்கிய தோழி என்று தெரிந்தும் எடுத்துப் பேச மனமில்லை. மீனா நிலாவின் கல்லூரிக் காலத்தில் அவளுக்கு வாய்த்திருந்த ஒரே நெருக்கமான தோழி. நிலா யாரிடமும் எளிதில் பழகிவிடும் குணம் கொண்டவள் இல்லை. யாரிடமும் அவள் முதல் பேச்சை ஆரம்பிக்கமாட்டாள். "ஆமை" ஓட்டுக்குள் உடலை அடக்கிக்கொள்வது போல், அவள் தன்னைத் தனக்குள் அடக்கிக்கொள்வாள்.

எப்பொழுதும் கண்களில் ஒரு ஏக்கமா சோகமா கலக்கமா என்று பார்ப்பவர்களால் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியாத ஏதோ ஒன்று படர்ந்துகிடக்கும். பள்ளி நாட்களில் எடுத்திருந்த கூட்டுப் புகைப்படங்களிலோ அல்லது வேறு தனிப் புகைப்படங்களிலோ எதிலும் மருந்துக்குக்கூட ஒரு சிறு துளி புன்னகையையேனும் அவள் முகத்தில் காண முடியாது. அவள் முகத்தில் அப்படி ஒரு சோகம் சதாநேரமும் படர்ந்திருப்பதைப் பற்றி முதன்முதலில் அவளிடம் கேள்வி எழுப்பியது, மீனாதான்.

கல்லூரி முதல் நாளில் கடைசி ஆளாக வகுப்பறையில் நுழைந்தபோது மீனாவிற்கு அருகில் விடுபட்டிருந்த இடத்தைத் தனக்கானதாக நிலா மாற்றிக்கொண்டிருந்த போதிலும் மீனாவிடம் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

மீனாதான் முதலில் பேச்சை ஆரம்பித்தாள்.

"நீ சிரிக்கவே மாட்டியா?" என்பதுதான் மீனா நிலாவிடம் பேசிய முதல் வரி.

முன்ன பின்ன பேசி பழக்கம் இல்லாத தன்னிடம் எப்படி இப்படி ஒரு கேள்வியோடு மீனாவால் பேச்சை ஆரம்பிக்க முடிந்தது என்பது, நிலாவிற்கு ஆச்சரியமாக இருந்தாலும், அவளின் அந்த வெளிப்படையான பேச்சில் ஏற்பட்ட ஈர்ப்பால் நாளடைவில் நிலா மீனாவை நெருங்கிய தோழியாக ஏற்றிருந்தாள்.

பள்ளிக் காலத்தில் நிலாவிற்குத் தோழி என்று யாரும் தனியாக இருக்கவில்லை. அவளைப் பொறுத்தவரையில் எல்லோரும் வகுப்பில் கூட படிக்கும் மாணவிகள், 'கிளாஸ்மேட்ஸ்' அவ்வளவுதான். அவ்வளவே அவள் அவர்களோடு நெருக்கம் கொண்டிருந்தாள்.

நிலா எப்பொழுதும் பாடப் புத்தகத்தில் மூழ்கிக் கிடப்பாள். தவறிய நேரங்களில் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக்கொள்வாள். வகுப்பில் நன்றாகப் படிக்கும் சில மாணவிகளில் நிலாவும் ஒருத்தி என்பதால் உடன் படிக்கும் மாணவிகள் அவ்வப்போது பாடங்களில் கேட்கும் சந்தேகத்தைத் தீர்த்துவைப்பாள். அதுதான் அவளுக்கும் மற்ற மாணவிகளுக்கும் இடையே பேச்சு நடக்க ஒரே காரணமாக இருந்தது. பாட சந்தேகங்களைத் தீர்த்துவைப்பதில் நிலாவிற்கு இருந்த சுட்டிக்காரத்தனமும் பொறுமையும் அதிக மாணவிகள் அவளிடம் சந்தேகம் கேட்பதற்குக் காரணமாக இருந்தன.

கடிவாளம் கட்டிய குதிரையைப் போல், படித்து மதிப்பெண் குவித்துக் கிடப்பதே என் பணி என்று ஓடியே அவள் பள்ளிக் காலம் முடிந்து போனது. ஆசிரியர்கள் அவளைச் 'சிறந்த மாணவி' என்று பாராட்டினார்கள். வகுப்பு மாணவிகள் 'படிப்ஸ்' என்று பட்டம் கொடுத்தார்கள். எல்லாரும் அவளுக்குப் படிப்பில் மிகுந்த ஆர்வம் என்று நினைத்துக்கொண்டார்கள். ஆனால் அவள் மனம் மட்டுமே அறிந்திருந்தது அது 'ஆர்வம்' இல்லை 'பயம்' என்று.

அது அவள் 'அப்பா' மீது அவள் கொண்டிருந்த பயம். அப்பா அம்மாவைப் பக்கத்து அறையில் அடித்து மிதித்துக்கொண்டிருந்த போதிலும் அந்த பயம் முன் அறையில் இருந்த அவளை நிப்பாட்டாமல் படிக்க வைத்தது. பக்கத்து அறைக்குச் சென்று அடி வாங்கும் அம்மாவிற்காக நியாயம் கேட்டால் அப்பா தன்னையும் அடித்து மிதிப்பார் என்ற பயம் அவளை வீட்டின் முன் அறையிலேயே கைகளில் புத்தகத்தோடு கட்டிப் போட்டது. சிறு வயதில் ஏதோ ஒருமுறை அம்மாவை அடிவாங்காமல் காப்பாற்றுவதற்காக அவள் சென்றபோது 'நீ படிக்காம இங்க எதுக்குடி வந்த, ஒழுங்காப் போய்ப் படி டீ' என்று அப்பாவிடம் அடி வாங்கிய அனுபவம் அவளுக்கு இருந்தது.

பரிட்சையில் ஒரு மதிப்பெண் குறைந்தாலும், அவள் கண்ணீர் சிந்தியது அவள் வகுப்பு மாணவிகளுக்கு அநியாயமாகத் தெரிந்தது. ஆனால் அந்நேரங்களில் அவள் நெஞ்சில் நிகழ்ந்த பூகம்ப அதிர்வுகளை அவள் மட்டுமே அறிந்திருந்தாள்.

அவள் கண்ணீருக்கு "பொறாமை" "கொழுப்பு" என்று ஏதேதோ பெயர்கள் வைக்கப்பட்டன. ஆனால் எதுவும் அவள் கடிவாளத்தை உடைக்கவில்லை. அவள் நேராகப் படிப்பு மட்டுமே இலக்கு என்று ஓடிக்கொண்டிருந்தாள். அவள் மனதின் பயம் அவள் கடிவாளத்தை உடைக்க விடாமல் அரணாக நின்றது.

அவள் கடிவாளத்தில் முதல் முறையாக ஓட்டை போட்டு உள்ளே நுழைந்தது மீனா மட்டுந்தான். அது எப்படி நிகழ்ந்தது என்று நிலாவே அறிந்திருக்கவில்லை. அது நிகழ்ந்துவிட்டது அவ்வளவுதான்.

அவள் மீனாவிடம் பேசும் நேரங்களில் மட்டும், அவ்வப்போது சிரித்தாள். நிலாவின் முகத்தில் படர்ந்திருந்த சோகத் திரையின் காரணத்தைப் பற்றி அவள் எப்பொழுதும் மீனாவிடம் மனம் திறந்ததில்லை. ஆனால் மீனாவோடு இருக்கும் நேரங்களில் மட்டும் அவள் வாழ்வின் சோகப் பக்கங்களை மறந்து சிரித்தாள். நூலகம், கல்லூரி வளாகக் கோவில் என்று எங்கு சென்றாலும், மீனாவும் நிலாவும் சேர்ந்தே இருந்தார்கள்.

நடக்கும்போதெல்லாம் நிலாவின் தலை கவிழ்ந்தே இருக்கும். அவள் கண்கள் அவளின் பெருவிரலைப் பார்த்தபடி அவள் நடப்பதாகக் கல்லூரி மாணவர்கள் அவர்களுக்குள் கிசுகிசுத்துக்கொண்டார்கள்.

'அவ அமைதியான பொண்ணு டா' 'பொண்ணுனா இப்படி அடக்கமா இருக்கணும் டா' 'இது சாத்வீகம் டா' என்று மாணவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். வகுப்பிலேயே அமைதியான அடக்கமான மாணவி என்ற பட்டமும் வகுப்பு மாணவர்கள் தரப்பில் இருந்து அவளுக்குத் தரப்பட்டிருந்தது. ஆனால் அது அடக்கமும் இல்லை அமைதியும் இல்லை என்று அவள் மட்டுமே அறிந்திருந்தாள். அது 'பயம்'.. ஆமாம் அதுவும் அவள் அப்பாவால் அவளிடம் தொற்றியிருந்த பயம். நிமிர்ந்து நடந்தால் அவள் எதிரே வரும் மாணவர்களின் தலைக்கு மேல் அவள் அப்பாவின் தலை பொருத்தப்பட்டிருந்ததாய் அவள் கண்களுக்குத் தெரிந்தது. அவள் உடல் நடுக்கம் கண்டது . அவள் அம்மா அடி தாங்க முடியாமல் அலறும் சத்தம் அவள் காதுகளில் கேட்டது.

அவள் படித்த பள்ளி பெண்களுக்கான பள்ளி என்பதால் பள்ளி வளாகத்தில் இந்த அசௌகரியம் அவளுக்கு ஏற்படவில்லை. ஆனால் கல்லூரியில் மாணவர்கள்

இருப்பதால் அவளுக்கு அசௌகரியம் இருந்தது. வகுப்பில் மாணவர்கள் அமர்ந்திருந்த பக்கம் ஏதேச்சையாகக் கூட திரும்பிவிடாத அளவுக்கு அவள் கவனமாக இருந்தாள். அவள் குனிந்தபடி நடப்பதில் இருந்த ரகசியத்தை மீனாகூட அறிந்திருக்கவில்லை.

“அமைதியான பொண்ணு” என்ற வெளி பிம்பத்தில் அவள் பயத்தை மறைத்தபடியே நான்கு வருடங்கள் கல்லூரி படிப்பை முடித்துவிட்டாள். மாணவர்கள் யாரேனும் வம்படியாக அவளிடம் வந்து பேசும்பொழுது நடுங்கும் அவள் விரல்களை இறுக்க மூடி அவள் பயத்தை மறைத்துக்கொண்டாள். முகத்தில் நடுக்கம் தெரியாத அளவிற்கு முடிந்த வரையில் சமாளித்துப் பதில் கூறி நகர்ந்துபோனாள்.

கைபேசி இரண்டு முறை அலறி முடிந்திருந்தது.

“பக்கத்திலே போன் அடிக்கு. ஏன் எடுக்காம இருக்க?” அம்மா கடந்து போகும்போது கேட்டபடி போனாள்.



“அது போன் கம்பெனி கால் ம்மா” நிலா பதில் கூற தலையாட்டியபடி புளி டப்பாவோடு சாமான் அறையிலிருந்து சமையலறைக்குப் போயிருந்தாள் அம்மா.

அழைப்பை ஏற்றுப் பேசினால், எல்லா வழக்கமான சம்சாரணைகளையும் முடித்த பிறகு “அப்புறம் எதும் அலைன்ஸ் வந்ததா?” என்ற கேள்வியில் வந்து நிற்பாள் மீனா. அதுக்குப் பதில் கூற வேண்டுமென்றால் ஒரு வாரத்திற்கு முன்பு வந்த மாப்பிள்ளை வீட்டார் பற்றியும், இந்த வாரக் கடைசியில் மாப்பிள்ளை வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு பெண் பார்க்க மாப்பிள்ளையை அழைத்து வருவதாய், அவர்கள் சொல்லிப்போன செய்தியையும், அவளிடம் சொல்ல வேண்டி வரும்.

அதில் அவளுக்கு ஒரு அசௌகரியம் இருந்தது. தன்னிடம் எந்தச் சம்மதமும் கேட்கப்படாமல் தன் வாழ்வில் நடந்தேறும் சம்பிரதாயங்களைப் பற்றிப் பேச அவளுக்கு எரிச்சலாக இருந்தது. இன்று மீனாவின் அழைப்பைத் தட்டி கழித்து விட்டுவிட்டால், இன்னும் ஒரு வாரத்திற்கு இதைப் பற்றி யாரிடமும் பேச வேண்டாம். அதில் ஒரு மன அமைதி இருப்பதாக அவள் உணர்ந்தாள்.

கல்லூரி முடிந்து அவரவர் வாழ்க்கைப் பாதை தனி என்று பிரிந்த பிறகு, நிலா ஒரு தனியார் நிறுவனத்தில் வேலைக்கு சேர, மீனா சமையல் கற்றுக்கொண்டு வீட்டோடு இருந்துவிட்டாள். தனக்கு இருக்கும் வசதிக்குத் தான் இன்னொருவரிடம் கைகட்டி வேலை பார்க்க வேண்டாமென்று மீனா முடிவெடுத்திருந்தாள். மீனாவின் குடும்பத்தாரும் அதே கருத்தைக் கொண்டிருந்தனர்.

மீனாவை மாதிரி நெருக்கமான தோழிகள் யாரும் நிலாவிற்கு வேலை பார்க்கும் இடத்தில் அமையவில்லை. உடன் இருந்தவர்களோடு வேலை நிமித்தமாக மட்டும் பேசிக்கொண்டாள். உடன் பணிபுரிந்த ஆண்களோடு பேசும்போது ஏற்படும் நடுக்கத்தை முடிந்தவரை கச்சிதமாக மறைத்துக்கொண்டாள். இரண்டு நாளுக்கு ஒருமுறை என்ற கணக்கில் மீனாவிற்கும் நிலாவிற்கும் இடையே நடந்துகொண்டிருந்த தொலைபேசிவழி உரையாடல் ஒரு வருடத்திற்கு முன்பு மீனாவிற்குத் திருமணம் ஆனபிறகு ஒரு வாரத்திற்கு ஒருமுறை என்று மாறியிருந்தது.

மீனாவிற்குத் திருமணமான பிறகு அவள் ஒவ்வொரு முறை நிலாவிடம் பேசும்பொழுதும் “எப்படி கல்யாணம் பண்ணிக்க போற?” “எதுவும் அலைன்ஸ் வந்திச்சா?” இப்படி ஏதேனும் ஒருவகையில் நிலாவிடம் திருமணப் பேச்சை ஆரம்பித்துவிடுவாள்.

“திருமணம்” என்ற வார்த்தையைக் கேட்ட மறுநொடி நிலாவிற்கு அம்மாவின் வலியும் அலறலும் காதில் கேட்க, கை கால்கள் நடுக்கம் எடுத்துக்கொள்ளும். ஆனால் அவள் மனதின் அந்த ரணங்களைப் பற்றி அவள் மீனாவிடம் எதுவும் கூறாமல், எப்படி எப்படியோ பேச்சை மாற்றித் தப்பித்துவிடுவாள்.

அவள் அப்பா ஏன் அப்படி இருக்கிறார் என்று அவளுக்குள்ளாகவே கேள்வி எழுப்பிக் கொள்வாள். அவர் குடிகாரர் இல்லை, எந்தப் போதை பழக்கத்திற்கும் அடிமை இல்லை, ஆனால் அம்மாவை அடிக்கடி அடித்து உதைத்தார். வெளியில் பார்ப்பவரோடு நன்றாகச் சிரித்துப் பேசிப் பழகுவார். ஆனால் வீட்டிற்குள் எதிர்மாறாய் நடந்துகொண்டார். பெண் என்பவள் ஆணின் காலடிகளில் வாழப் பிறந்தவள் என்ற நினைப்பை ஒவ்வொரு அசைவிலும் வெளிக்காட்டினார்.

“என் மக படிப்பில கெட்டி” என்று எல்லோரிடமும் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் போதைக்காக நிலா கோட்டை விடும் ஒவ்வொரு மதிப்பெண்ணுக்கும் பிரம்பால் கணக்கு கேட்பார்.

தன் தகுதிக்கு மீறி உழைத்துத் தேய்ந்து அவளை என்ஜினியரிங் வரை படிக்க வைத்து அவர் வெளிப்பெருமைக்குத் தீனி போட்டுக்கொண்டார். ஆனால் மகள் எந்த வகையிலும் தைரியமானவளாய் மாறித் தன்னை எதிர்த்துவிடாமல், அவளை அடிமையாய் வைத்திருப்பதில் கவனமாய் இருந்தார்.

ஆனால் அவரின் இந்த எல்லா அடக்குமுறைகளையும் தாண்டி ஒருமுறை நிலாவிற்குத் “திடீர் வீரம்” ஒன்று முளைத்தது. “ஏன் எதுக்கெடுத்தாலும் அம்மாவ போட்டு அடிக்கிறீங்க” என்று அப்பாவின் எதிரே நின்று கேள்வி எழுப்பினாள். “இப்படி இருக்க வீட்டுல மனுஷன் இருப்பானா.. இந்த வீட்டில இருக்கவே பிடிக்கல” என்று கத்தினாள்.

அப்பா எதுவும் கூறாமல் அம்மாவை அடிப்பதை நிறுத்திவிட்டுப் பக்கத்து அறைக்கு விறுவிறுவெனச் சென்றார். கையில் வெள்ளை முறுக்குக் கயிறோடு திரும்பியவர், கண் இமைக்கும் நேரத்தில் கயிற்றை நிலாவின் கழுத்தில் சுற்றி “இந்த வீட்டில இருக்க பிடிக்கலேனா செத்துப் போ” என்று கயிற்றை இன்னும் இறுக்கினார்.

நிலா அவர் பிடியிலிருந்து தப்பிக்க முயற்சி செய்யவில்லை. கண்களை மூடிக்கொண்டு அசையாமல் இருந்தாள். அம்மா அப்பாவிடம் போராடி நிலாவின் கழுத்தில் இருந்து அவர் பிடியைத் தளர்த்தினாள்.

அதுதான் அவள் அப்பாவிற்கு எதிராக அவள் எழுப்பியிருந்த கடைசிக் குரல். அது அவள் பதினேழாவது வயதில் நிகழ்ந்தது. அதன் பிறகு அப்பாவை எதிர்க்க நிலாவிற்குத் தைரியம் வரவில்லை. அவரை என்ன செய்தும் மாற்ற முடியாது என்று அவள் நம்ப ஆரம்பித்தாள்.

“ஆம்பளைங்க எப்படி இருந்தாலும், பொம்பளைங்க அனுசரிச்சுப் போனாத்தான் குடும்பம் உருகுலையாம இருக்கும்..” அம்மா அடிக்கடி இதை நிலாவின் காதுபட தனக்குத் தானே சொல்வது போல் சொல்லிக்கொள்வாள். “வீட்டாம்பிள கொடுமைக்குப் பயந்து வீதில இறங்குனா பொம்பிள வாழ்க்கை சீரழிஞ்சிப் போகும்” என்றும் கூறுவாள்.

தன் அம்மாவின் இயலாமையை நினைத்து நிலா நொந்துகொண்டாலும், அவளால் செயலில் எதையும் வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை. ஏதாவது செய்து இதைச் சரி செய்ய வேண்டும், ஆனால் என்ன செய்து சரி செய்ய முடியும் என்று தெரியாமல் குழம்பிப் போனாள். ஒருவிதச் சலிப்பும் சோகமும் விரக்தியும் ஒட்டடை போல் அவள் வாழ்வை அடைத்திருந்தன. அவளின் இயலாமையை நினைத்து உலையில் வைத்த தண்ணீராய் அவள் மனது அடிக்கடி கொதித்தது. இப்படியே நாட்கள் நகர்ந்திருந்தன.

அன்று அதன் பிறகு மீனாவின் அழைப்பு வரவில்லை. சொன்னபடி அடுத்த வாரக் கடைசியில் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் மாப்பிள்ளையைப் பெண் பார்க்க அழைத்து வந்திருந்தார்கள்.

“பொண்ணு வேலைக்குப் போகக் கூடாது. வீட்டுல இருந்து வீட்ட பாத்துக்கணும்” என்ற விதிமுறையை மாப்பிள்ளையின் அக்கா மீண்டும் நினைவுபடுத்தினாள்.



வாயில் இருந்த பற்கள் அத்தனையும் வெளியில் தெரியும்படியான புன்னகையோடு "அதுலாம் பண்ணிக்கலாம்" என்று நிலாவின் அப்பா தலையாட்டினார்.

நிலா அழைத்து வரப்பட்டு மாப்பிளையின் எதிரே நிறுத்தப்பட்டிருந்தாள்.

"பொண்ண பிடிச்சிருக்கா?" வந்திருந்த பெரியவர்களில் ஒருவர் கேட்டார்.

மாப்பிள்ளை பதில் கூறாமல் பெண்ணை வச்ச கண்ணை எடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

"நிமிந்து மாப்பிள்ளையை நல்லாப் பாத்துக்கோமா" கூட்டத்திலிருந்து ஒரு பெண் குரல் கேட்டது.

ஏற்கனவே புகைப்படத்தில் அம்மா காட்டியபொழுது அரைகுறையாகப் பார்த்த முகம்தான் என்றாலும், வந்த குரல் ஆணைக்கு மரியாதை தருவதற்காக, தலை நிமிர்த்திப் பார்த்தாள். எதிரே இருந்த மாப்பிள்ளையின் உடலில் அப்பாவின் முகம் பொருத்தப்பட்டிருந்தது.

அவள் நடுங்கிய விரல்களைப் பொத்தி அமுக்கிக்கொண்டு, தலையைக் குனிந்துகொண்டாள்.

"ரொம்ப அடக்கமான பொண்ணு" குசுகுசுக்கும் சத்தம் கேட்டது.

"மாப்பிளையும் பொண்ணும் தனியா பேசணும்னா பேசிக்கட்டும்" வந்திருந்தவர்களில் ஒரு நடுத்தர வயதுக்காரர் சொன்னார்.

"ஆமா இப்ப அது எல்லா இடத்துலேயும் நடக்குதே" இன்னொருவர் துணை சேர்ந்தார்.

மாப்பிள்ளையும் பெண்ணும் தனியாகப் பேசுவதற்காகப் பால்கனியில் விடப்பட்டிருந்தனர்.

மாப்பிள்ளையின் பேச்சில் ஆங்காங்கே அப்பாவின் சாயலைக் கண்டாள் நிலா. அவள் இதயம் வேகமாகத் துடித்தது.

"பிடிச்சிருக்கோ பிடிக்கலியோ இவனதான் நம்ம கல்யாணம் பண்ணிக்கணும். இந்த தனியா பேசுறது ஒரு "நவீன சடங்கு". அவ்வளவுதான்" நிலா அவளுக்குள் கூறிக்கொண்டாள்.

மாப்பிள்ளை வீட்டார் கிளம்பி வெகுநேரம் வரை அப்பா அவர்களின் சொத்து மதிப்பைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்தார்.

"என் அப்பா மாதிரி எல்லா ஆம்பளைங்களுமில்ல. ஆனா சரியான ஒருத்தர தேர்ந்தெடுக்கிறதுக்கான நேரமும் வாய்ப்பும் இங்க கண்டிப்பா கிடைக்கப்போறதில்ல.." நிலா கட்டிலில் சாய்ந்தாள்.

தூக்கத்திலும் அப்பாவின் முகம் பூரித்துப்போயிருந்தது. அம்மாவின் முகமும் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது. நிலா புரண்டுபுரண்டு படுத்துக்கொண்டிருந்தாள்.

காலையில் பரபரப்பாக நிலாவைத் தேட "மனைவி என்கிற பெயரில் அடிமையாய் வாழ விருப்பமில்லாமல் கிளம்புறேன். மன்னிச்சிருங்க அம்மா" என்ற வரியைச் சுமந்த கடிதம் மேஜையில் படபடத்துக்கொண்டிருந்தது.

நிலா ஏதோ ஒரு ஊர் பேருந்து நிலையத்தில், தான் வந்திறங்கிய பேருந்தில் தனது ஊர் பெயர்ப் பலகை மீண்டும் மாட்டப்படுவதைப் பார்த்தபடி தோள்பையோடு தனியாக நின்றுகொண்டிருந்தாள். ■

● மௌனன் யாத்ரிகா

# கற்பதுவே.. கேட்பதுவே..!

## கவிஞர் வெய்யில்



**எப்போதும் கலையின் பின்னால் மாபெரும் ரத்தச் சரித்திரம் இருந்துகொண்டே இருக்கும் என்று படித்திருக்கிறோம். அது அப்படித்தானா?**

ஆம். அது தவிர்க்க இயலாதது. மனித நாகரிக வரலாற்றில், கலையின் அத்தனைக் கிளைப்பாதையிலும் ரத்தம் தோய்ந்தே இருக்கிறது. இது கலையில் மட்டும் நிகழ்வதா என்றால் இல்லை. அறிவியல், தத்துவம், ஆன்மிகம், கல்வி, கருத்தியல் என உலகத்தின் இயக்கத்தில் பங்குகொள்ளும் எல்லாத் துறைகளுக்கும் பொதுவானதே. சாக்ரடீஸ், கலீலியோ தொடங்கி நம்மூர் நந்தன் வரை. ரோஸா லக்சம்பர்க் தொடங்கி நம்மூர் கல்புர்கி, கௌரி லங்கேஷ் வரை பட்டியல் பெரிது. காலனிய அதிகாரத்துக்கு எதிராக நாக்கை அறுத்துக்கொண்ட பாட்டுக்காரர்களின் கதையெல்லாம் ரொம்பவே உக்கிரமானது. கலை இலக்கியத்தில் ஏன் இது அதிகம் நிகழ்கிறது என்றால், கலை இலக்கியம் மனித அகத்தை வேறு எதைக்காட்டிலும் கூர்மையாக

ஆழமாகப் பாதிக்கக்கூடியது. கலை இலக்கிய நினைவுகள் நீதியாக, அறமாக, தெய்வமாக மாறச் சாத்தியமுள்ளவை. எனவே, அதன் மீது எப்போதும் நிகழ்கால அதிகாரம் கூடுதல் தணிக்கையை, ஒடுக்குதலைச் செய்கிறது. மீறினால் தண்டிக்கிறது.

செம்புலப்பெயல் நீர் - கண்ணகி - பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - இப்படி ஒரு பாத்திரம், ஒரு படிமம், ஒரு பொயட்டிக் ஸ்டேட்மெண்ட் எவ்வளவு வலுவானதாக இருக்கிறது!? இன்றைக்குச் சாதி மறுப்புத் திருமணப் பத்திரிகைகளில் 'யாயும் யாயும்' அச்சேறிக்கொண்டிருக்கிறதே. மக்களை இவ்வளவு பாதிக்கும் ஒன்றை அதிகாரம் கண்காணிக்கவே செய்யும். அதன் விளைவுகளில் ரத்தத் தெறிப்புகள் தவிர்க்க இயலாதவை.

**வாழ்வை - அதன் அகப்புறப் பாடுகளை; சமூகத்தை - அதன் பண்பாட்டை; அரசை - அதன் கட்டுமானத்தை; நிலத்தை - அதன் திணையமைப்பை எழுதுவதே இலக்கியத்தின் செவ்வியல் பண்பென்கிறார்கள். சமகாலக் கவிதைகளில் அந்தப் பண்பு இருக்கிறதா?**

'செவ்வியல் பண்பு' என்பதற்கு இங்கு தாங்கள் தந்திருக்கும் விளக்கம் துல்லியமானது என்று நான் கருதவில்லை. மூலத் தனிச்சிறப்புடைய மற்றும் குறிப்பிட்ட இலக்கிய வகைமையில் நிகழும் புதிய சாதனைப் படைப்பைச் செவ்வியல் படைப்பு என்கிறோம். அந்த வகையில் செவ்வியல் பண்பு என்பதை ஒருவாறு ஊகித்துக்கொள்கிறேன். அப்படியான பண்பு கொண்ட படைப்புகள் நிறையவே எழுதப்படுவதாக, முயலப்படுவதாகப் பார்க்கிறேன். தமிழில் எழுதும் எந்தவொரு கவிஞரும் தன் பயணத்தில் ஒரு கவிதையிலாவது அதைச் சாதித்துவிடுகிறார்.

மேலும் வாழ்வியல் - மரபு - அரசியல் - என்பவை இன்று ஒன்றோடொன்று முயங்கிக்கிடக்கின்றன. உண்மையில், ஒரு தமிழ்க் கவிஞன் எனும் தன்னிலை, ஆகக் குழப்பமான ஓர் புள்ளியில் அதாவது சிதறடிக்கப்பட்ட காலம் மற்றும் வெளியில் நிற்கிறான். இது விசித்திரமான காலகட்டம். தேசிய குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின்படியான 'தேசிய மக்கள் பதிவேட்டிற்கு' ஒரு குடிமகனிடம் இருக்க வேண்டிய சான்றிதழ்கள், ஆவணங்கள் இல்லாத நிலையில் ஒரு கவிஞன், தன் மொழியின் இரண்டாயிரமாண்டு இலக்கியப் பிரதிகளை அவசர அவசரமாக ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டிருக்கும் சித்திரம் மனதில் தோன்றுகிறது. இந்தச் சித்திரம் செவ்வியல் பண்புகொண்டதா இல்லையா? :)

அதேசமயம், வலதுசாரிக் கோட்பாட்டாளர்கள், விமர்சகர்கள், படைப்பாளிகள் செவ்வியல் பண்பு - செவ்வியல் படைப்பு என்று முன்வைக்கும் வரையறைகள் தனி தாவா.

**கவிதைக் குறித்த வெளிப்படையான உரையாடல் தமிழ்ச் சூழலில் சாத்தியமற்றதா? ஆம் எனில், அதை மாற்ற என்ன செய்யலாம்?**

பல்லாயிரம் ஆண்டுகளாய் உரையாடல்கள் வழியாகவே தமிழும் தமிழ் இலக்கியமும் செழித்து வளர்ந்திருக்கிறது. ஆகவே, எப்போதும் பெரும்பாலான படைப்பாளிகள் உரையாடலுக்கு ஆயத்தமாகவே இருக்கிறார்கள். ஆனால், அதை எங்கு நிகழ்த்துவது என்பது முக்கியமான கேள்வி. நிதானத்துடனும் கண்ணியத்துடனும் தொடர்ச்சியாகவும் விவாதிக்க நிச்சயம் முகநூல் சரியான தளம் அல்ல. சாதி, வட்டாரம், ஸ்கூல் ஆஃப் தாட்! என நிறைய குறுங்குழுக்கள் கொண்ட தமிழ் அல்லது இந்திய இலக்கியச் சூழலில் உரையாடல் என்பது அந்தரக் கயிற்று மேல் நடப்பதுதான். நாம் கலைஞர்கள் என்பதால் அந்தக் 'கூத்தை'யும் முயல்வோம்.

• • •

# கவிஞர் பெருந்தேவி



**சமகாலத் தமிழ்க் கவிதையுலகில் 'மாஸ்டர்கள்' இருக்கிறார்களா? இருப்பின்... மாஸ்டர்களை எதன் அடிப்படையில் தேர்வு செய்வீர்கள்? அப்படி யாருமே இல்லை என்றால், ஏன் யாரும் உருவாக முடியவில்லை என்று சொல்ல முடியுமா?**

சமகாலத் தமிழ்க் கவிதையுலகம் என்றால் அதில் ஆத்மாநாம் இருக்கிறார். இதே கேள்வியைப் பத்தாண்டுகள் கழித்துக் கேட்டாலும் அன்றைய உலகத்திலும் அவர் இருப்பார். சில மாதங்களுக்கு முன் தில்லியில் நடந்த வன்முறை நிகழ்வுகள் பற்றி ஒரு சிநேகிதியிடம் உரையாடிக்கொண்டிருந்தபோது, "இந்த நகரத்தை எரிப்பது" என்ற கவிதையை வாசித்துக் காட்டினேன். "தனியொருவன் எரித்தால் வன்முறை அரசாங்கம் எரித்தால் போர்முறை," என்று கவிதையை முடிக்கும்போது "சமகாலத்தை இதைவிட எழுதிவிட முடியாது, நீ எழுதினாயா என்ன?" என்று கேட்டாள். "இல்லை, ஆத்மாநாம்" என்றேன். ஆத்மாநாமுக்குப் பிறகும் சமகாலத்துக்கானவையாக, எதிர்காலத்திலும் வாசகர்கள், தொடர்புகொள்ளக்கூடிய கவிதைகளை எழுதும் சில கவிஞர்கள் தமிழ்ச்சூழலில் இருக்கிறார்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் என்றாலும் இருக்கிறார்கள். பெயர்ப்பட்டியல் வம்பைக் கொண்டுவரும் என்பதால் தவிர்க்கிறேன்.

இந்த 'மாஸ்டர்' என்ற பயன்பாடு பற்றிச் சொல்ல நினைக்கிறேன். அவ்வளவாக இத்தகைய பயன்பாடு குறித்தெல்லாம் நாம் யோசிப்பதில்லை. இது ஆணை முன்னிலைப்படுத்தும் ஆண்பாலுக்கான பயன்பாடு. இதற்கு ஒப்புமையான பெண்பால் சொல் 'மிஸ்ட்ரெஸ்.' ஆனால், பாருங்கள், 'மாஸ்டர்' என்பதில் 'கற்றுத் தேர்ந்தவர்' அல்லது 'மேதை' என்ற பொருள் வருகிறது. ஆனால் 'மிஸ்ட்ரெஸ்' என்றாலோ சமூகத்தில் என்ன பொருள் என்று உங்களுக்குத் தெரியும். என்னை நான் நவீனத் தமிழ்க் கவிதையின் 'மிஸ்ட்ரெஸ்' என்று சொல்லிக்கொள்கிறேன். நவீனக் கவிதைக்கும் எனக்குமான ஈடுபாடு சமயத்தில் வெளியில் சொல்லிவிடமுடியாத அளவுக்கு அந்நியோன்யமானது, ஒழுங்குக்குள் வராதது, உணர்ச்சிபூர்வமானது.

**கவிதை என்பது நம் திணையமைப்பில் வேர் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அது தன் மொழிக்கும் தன் மாந்தரின் வாழ்வுக்கும் நெருக்கமாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அது குறித்து உங்கள் கருத்து என்ன?**

சமகாலக் கவிதை மாத்திரமல்ல, இங்கே வரக்கூடிய எந்தச் செறிவான இலக்கிய ஆக்கமும் தமிழ் மரபின் சாயலன்றி இருக்க முடியாது. நிலமும் வீடும் உடலும் உயிரும் அவ்வவற்றின் சாரத்தோடு சாரமாகப் பின்னிக் கலந்திருப்பன அல்லவா? ஆனால், திணை என்பது, இங்கே பொதுவாகப் பல எழுத்தாளர்களாலும் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதைப் போல, பொருண்மையான நிலம் அல்ல, அல்லது அது மட்டுமே அல்ல. திணை அது சுட்டும் நிலமும் பொழுதும் சேர்ந்த உணர்வுகளோடு கூடியது.

ஏ.கே. ராமானுஜன் கூறியதைப் போல திணை என்பது நம் பண்பாட்டுக்கான அடிப்படையான குறியியல் சட்டகம் (se-

*miotic framework),* அழகியல் சட்டகம். நிலப்பரப்போடு பொழுதும் உணர்வும் ஊடாடி இயங்கும் யதேச்சையான சட்டகம் அது. தமிழ்ச் செவ்வியலின், அழகியலின் ஆகச் சிறந்த *episteme* ஆன திணை என்பதை, நாடகத் திரை போன்ற நிகழ்வுக்கான பின்னணியாக மட்டும் புரிந்துகொள்வது போதாமையுள்ள புரிதல். ஆனால், இங்கே பெரும்பாலும் அப்படித்தான் திணையை மேலோட்டமாகப் பேசுகிறார்கள். கவிஞர்களையும் வகைப்படுத்துகிறார்கள். ஒரு கவிதையில் வயல் வந்தால் மருதக் கவிஞர், மீன் வந்தால் நெய்தல் கவிஞர் என்பதெல்லாம் குறைபட்ட, நகைக்க வைக்கக்கூடிய புரிதல்.

**நவீனத் தமிழ்க் கவிதையைப் புரிந்துகொள்வதில் ஒரு வாசகனுக்கு நாம் எப்படி உதவி புரியலாம்? ஏனெனில், ‘புரியவில்லை’ என்னும் அந்த வாசகக் குரல் இப்போதும் கேட்டுக்கொண்டேதான் இருக்கிறது.**

நவீனத் தமிழ்க் கவிதையை வாசகனுக்கு மாத்திரமல்ல, வாசகிக்கும் புரியவைக்க வேண்டும். பாருங்கள், எவ்வாறு ஆண்பால் மையமாகவே இலக்கியச் சொல்லாடல் நம் மத்தியில் இருக்கிறதென்று.

சரி, கேள்விக்கு வருவோம். இதற்கு ஒரே வழி, கவிதையைப் பற்றிய தீவிர உரையாடலை முன்னெடுப்பது. அருமை, அற்புதம் போன்ற பதங்களைத் தாண்டி, கவிஞர் பட்டியலை விதவிதமாக முன்வைத்து தாம் சார்ந்திருக்கும் குழுவைக் காண்பித்துக்கொள்வதையும் தாண்டி, நிஜமான அக்கறையோடு கவிதையைப் பேசுவது. அதில் மொழி இயங்கும் நுண் தளங்களைப் பேசுவது, அர்த்தங்களின் சாத்தியங்களைப் பரிமாறிக்கொள்வது, கவிதை சுணங்கும் இடத்தைப் புரிந்துகொள்ள முயல்வது, கவிதையின் பேசுபொருளிலோ, தொனியிலோ, கூறல் முறைமையிலோ புதுமை இருந்தால் அதைத் தேடிக் கண்டடைவது... இப்படி உரையாடல் பல வகைகளில் நடக்கலாம். இவை எல்லாம் நடக்கவேண்டும்.

இத்தகைய உரையாடலை நோக்கி நகர மேம்போக்கான கவிதை ஆர்வம் மட்டும் போதாது. ரசனை, கோட்பாடு என எல்லாத் தளங்களிலும் கவிதைத் திறனாய்வு வளர வேண்டும். ஆனால் திறனாய்வில் நாம் தேங்கியிருக்கிறோம்.

• • •

# கவிஞர் குட்டிரேவதி



**தமிழ் எழுத்துச் சூழலை நாலா பக்கமும் ஆண்கள் சூழ்ந்துகொண்டு நின்ற காலத்தில் அந்த வேலியில் மிகப்பெரும் உடைவை ஏற்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர் நீங்கள். இப்போதும் அந்த வேலிச் சிதைப்பு தேவைப்படுகிறதா?**

எப்பொழுதுமே அந்தச் சிதைப்பு தேவைப்படுகிறது, தேவைப்பட்டுக்கொண்டுதான் இருந்திருக்கிறது என்று நினைக்கிறேன். மேலும், இன்று பெண் என்னும் அடையாளப் பாலியல் இருப்பினால் மட்டுமே நிகழ்வது அன்று; கருத்தியலாலும் நிகழ்வது என்ற சூழலுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

பல பெண் எழுத்தாளர்கள், “நான் பெண். ஆனால், பெண்ணிய எழுத்தாளர் அல்ல” என்று குறிப்பிடுவதைப் பார்த்திருக்கிறேன்.

சமூகவியலும் காலங்காலமான பெண்ணுரிமைக் கருத்தியலுக்கான பெண்களின் போராட்டங்களின் வரலாறும் அறிந்தவர்கள், உணர்ந்தவர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள். தனக்கானது என்று ஏதுமில்லை இங்கே.

மற்றெல்லாத் துறைகளிலும் ஒவ்வொரு பெண்ணும் நிகழ்த்தும் ஒவ்வோர் அடிச்சிதைப்பும் கூட, பெண் எழுத்திற்கு, இலக்கியத்திற்கு வெகுவான பலம் சேர்த்திருக்கிறது என்பதையும் பெண்கள் உணரவேண்டும்.

ஆண்களை எதிராளிகளாகப் பார்க்கும் மேலைத்தேயக் கருத்தியலில் இருந்து நாம் பெருமளவு முன்னகர்ந்திருக்கிறோம். இங்கிருக்கும் சாதிய அமைப்பைவிடச் சிக்கலானது இல்லை பெண் - ஆண் பாலியல் பிளவு. இந்தச் சாதிய அமைப்பு, பெண் - பெண்ணுக்கிடையிலேயே சிண்டு முடிந்துவிடக்கூடியது; பெண்ணுக்குப் பெண்ணை எதிராக்கக் கூடியது.

**நமது பண்டைய கவிதை மரபு வெறும் வாழ்க்கைப்பாடுகளையும், பண்பாட்டுக்கூறுகளையும் மட்டும் கொண்டதல்ல. மாறாக, இயற்கையியல் (திணை சார்ந்த கருப்பொருள்), அறிவியல், மருத்துவம், தத்துவவியல் அனைத்தும் உள்ளடக்கியது. உங்களுடைய அண்மைப் பிரதிகள் இயற்கை மற்றும் மருத்துவம் சார்ந்த சாராம்சத்தைக் கவனத்தில் கொண்டுள்ளன. அது குறித்துச் சிறு அறிமுகம் கொடுங்கள்.**

'அண்மைப் பிரதிகள்' என்று இல்லை. தொடக்கத்திலிருந்தே, வெளியாகி இருக்கும் பதின்மூன்று தொகுப்புகளிலுமே அப்படியான கலவையாகத்தான் என் கவிதைகள் நிறைந்திருக்கின்றன. இப்பொழுதுதான் கவனம் பெறுகின்றன, வாசிப்பிற்கு வருகின்றன, உரையாடலை ஏற்படுத்துகின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம்.

'நான்', என்று இல்லை. எல்லாக் கவிஞர்களிடமுமே இதைக் காணமுடியும். தம் பின்னணியில் நீங்கள் குறிப்பிட்டிருக்கும் ஏதோ ஒரு துறை அல்லது கருத்தியல் சார்ந்த ஆழத்தில் அதிக விசையுடன் அவர்கள் நீச்சலுக்கு இறங்கியதில்தான் கவிஞர்களாகியிருப்பார்கள். கவிஞர்கள் என்றாலே அப்படித்தான். தனித்த இருப்பு கொண்டது அன்று, கவிஞராக இருப்பது. இந்தப் பூவுலகத்தினுடனான தன் இணைப்பை மொழிமயமாக்கிக்கொண்டே இருப்பது.

**கவிதையை எப்போதும் புதுப்பித்துக்கொண்டே இருக்க வேண்டும். இந்தச் சிந்தனை பாரதிக்குப் பிறகு தற்காலத்தில் அதிகம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். உங்கள் பார்வை என்ன?**

"கவிதையை எப்போதும் புதுப்பித்துக்கொண்டே இருக்கவேண்டும்" என்ற சிந்தனை இன்று அதிகம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், 'பாரதிக்குப் பிறகு தற்காலத்தில்' என்பதில் வேறுபடுகிறேன். காலந்தோறுமான படைப்பிலக்கிய அலையைப் புதுப்பிப்பதில் கவிஞர்களின் பங்கு பெருமளவில் இருந்திருக்கிறது.

கவிதைத்தளத்தில் பாரதிக்குப் பிறகு எவ்வளவோ இங்கே நிகழ்ந்துவிட்டன. என்றாலும், கவிஞர்களுக்கான சமூக முக்கியத்துவம் கொடுக்கப்படாததால்தான் இது பாரதிக்குப் பிறகு என்று இன்னும் எங்கேயோ தூரத்திலேயே நிறுத்தப்பட்டுவிடுகிறது.

நாவல், சிறுகதைத் தளங்களில் நிகழாத, நிகழ்த்த முடியாத பெரிய எழுச்சிகளையும், புரட்சிகளையும், மறுமலர்ச்சிகளையும் நவீனத் தமிழ்க்கவிஞர்கள் நிகழ்த்தியிருக்கின்றனர். கவிஞர் என்றால் பிழைக்கத் தெரியாத அசடு என்பதன்று அர்த்தம். கவிஞர் என்றால் அவர்தான் ஆகச்சிறந்த அறிவுஜீவி; அச்சமூகத்தின் அறிவு மரபின் நீட்சியும் அடையாளமும் என்றே அர்த்தங்கள். ■



● கு.ஜெயபிரகாஷ்
● புகைப்படம் : ஆர்.ஆர்.சீனுவாசன்

# நகுலனுக்குள் நகுலன்கள்

நகுலனின் எழுத்தில் என்னதான் இருக்கிறது? நகுலனின் எழுத்தில் எல்லாமும்தான் இருக்கிறது! சில சமயம் ஒன்றும் இல்லாததைப் போன்று தோன்றியவை கூட சிறிது இடைவெளிக்குப் பின் வாசித்தால் விசாரமாக என்னுள் இறங்கி என்னையே என்னவென்று கேள்வி எழுப்பி உலுக்குகிறது. அவற்றையே இன்னுமொரு இடைவெளிக்குப்பின் வாசிக்கையில் கவனத்தை ஈர்க்காமல் பிரதியிலிருந்து என்னை வெளித்தள்ளி உள்ளிழுக்கும் ரசவாதமும் கொண்டிருக்கிறது.

பொருளின் மதிப்பீடுகளை முன்வைத்து நகரும் இந்த வாழ்வில் ‘இருப்பதற்கு என்றுதான் வருக்கிறோம், இல்லாமல் போகிறோம்’ என்ற இந்த வரியை மிக எளிதாகக் கடந்துவிட முடியாது.

அதீத தனிமைக்குள் நகுலன் நகுலனுக்குள்ளே பேசிக்கொண்டிருக்கிறார். மனம் பேதலித்தவனுக்குத் தன்னைத் தவிர வேறு யாருமே உற்ற துணையாக இருந்துவிட முடியாது. மனிதனுக்குப் பைத்தியம் பிடிக்கிறதா? அல்லது மனதிற்குப் பைத்தியம் பிடிக்கிறதா என்ற கேள்விக்குக் கேள்வி பிறந்து கேள்வியும் பதிலுமாய் நிறைந்திருக்கும் சூழலை உருவாக்குகிறார். இப்படி ஒவ்வொரு முறையும் நகுலனை மௌனிக்கச் செய்துவிட்டு அவரின் நிழல் மட்டுமே அவரோடு உரையாடிக்கொண்டு இருக்கிறது. உடன் அவரின் பூனையும் வாலாட்டிக்கொண்டிருக்கிறது.

தன்னிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவும் சட்டையைக் கழட்டி மாற்றுவதைப் போலத் தன் உடலிலிருந்து தன்னைக் கழட்டிக்கொண்டு தன் உடலை வெளியிலிருந்து பார்த்து, திரைகளை விலக்கி, வார்த்தைகள் விலகி நிற்க ஒளியும் இருளும் ஓடி விளையாடும் புவியில் வெற்றியும் தோல்வியும் வார்த்தைகள் அன்றே என இருப்பிலிருந்து கனவிற்குள்ளும் கனவிலிருந்து இருப்பிற்குமாய்க் கலந்து மயங்கும் விசாரக் கற்பனையுமாய் அனுபவ மொழியில் எல்லைகளைக் கடந்துகொண்டு தனது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

**“ அலைகளைச் சொல்லப்**

**பிரயோஜனமில்லை**

**கடல் இருக்கிறவரை”**

இவ்வரியை மேலோட்டமாகக் கடந்துவிட முடிவதில்லை. அவரின் கவிதைகளைப் போலக் கதையும் மாயத் தோற்றம் கொண்டவை. தனிமைக்குப் பின்னால் ஒருவித வதையும் பெரும் துக்கமும் விளையாடிக்கொண்டிருக்கிறது.

தர்க்கங்களைக் கட்டுடைக்கவும் தர்க்கங்களைப் புனையவும் நகுலனால் முடிந்திருக்கிறது.

“எங்கே புத்திசாலித்தனமாக இருப்பது அபாயகரமோ அங்கே முட்டாள்தனமாக இருப்பது புத்திசாலித்தனம்,”

“ஒரு கலைஞனின் கெட்டிக்காரத்தனம் அவன் முட்டாளாக இருப்பதில்தான் இருக்கிறது,”

என்பதான விவரணைகளையும் ஆத்மவிசாரங்களையும் தன்னைத் தானே விமர்சித்துக்கொள்ளும் பாங்கும் என நுண்ணிய இழைஇழையாகப் பின்னப்பட்டிருக்கும் நகுலனின் படைப்புலகத்தை நமக்குப் புலப்படச்செய்ய கொஞ்சம் தனிமையும் சிரத்தை கொண்ட அவதானிப்பும் கொண்டால் நம் தனிமைக்குள் சுசிலாக்களும் அவரின் நிழல்களும் பூனைக்குட்டியும் விளையாடிக்கொண்டிருக்கும். ■

கவி : ஆண்டன் பெனி
சித்திரம் : அன்பழகன்

# வெட்ட வெளி



1
கதவுகளே இல்லாத வீட்டில் குடியிருக்கிறவனுக்கு
கதவு பற்றிய ஒரு கனவு வந்தது

2
கனவில் வீட்டிலிருந்து வெளியேறும் இவன்
கதவைச் சாத்திவிட்டு இறங்க
எதிர்ப்பட்டவன்
பூட்டாமல் வருவதைச் சுட்டிக்காட்டினான்
இவனோ தனக்குப் பூட்டு பற்றித் தெரியாது
என்றதும்
கதவு வாங்கும்போதே தருவார்களே என்றான்
அவன்
வாங்கவில்லை என்றும் எப்படியோ கதவு
இங்கு கிடந்தது என்றுரைக்க
சிரித்த அவன் ஆளுக்கொரு சாவி என்ற
நிபந்தனையில்
பூட்டு வாங்கித் தந்தான்
இருவரும் பூட்டிவிட்டுச் சென்றார்கள்

3
அந்தக் கனவு முடியும்வரை அங்கே
அந்த ஊர் தவிர வேறோர் ஊருமில்லை
அந்த வீடு தவிர வேறோர் வீடுமில்லை
அந்த இருவர் தவிர வேறோர் மனிதருமில்லை

4
கனவுக்குபின் நெடுநாட்களாக
கதவு பற்றியும் பூட்டுவது பற்றியும்
நினைவுகளோடிருந்தான் இவன்

5
பூட்டிய கதவுகளே உடைக்கப்பட்டதும்
அடைக்கப்பட்ட வீடுகளே திறக்கப்பட்டதும்
உடைக்கப்பட்டவைகளுக்குப் பதிலாக
இன்னும் வலிமையானவைகள் தேடப்பட்டதும்
இவனுக்குத் தெரிந்தபின்
கதவு பற்றிய கனவுகளின்போது
எச்சரிக்கையாய் எழுந்துவிடுகிறான்.


படைப்பு பெருமையுடன் வழங்கும்
என்னழகே என்னுயிரே
வெளியீடு விரைவில்